வாரப் பதிப்பு விலை சதம் 25

தமிழைத் தமிழ்த்தினமாகத்தில் செய்தி பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்
MILK WHITE SOAP
பிரகாசமாய் சலவை செய்கிறது
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆடி திங்கள் 18-ம் நாள் (2—8—1964) ஞாயிற்றுக்கிழமை றபிஅவ் 23 | இதழ் 10

தமிழ் பேசும் விவசாயிகளை பாதிக்கும் சட்டம்

சமசமாஜ மந்திரிகளும் ஆதரித்து வாக்களித்தனர்

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த விவசாயிகளை வஞ்சிக்கும் மசோதா ஒன்றுக்கு அரசாங்கத்துடன் சேர்ந்து சமசமாஜக் கட்சி வாக்களித்திருக்கிறது. நெற்காணித் திருத்த மசோதாவுக்கு உணவு அமைச்சர் கொண்டு வந்த திருத்தத்துக்கு தமிழ் பேசும் விவசாயிகளைப் பாதிக்கும் திருத்தம் ஒன்றை திரு கே. எம். பி. இராஜரத்தினு கொண்டு வந்தார். இதை ஆதரித்து சமசமாஜக் கட்சி வாக்களித்ததையினுல், சிறுபான்மை மக்கள் பிரச்சனையில் சமசமாஜக் கட்சி தனது கொள்கையினை மாற்றி விட்டதோ, என்ற ஐயப்பாடு ஏற்பட்டுள்ளது.

நெற்காணிச் சட்டத்தில் சில திருத்தங்களை ஏற்படுத்த அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஒரு பிரேரணையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது அத்திருத்தத்துக்கு ஒரு திருத்தத்தை திரு. கே. எம். பி. இராசரத்தினு கொண்டு வந்தார்.

'நெற்காணியில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள விவசாயிகள் இலங்கைப் பிரசைகள் அல்லர்' என்று நிரூபிக்கப்படும்வரை அவர்கள் பிரசைகளாகவே கருதப்பட்டு அக்காணிகளில் தொடர்ந்து வேலை செய்யலாம்' என்ற திருத்தப் பிரேரணையைத்

(9ம்- பக்கம் பார்க்க)

மூதூர் முத்தமிழ்விழாவை பிற்போடவும்

இத்திங்கள் 21, 22, 23-ம் நாள்களில் திருக்கோணமலையில் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற விருப்பதால் இந்நாட்களில் மூதூரில் நடத்தவிருக்கும் முத்தமிழ் விழாவை வேறு நாட்களில் நடத்துமாறுகேட்டுத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை முத்தமிழ் விழாச் செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறது.

இம் முத்தமிழ் விழாவிலே கலந்து உரையாற்றுதற்கு அழைக்கப்பட்ட திரு. கா.

(9 ம்-பக்கம் பார்க்க)

இன்னல்களை ஏற்போம் விடுதலை காண்போம்

தமிழரசு வாலிப முன்னணி செயலாளர் அறிக்கை

தமிழ்பேசுமினத்தின் விடுதலைக்காக நமதுயிர் பறிபோகலாம், உடைமைகள் நாசமாக்கப்படலாம், பந்து மித்திரர்கள் இன்னல்களை ஏற்கவேண்டி நேரிடலாம், இவையனைத்தையும் புன்முறுவலுடன் தாங்கிக்கொள்ளும்சக்தியை அடையவேண்டும். அந்த நிலையை தமிழ்பேசுமினம் என்று பெறுகிறதோ, அன்றே எம்மினம் விரசுதந்திரத்தைப் பெறமுடியும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. க. சின்னத்துரை வாலிப முன்னணி மாநாட்டையொட்டி விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்கூறப்பட்டிருப்பதாவது:

நேர்மை, நிதானம், தீர்க்கதரிசனம், வீரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஆற்றல் அனைத்தும்நிறைந்த பேரவையான தமிழரசுக் கட்சி ஒன்றே ஈழம்வாழ் தமிழ்பேசுமினத்தின் விடுதலையைப் பெற்றுத்தரவல்லது என்று ஈழம்வாழ் தமிழ் பேசுமினம் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகில்

(8ம்- பக்கம் பார்க்க)

பாடசாலைத் தேவைகள்

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ளபாடசாலைகளுக்கு, 1964-65-ம் ஆண்டுக்கான நிதிவருடத்தில், தேவையான புதிய கட்டிடங்கள், தளபாடங்கள், சீர்திருத்தங்கள் பற்றிய முழு விபரங்களை கல்லூரி அதிபர்களும் தலைமை ஆசிரியர்களும் தத்தமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றுகேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இவ்விபரங்கள் அனைத்தும் ஓகஸ்டு மாதம் 5-ம் திகதிக்கு முன்னரேபாராளுமன்ற உறுப்பினர்களிடம் சேர்க்கப்படல் அவசியம்.

தமிழ் பகுதியில் நீர்ப்பாசன திட்டங்களுக்கு போதிய பணம் இல்லை

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இம்முறை ஒதுக்கப்பட்டுள்ள நிதி பாராபட்ச நடவடிக்கையில் ஒன்று என்று கருதப்படுகிறது. காணி அமைச்சு, உணவு அமைச்சு ஆகிய வற்றிலும் நிதி அமைச்சர் கைவைத்திருப்பதாகவும் கூறப்படுவதுடன், அதற்கு விசித்திரமான காரணங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பல குளங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ் பேசும் மக்களுக்குப் பயனளிக்க ஏதுவான நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் போதுமான நிதி உதவி அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. உத்தேச செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள பல குளங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைக் காட்டிலும் சிங்கள மக்களுக்கு உதவக் கூடிய எனைய மாகாணங்களிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களிலும், சிங்கள மக்கள் குடியேறியுள்ள பகுதிகளிலிருக்கும் குளங்கள் செப்பனிடப்படுவதற்காக கணிசமான தொகை உத்தேச செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. பி. டி. சில்வாவின் கீழ் இயங்கும் காணி, நீர்ப்பாசன மின்சார அமைச்சிலும், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் கீழுள்ள கமத் தொழில், உணவு, கூட்டுறவு, அமைச்சிலும் நிதி அமைச்சரின் கவ

(9ம்- பக்கம் பார்க்க)

'எனது பேச்சை தமிழில் மொழி பெயர்க்கக் கூடாது'

துறைமுகக் கூட்டத்தில் அமைச்சர் அனில்

துறைமுகத் தொழிலாளர் மத்தியில் சிங்கள மொழியில் உரை நிகழ்த்திய போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்காவின் பேச்சை மொழி பெயர்ப்பதற்கு ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர் முன் வந்த போது, 'தனது பேச்சு தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்படக் கூடாது' என்று கூறி அமைச்சர் மறுத்துவிட்டாரென்று அறியப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பு துறைமுகத் தொழிலாளர் மத்தியில் போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்கா உரை நிகழ்த்தியது அறிந்ததே. அவர் தனது பேச்சை அரசகரும மொழி

(9-ம் பக்கம் பார்க்க)

இறைவரிப் பகுதியுடன் தமிழில் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணத்திலுள்ள உள்நாட்டு இறைவரிக் கிளைக் காரியாலயத்தில் கடமையாற்றும் சகலரும் தமிழ் பேசும் ஊழியர்கள் என்று அறியப்படுகிறது. ஆனுல் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பொது மக்கள் இவர்களுடன் இன்னும் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொண்டு வருகிறார்களாம்.

முற்றிலும் தமிழ் ஊழியர்களைக் கொண்ட இப் பகுதியில் தமிழ் மொழியிலேயே நிர்வாகத்தை நடாத்த சாத்தியக் கூறுகள் இருந்தும், பொது மக்கள் போதுமான அளவு ஒத்துழைப்பு நல்கத் தவறுகிறார்கள் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவர் நமது நிருபரிடம் கூறினுர்.

கொழும்பு நகரில் வாழும் பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களநிலையத்துடன் தமிழ் மொழியிலேயே தொடர்பு வைத்துள்ளார்கள். தலைநகரில் வாழும் தமிழ்பேசும் மக்களின் தமிழ்ப்பற்று, தமிழ்மொழியில் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற்கு மேம்பட்ட சக்தி என்னை எழுதத் தூண்டியது

சென்னை எழுத்தாளர் சங்கம் நடாத்திய குழந்தைகளுக்கான கவிதைப் போட்டியிலே முதலாவது பரிசான தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டவர் இலங்கை எழுத்தாளரான கவிஞர் திமிலைத்துமிலன் அவர்கள். இந்தியப் பத்திரிகைகள் பலவற்றுள் இவருடைய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. 'நீராமகளிர்', 'கொய்யாக்கனிகள்' ஆகிய கவிதை நூல்களை இயற்றியிருக்கிறார். மட்டக்களப்பு திமிலை தீவு என்ற வயல் சூழ் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இக்கவிஞர் ஒரு தமிழ் ஆசிரியர். 'மாலதி' என்ற புனைப்பெயரில் சிறு கதைகளையும் எழுதி வருகிறார். சிறந்த பல நாடகங்களை எழுதிப் பரிசில்கள் பெற்றிருப்பதுடன் திமிலை நவீன கலாமன்றத்தையும் இயக்கி வருகிறார்.

அப்போது நான் மாணவன். மத்திய கல்லூரி ஜே.எஸ்.ஸி. வகுப்பு. பாடம் அட்சர கணிதம்.

ஆசிரியர் உள்ளே நுழைந்தார். பாடம் முடியும்வரை நெருப்பை மடியில் கட்டிக் கொண்டிருப்பதுபோல அந்தரப்படும் கட்டைகளிலே அடியேனும் ஒருவன்.

அன்று நடந்தது

உவில்சனின் ஆங்கிலக் குரல் எனது பெயரை ஏளனத்தோடு உச்சரித்தது.

'என்ன நீர் பெரிய எழுத்தாளராமே?'

'இல்லையே...'

'இல்லையா? என் கண்ணாலேயே பார்த்தேன். எங்கள் கழகத்தில் உமது கதைகள் தான் தொடர்ந்து வருகிறதாம்...'

'இல்லையே, ஒன்றிரண்டு தான்...'

'பொல்லாத ஆள் போல இருக்கிறீரே. அவற்றிலே ஒரு கதை இப்போது சொல்லும்.....'

கதை சொல்லவா? அட, கடவுளே!...நான் கையைப் பிசைந்தேன்.

எப்படிச் சொல்வது? எதைச் சொல்வது?

'கண்ணைக் கட்டிக் குரைக்காட்டிலே விட்டதுபோல... எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டோமே!

உதடோடு உதடு ஒட்டிக் கொண்டது போல இருந்தது.

ஆசிரியரின் குரல் கர்ண கடூரமாக ஒலித்தது. பீதியினால் ஒட்டியிருந்த உதடுகள் பிரிந்து கொண்டன. ஏதோ தொடர்ந்து பேசினேன். அது என்ன கதை? கேட்டவர்களுக்குப் புரிந்ததோ என்னவோ, நிச்சயமாக எனக்குப் புரியவில்லை.

'இது உமது சொந்தக் கதைதானா?'

'ஆம்'.....

'இதுவும் எங்கள் கழகத்திலே வந்ததா?'

'இல்லை'.

ஆசிரியரின் உற்சாகம் கரை கடந்தது. காரணம் எனக்கு அப்போது புரியவில்லை. ஆனால் அது எனது கதையினால் ஆனதல்ல என்பதுவும், என்னை அவர் 'பத்தி'

திமிலைத்துமிலன்

யிலே எடுக்கிறார் என்பதுவும் தெள்ளத் தெளிவானதால் உள்ளம் வேதனையால் அழுதது. எனது கண்கள் பனித்தன. குனிந்து நின்றிருந்தேன்.

'உமது பெயரென்ன?' அவர் உற்சாகத்தோடு நகைப்புக்கிடையே கேட்டார். இவருக்கென்ன பைத்தியமா? எனது பெயரைச் சொல்லித்தானே ஏற்கனவே அழைத்தார்!!

பெயர் புரிந்த குற்றம்

எனக்கு ஆத்திரமாக வந்தது. மீண்டும் அவர் பெயரைக் கேட்டார். எனது மௌனம் கண்டிப்பை அவரது குரலிலே விதைத்தது. அந்த வேதனையால் மெதுவாகப் பெயரைக் கூறினேன். உரக்கக் கூறும்படி கட்டளை மீண்டும் மீண்டும் வற்புறுத்தியது. பொறுமை இழந்தவனாக அந்த வகுப்பறையே அதிரும்படி கத்தினேன்.

...'கிருஷ்ணபிள்ளை...'

எதிரேயிருந்த அடுத்த வகுப்பறையைக் குறிப்பாகப் பார்த்துக் கொண்டே எழுந்தார் ஆசிரியர். மாணவர்களும் பார்த்தார்கள். நானும் பார்த்தேன். அந்த ஆசிரியை குனிந்தபடியே வகுப்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தாள். அவளது பெயருக்கும் எனது பெயருக்கும் இருந்த ஒரேயொரு வித்தியாசம் 'மிஸ்' என்ற இரண்டே எழுத்துக்கள் தாம்.

மணமாகாத ஆசிரியரின் உள்ளக் கிளர்ச்சி ஒரு மாணவனைப் பாதிக்கும் என்பதை அந்த ஆசிரியர் உணராதது விந்தையல்ல. எனது உள்ளப் போக்கை அந்த நிகழ்ச்சி பாதித்திராவிட்டால், மிக மிகப் பீற்றியே நான் சிறுகதைத் துறையில் கைவைத்திருக்க நேர்ந்திராது.

இந்த நிகழ்ச்சியால் அதன் பின் எழுதவே பயமாக—வெட்கமாகவிருந்தது. இதய உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு புழுங்கினேன். காலம் பறந்தது.

அந்த நாளில் இதயத்தடியில் ஆறாவம் ஊறும். ஆனால் இதயத்தில் அன்று பட்ட புண் அதனை அமுக்கி மறைக்கும்.

நிந்தை செய்த கதை இனி
வேண்டேன்
நீண்ட சொந்தப் பொருளும்
வேண்டேன்.
உந்தும் ஆவலை எத்தனை
நாள்தான்
உள்ளே உள்ளே ஒழித்திடல்
கூடும்?
தந்தைதெய்வியப்பாடல்கள்பாடி
காவி பூசை நடத்திடும்போதும்
சொந்த ஊரவர் கூத்திடும்
போதும்
ஆடுபோடும் களத்திலுமாங்கே
இனிய பாடல பலபல கேட்பேன்
என்னுள் அந்த இசையில்
லயிப்பேன்
அன்னைகூட என் சின்ன, வயதில்
'ஆக்கான் டிக்கதை'
சொன்னதை ஓர்வேன்
பின்னும் கோயிற் பெருவிழா
நன்னில்
'பிம்பிம்' என்ற உடுக்கையி
னோடு
அன்னார் கண்ணனின்
காவியம் பாட
அள்ளி அள்ளி நான்
என்னுள் நிரைப்பேன்

எங்கள் வீட்டின் வெளி மண்டபம் தந்தையின் குரலால் எப்போதும் கலகலப்புற்று மிளிரும். மகிழ்ச்சி பொங்கும் நேரங்களிலே மணி மணியான கருத்துக்கள் அங்கு உதிரும்.

வைத்தியத்துக்கு வந்தவரோடே
வார்த்தை யாடட மாண்வு
மாகும்
கைத்தலத் தொளிர் வெள்ளி
வட்டம் போல்
கன்னி வெண்மதி புன்னகை
செய்வாள்
மொய்த்த வண்புனை 'ஞொய்'
என ஓட்டி
மோதும் தென்றலும்
முல்லையும் பேசச்
வைத்த சேலையி லெல்லிப்
பூவினை
எந்தை
[illegible]
இசைப்பார்.

வழி ஏது?

[illegible] பண்ணின் துள்ளும் [illegible]யிலும். சிந்து பள்ளு, கும்மி; இவற்றின் வித்தை அமைப்பிலும் எனது சிந்தை லயித்து மயங்கும். இந்த இனிய கவிகளின் பிறப்பிடமாக என்னுள்ளேயே ஒரு கோயில் அமைத்து விடப்பதாக உணர்வேன்.

என்னுள்ளேயே பெருக்கெடுக்கும் இந்த உணர்ச்சிகளை யாராவது உணர்கிறார்களா? உள்ளே உள்ளே ததும்பி வழியும் அவற்றைப் பிறரும் அறிந்து இன்புற வழியில்லையா?

'சாளியுண்டு கபாடமு
முண்டு தக்கபொற்சுவை
விட்டிலு முண்டு
கவிஎன்ன;. கரங்கள்தா
விலை! கொள்ளை ஆசை
கள் எத்தனை-உள்ளே!'

இந்தவாறு கரங்களற்ற ஒரு மனனுக்கு என்னை உரை முடிந்தது. விமோசனத்துக்கு வழிதான் தெரியவில்லை.

ஆரம்ப எழுத்தாளர் நிலை

எழுத்தாளராகிவிட இளைஞர் பலர் துடிதுடிக்கிறார்கள். கழுத்தறுக்கும் சிறு கதையிலே கைவைக்கும் அவர்களுக்கு பத்திரிகைகள் கானல் நீரைக் காட்டுகின்றன. சிறு கதை மன்னர்களாகத் தங்களையே விளம்பித்துக் கொள்ளும் 'பெரிய புள்ளி'களைப்போய்ப் பிடிக்கிறார்கள்!

வைக்கோல் இழுத்த வழியாக இந்த வால் பிடிக்கும் இளைஞர் கூட்டம் வளர்வதுகண்டேன். வேல் பிடித்த மறக்குலத்தின் விதி இதுவா? வெறும் பதர்கள் தமது கால் பிடித்து நிற்பதற்கு

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL — ஆனந்தா — THE SEA STREET COLOMBO-11

நீர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, மூட்டுக்களில் வலிகள், அஜீரணம், பலியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் நீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்கு பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நீர்: 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் பூங்கா

வாழ்வு வந்தது!

—காசி. ஆனந்தன்—

விடுதலை முரசம் ஒலித்தது மக்காள்!
வெள்ளி முளைத்தது புறப்படுக!
அடிமை விலங்கை உடைத்தன கைகள்!
ஆண்டது தமிழர் சமுதாயம்!
கொடுமைகள் இல்லை! தமிழக மறவன்
கொண்டு வருகிறான் புதுவாழ்வு!
எடடா யாழை! எழுப்புக பாடல்!
இன்று பிறந்தது பொற்காலம்!

நமக்கொரு நாடு நமக்கோர் ஆட்சி
நமக்கொரு தானை நாம்பெற்றோம்!
நமக்கினி இல்லை அயலவர் தொல்லை;
நமக்கினி நாமே மன்னர்களாம்!
அமுக்கிய சட்டம் ஆடி விழுந்தது!
விழுந்தது பகைவர் அடக்குமுறை!
சுமக்க வளர்ந்தன பெருமைகள் கோடி!
சுமப்போம் வருக தாய்க்குலமே!

கட்டுக கோட்டை! காவல் எழுப்புக!
காற்றில் உயர்த்துக தமிழர் கொடி!
வெட்டுக நரிகள் ஓட்டுற வாடல்!
விழிப்பொடு வாழ்க! உரம்பெறுக!
எட்டுத் திசைகளும் அனுப்புக தூது!
எங்கும் முழங்குக நமது புகழ்!
கொட்டுக முரசே! கொட்டுக!! தமிழர்
கொள்கை மலர்ந்தது கொட்டுகவே!!!

வெந்தீயை அவியச் செய்வோம்

—(எஸ். பி. ஏ. பெர்னாண்டோ)—

இன்னுமா இளம்சேரா இழியர் உள்ளார்
இடும்பிச்சை பெறிதென்று வருடு கின்றார்
நன்றதா தமிழ்த்தாயின் புதல்வர் நாமே
நலிந்து அழ விட்டுநலம் நாடும் புல்லர்
தின்றுமா அன்னைதரும் குறையாத தீம்பால்
தியவரின் குடலறுக்கும் செய்கை இன்று
மன்றுசெய் நீர்வேற்று வறுமை ஏற்று
மானமுள்ள தமிழரசு வரைந்து யாப்போம்.

பொறுத்ததுடன் பொறுத்துப்பார்ப்போம் புரியகூட்டுங்
"புகழரசு" வழங்கிடுமா நீதி என்று
அறுத்தெறிந்தால் வாக்குறுதி அடிமை யாக்கும்
அற்பகுண மென்றறிந்து அடுத்த வேலை
மறுத்திடுவோம் நாம்விரும்பாச் சட்டம் ஆட்சி
மமதையைநீ வைத்துக்கொள் உள்ளில் என்று
உறுத்திடுவோம் உரிமைபெற வழியும் காண்போம்
உள்ளெரியும் வெந்தியை அவியச் செய்வோம்.

நடந்திடுமா நம்மம்மை எண்ணம் நான்கைத்(து)
நடந்திட்டால் தலைமுறைகள் நம்மின் தோன்றல்
நடந்திடுவார் நலிந்தமொழி மாள ராக
நமக்கென்ன என்றுமொழிப் பற்று நீக்கி
நடந்திடுவார் இதைநினைக்க நடுங்கு துள்ளம்
நற்றமிழைப் பேணிடநாம் நாட்டில் நம்மின்
நடந்திடுவோம் ஆட்சிபெற நாடிச் சேர்வோம்
நமரெல்லாம் ஒன்றாக நலம் சுவைப்போம்.

க. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி.

கே: ஆங்கிலத் தினசரி ஒன்று எல்லாத் தெரிந்ததுபோன்று ஊளையிடுவதோடு தமிழரசுக்கட்சிக்குள் இருக்கும் சிறு சச்சரவுகளைப் பெரிது படுத்தி எழுதுகின்றதே, காரணமென்ன?

ப: ஆங்கிலத் தினசரி என்ன, தமிழ் தினசரிகள் உட்பட எல்லாத் தினசரிகளும் அம்மாதிரியே! சந்தர்ப்பம் கிடைக்கும் போது த. அ. கட்சியை கண்மூடித்தனமாகத் தாக்க இப்பத்திரிகைகள் தயங்குவதில்லை. தமிழ் பேசும் மக்களிடையே பத்திரிகைகளை விற்பதற்காக கட்சியை ஆதரிப்பதைப் போல பாசாங்கு செய்யவும் அவைகளுக்குத் தெரியும்.

ஃ

ந. தமிழேந்தி, திக்கம்.

கே: எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குக் குடியரசு அபேட்சகராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் செனட்டர் கோல்ட்வோட்டரைப் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?

ப: பெயர்தான் 'தங்க நீரே' (கோல்ட் வோட்டர்) தவிர, ஆசாமி அபாயகரமானவராம். அவர் ஜனாதிபதியானால் நீக்ரோ இனத்தை ஒழித்துக் கட்டுவதுடன், உலக யுத்தத்தையும் ஆரம்பித்துவிடுவாராம்.

ஃ

ர. திருமலையான்,
கொழும்பு

கே: இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதி மன்னார், மட்டக்களப்பு, திருமலை முதலிய இடங்களில் தேர்ச்சியும், பட்டங்களும் பெற்ற பாடகர்களிருந்தும், இவர்களைத் தட்டிக்கழித்து விடுகிறதே ஏன்?

ப: தமிழ்ப்பகுதியில் மட்டுமென்ன? வானொலியில் எல்லாப் பகுதிகளிலுமே பாரபட்சம் காட்டப்படுவதாக ஒரு ஸதந்தி அடிபடுகிறது.

ஃ

ஆ. பழனிமுத்து,
எட்டியாந்தோட்டை

கே: குயுக்தியாரே, எங்கள் பகுதியில் ஒருவர் மரணமடைந்தார். நான் உடனே அந்த வீட்டுக்குச் சென்று என் அனுதாபத்தைத்தெரிவித்தேன். ஆனால் அப்போது தந்தையையிழந்த மகன் என்னை என் வீட்டுக்குப் போகும்படி கூறிவிட்டார். எதற்காக?

ப: அவர் சொன்னது சரியே. இல்லையேல் நீரும் கடுகாட்டுக்கல்லவா (பிரேதத்துடன்) போக வேண்டியதிலை ஏற்பட்டிருக்கும்.

ஃ

மு. சுந்தையா,
வடலியடைப்பு

கே: தமிழரசுக் கட்சியில் சேர்ந்து போட்டியிட்டு வென்றவர்கள், தாங்கள் கட்சியிலின்றுவிலகும்போது பாராளுமன்றத்தையும் துறந்து பின்பு தேர்தலில் போட்டியிட்டுப் பார்க்க வேண்டாமா? அப்போதுதானே மக்களின் தீர்ப்புத் தெரியும். இதற்கு அவர்கள் தயங்குவது ஏன்?

ப: மீண்டும் போட்டியிட்டால் தோல்வி நிச்சயம் என்பது அவர்களுக்குத் தெரியும். தோல்வி நிச்சயமென்றால் அவர்கள் போட்டியிடத் தேவையில்லையே! போட்டியிடத்தேவையில்லையென்றால் பாராளுமன்றத்தைத் துறக்கவும் தேவையில்லையே! எப்படி என் (விதண்டா) வாதம்?

ஞானசம்பந்தன்,
இணுவில்

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். இன்னொருவன் அதற்குள் கரடி நுழைகிறானே?

ப: 'வில்லன்' இல்லையேல் (காதல்) நாடகம் ரசிக்காது.

ஃ

க. மாணிக்கம்,
உனுக்கொல்லை தோட்டம்

கே: பாரதப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி இலங்கை-இந்தியப் பிரச்சினையைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கக் கூடும்?

ப: இது இலங்கை—இந்தியப் பிரச்சினையல்ல. மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினை. எனவே பிரச்சினைக்கான தீர்வு அவர்கள் கையிலிருக்கிறதேயன்றிப் பாரதப் பிரதமர் கையிலில்லை.

ஃ

பஷ்மி, கம்பளை

கே: என் நண்பன் ஒருத்தியை 2 வருடமாகக் காதலித்து வருகிறான். அவளும் அவனை மனமார விரும்புகிறாள். ஆனால் அவன் அவளுடைய சிநேகிதி யாருடனாவது பேசிவிட்டால், அவளைச் சந்தேகக் கண் கொண்டு நோக்குகிறான். ஏன் இவன் இப்படி நடந்து கொள்கிறான்?

ப: ஆண்களின் உள்ளத்தை அறிந்து கொண்டவள் உங்கள் காதலி. சிநேகிதிகளுடன் நடத்தும் பேச்சு எந்த அளவுக்குச் செல்லுமோ என்று அவன் அஞ்சுவது சரியே! ஆனால் சந்தேகம் சந்தேகத்தையே வளர்க்கும்.

எம். எல். எஸ். ஹமீட்,
அக்குறணை

கே: வாழ்க்கையில் நிம்மதியுடன் வாழ என்ன வேண்டும்?

ப: நிராசை வேண்டும். ஆசையை அடியோடு கைவிட்டால் தான் முழு நிம்மதி ஏற்படும்.

ஃ

தருமலிங்கம்,
கொழும்புத்துறை

கே: கன்னிப் பெண்கள் சிலர் கூலிங் கிளாஸ் அணியும் கறுப்பு நிறமுடைய ஆண்களைத்தான் விவாகம் செய்வோம் என்று அடம்பிடிக்கிறார்களே! இதன் மர்மம் என்ன?

ப: அந்தப்பெண்கள் புத்திசாலிகள். கறுப்புக் கண்ணாடியால் பார்ப்பவர்களுக்குப் பெண்ணின் உடலழகிலுள்ள குறைபாடுகள் சரிவரத் தெரியாது. ஏன், பெண் நிறம்கூட கறுப்பாகவேதெரியும். அவள் சிவந்த மேனியுடையவளோ-கறுப்புக் கண்ணாடியால் பார்ப்பதால்தான் கறுப்பாகத் தெரிகிறாள்

உபாயம் என்ன?

—மு. சடாட்சரன்—

பூஞ்சோலைக்குள் அமர்ந்து
புதியதொரு காவியத்தைத் தொடங்கி; ஆசை
ஊஞ்சலிலே ஆட்டியெனை
உவகையெனும் பொய்கையுளே நீந்த வைத்து,
நீஞ்சுவைகள் நந்தத்தான்
தேகமெலாம் இன்பரசம் தேக்குதற்கு
வாஞ்சையுடன் துணைபுரிந்த
வட்டநிலா! கொஞ்சம் நில்!! வசனம் சொல்க!!!

உன்தலைவர் தருவிருந்தால்
உளம்மலர, வெண்ணிலவே உன்னை ஈன்றாள்
அன்புடனே இசைந்ததனால்
ஆகாய வீதியிலே அலைந் தலைந்து
இன்புறவே தேடுகிறாய்!
என்நிலையோ மிகமோசம் இளைத்துப் போனேன்
என்னிதய வீட்டினிலே
இருளகற்றும் தெய்வத்தை இன்னும் காணேன்!

"பண்ணொழுகும் வண்ணமுகம்
பங்கயம்போல் மென்னுடம்பு பவளக் கால்கள்,
முன்போலே விளங்காது,
முன்னின்றும் மொழுகாது, முயற்சி யாவும்,
பின்போட்டு வந்திதயம்
பிழிகின்றாய் தவமலரே! பீடை என்ன?"
என்றன்னை வினவுங்கால்,
ஏதுரைத்துத் தப்புவது வழியொன்றேது!

உனக்கிந்த நிலைவந்தும்,
ஒளிநிலவே! உயிர்பெற்ற உபாயம் என்ன?
எனக்குமட்டும் கூறிவிடின்
எவருக்கும் நானுரையேன், என்று மென்னுள்,
நினதுருவம் அழியாது!
நெய்குழலிற் பூச்சூடி நிறைவாழ் வெய்த;
மனக்கோட்டை யுட்புகுந்து
மறுமலர்ச்சி நான்காண மார்க்கம் சொல்க!

ஸ்லை ஸுசயும் முறை ஆகியவற்றுக் கேற்ப கருத்துகளும் வேறுபடும். அழ முடியாதால் சிரித்தால் அல்லது கிழவர்களைக் கண்டு சிரிக்க முடியாததால் வாலிபர்களைக் கண்டு சிரித்தால் அதில் கருத்தே கிடையாது.

ஃ

க. கனகமணி,
மண்கும்மான்

கே: இலங்கையிலே 'பொலிடோல்' அருந்தித் தற்கொலை புரிந்தவர்களின் எண்ணிக்கையை உங்களால் கூறமுடியுமா?

ப: குறிப்பாக காதலர்களின் மேலான நன்மையைக் கருதி அந்தப் புள்ளிவிவரங்களை வெளியிட நான் விரும்பவில்லை. பெருகிவரும் சனத்தொகையைக்குறைக்க "பொலிடோல்" உதவுகிறது என்பது மட்டும் என்னவோ உண்மை.

ஃ

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை

கே: 'தனி நாடு, (திராவிட நாடு) என்ற கொம்பை விட்டுவிட்டு 'இந்தி எதிர்ப்பு' என்ற வாலைப் பிடிப்பதால் பயன் ஒன்றுமில்லை. வடவருக்கு அடிமையாக இருக்க விரும்பும் நம்மவர்கள், அவர்களின் இந்தி மொழி தென்னாட்டில் நுழைவதைத் தடுக்க முடியாது என்ற என் எண்ணம் சரிதானே குயுக்தியாரே?

ப: திடீரென 'தனி நாடு' பெற போராட்டம் நடத்த முடியாது. ஒரு போராட்டத் தொடரின் இறுதிக் கட்டமே தனி நாடு போராட்டமாக இருக்க முடியும். இதற்கிடையே அந்தத் தொடரில் பல போராட்டக் கட்டங்கள் அடங்கியுள்ளன. அவற்றையெல்லாம் கடந்து சென்றால்தான் இறுதிப் போராட்டத்துக்குச் செல்ல முடியும். தொடரிலுள்ள ஒரு கட்டமாக இந்தி எதிர்ப்பு இருக்க முடியுமல்லவா? விடுதலைப் போராட்டமொன்றினைப் படிப்படியாகவே வளர்த்துச் செல்ல முடியுமென்பதை மறந்து விடாதீர்கள்.

ஃ

இ. தயாநிதி, ஆனைக்கோட்டை,

கே: பர்மாத் தமிழர்களுக்கு நடந்த மாதிரி இலங்கைத் தமிழருக்கும் நடந்தால்?

ப: எப்படி நடக்கும்? இந்தியா கப்பல் அனுப்பினாலும் கூட இங்குள்ள தமிழர்கள் குடிபெயரத் தயாரில்லையே!

ஃ

கட்டுடையூரான், கட்டுடை

கே: திருமதி சிறிமாவோ தன் மகளையும் அழைத்துக்கொண்டல்லவா சாம்ராச்சிய பிரதமர் மகா நாட்டுக்கு சென்றார்? மகள் சென்றது யாருடைய பணத்தில்?

ப: பிரதமரின் சொந்த பணத்திலாம். இவ்விடயத்தில் அவர் கவனமாகவே நடந்துள்ளார்.

கே: சிம்மாசனப் பிரசங்கத்தில் திரு. தொண்டமான் பிரஜா, கல்வி உரிமைகள் பற்றிப் பேசாததின் மர்மமென்ன?

ப: பேசினாலும் அரசாங்கக் கட்சியின் கொள்கையை ஆதரித்தல்லவா பேச வேண்டும்? ஆகவே "மௌனம் சர்வார்த்த சாதனம்".

ஃ

க. ஆறுமுகம்,
மீம்பட்டி தோட்டம்

கே: மனிதர்களைக் கண்டால் குரங்கு இல்லாத சேட்டைகளையெல்லாம் செய்கிறதே ஏன்?

ப: தன் இனத்தைச்சேர்ந்தவர்களைக் கண்டால் உள்ளத்தில் களிப்பு ஏற்படுவது இயற்கையே.

ஃ

சி. மெய்யானந்தன்,
மயிலிட்டி

கே: எப்போது முதற்காதல் தோல்வியில் முடிகின்றது என ஓர் மேல் நாட்டுக் கவி கூறியுள்ளார். அப்படியாயின், இரண்டாம் காதல் உண்மைக் காதல் எனக் கூறலாமா?

ப: இல்லை! இரண்டாம் காதலில்தான் நடிப்பு அதிகமிருக்கும். முதற்காதலில் பெற்ற அனுபவங்கள் இந்த நடிப்புக்கு உதவுகின்றன.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

மத்திய வங்கி ஆண்டறிக்கை

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டரவுகள் முதலியவற்றின் ஆண்டறிக்கைகள் மும்மொழிகளிலும் அச்சிடப்படுவது வழக்கம். ஆனால் இப்பொழுது தமிழில் அச்சிடப்படுவது வெகுவாகக் குறைந்து வருகிறது.

1962—63க்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வெளியாகியிருக்கிறது. இம்முறை ஆக 250 பிரதிகளே தமிழில் அச்சிடப்படுகிறது. ஏன் குறைக்கப்படுகிறது என்று விசாரணை செய்யப்பட்டபோது, தமிழ் பிரதிகளை வேண்டி விண்ணப்பிப்போர் தொகை மிகவும் குறைவு என்று கூறப்பட்டது.

மத்திய வங்கியின் ஆண்டறிக்கை குறிப்பாக பொருளாதார மாணவர்களுக்கு இன்றியமையாதது. மற்றும் ஆசிரியர்களுக்கும் பொருளாதாரத் துறையில் ஈடுபாடுடையோருக்கும் இவை அவசியமானவை. இலவசமாக வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கைகளை, செயலாளர், மத்திய வங்கி, கொழும்பு என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகளில் சித்தி பெற!

பரீட்சையில் சித்தி அடையவும், பாடங்கள் மனதில் பதியவும், சபைக்கோழைத்தனம் அகன்று திறமையான பேச்சாளராக திகழவும் சிறந்த வழி ஒன்று இருக்கிறது. வேண்டிய காரணங்களுக்கு யந்திரமந்திர வேலைகள் செய்துதரமுடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. விபரங்களுக்கு எழுதவும்.

கவர்மெண்ட் ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கண்டி ரோடு,
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடையேந்தும் கைகளாலும்
உரிமைப் போர் நடத்தலாம்

மலையக மாதருக்கு சமவாய்ப்பு தருக!

— கொட்டகலை கரு. அருணமொழி —

மலை நாடு

கூடையேந்தும் கரங்களாலும் கோலேந்தியுள்ள கொற்றத்தினருக்குச் சவால் விட்டு உரிமைப் போர் தொடுக்க முடியும். கண்ணை இமை காப்பது போல அவர்களால் கழகத்தையும் காக்க முடியும். ஆகவே இலங்கைத் தொழிலாளர் கழக இயக்கத்தில் மலைநாட்டுத் தாய்மார்களுக்குப் பெரும் பங்கினை அளிக்க வேண்டியது கழகத்தின் தவிர்க்க முடியாத கடமை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இன்று மலைநாட்டின் எந்த முனையை நோக்கினாலும் புதுமையும், மறுமலர்ச்சியும் பூத்துக் குலுங்குகின்றது. சமுதாயத்தையும், அரசியலையும் தெரியாது தவித்து நின்ற மலைநாட்டு மக்கள் குறிஞ்சி மன்றத்திலே நடமாடும் பல்கலைக் கழகமாக கடந்த ஓராண்டிற்கு மேலாகப் பணியாற்றிவரும் 'இலங்கைத் தொழிலாளர் கழகத்தின்' மூலம் அரசியல் விளக்கங்களையும் தொழிற் சங்கச் சட்ட விதிகளையும் ஓரளவு தெரிந்து வைத்திருக்கின்றனர்.

இள நெஞ்சங்கள் மகிழ்கின்றன

இதைக் கண்டு இவ்வளவு காலமும் மலைநாட்டு மக்களை ஏமாற்றி வந்த தொழிற் சங்கங்களெல்லாம் இன்று நடுங்குகின்றன. இதைக் காண இலட்சியத்தால் ஊறிப் போய்விட்ட இளம் நெஞ்சங்கள் மகிழ்வெய்துகின்றன. எதிர்ப்புக்களிடையே நமது கழகம் வளருகிறது என்பதை எண்ணும்பொழுதும், இதயத்தில் வடு படிக்கும் இழிவான சொற்களை எம்மை நோக்கி எறியீட்டிகளைப் போன்று எத்தர்கள் வீசியும் எமது கழகம் வளருகிறது. என்பதை எண்ணும் போதும் இதயம் பண் பாடுகிறது; கண் கவி பாடுகிறது.

இப்படிப்பட்ட மகிழ்ச்சிகரமான வேளையில்தான் ஈழநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைக்குரலித்திடும் இயக்கமான 'தமிழரசுக் கட்சியின்' மாநாடு திருமலையிலும், அதைத் தொடர்ந்து தேயிலை, றப்பர் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை முரசறைந்து பரணி பாடிடும் இ. தொ. கழகத்தின் மாநாடு அட்டனிலும் நடைபெறவிருப்பதாக இனிப்பான செய்தி எங்கள் செவிகளில் எட்டியுள்ளது.

மங்கையர் சார்பில் ஓர் வேண்டுகோள்

இந்தக் காலக் கட்டத்தில் மலைநாட்டு மங்கையர்களின் சார்பில் இ. தொ. கழகத்தைச் சார்ந்த முக்கியத்துவர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுகின்றேன்.

ஆமைகளாகவும், அடிமைகளாகவும், பெண்ணினம் வாழ்ந்தது போதும். அவர்களும் ஆண்களைப்போல் சமுதாயத்தொண்டுகள் புரியவும், கலை, கலாச்சார, பண்பாட்டினை வளர்க்கவும் ஆவன வாய்ப்பினை இ. தொ. கழகம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இத்துணை காலமாக மலைநாட்டில் இயங்கிவந்த இயக்கங்களெல்லாம் பெண்களுக்குச் சொடுக்க வேண்டிய இடத்திலைக் சொடுக்க வில்லை. காரணம்.....தாய்க் குலம் முன்னேறி விட்டால் தாங்கள் நினைத்த படி தான்தோன்றித்தனமாகத் தருக்கர்களாக நடமாட முடியாது என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் ஊறிப் போய் இருந்தமையே!

ஆனால் இன்று இயங்கிவரும் இ. தொ. கழகம் அப்படிப்பட்டதல்ல. இலட்சியத்தாலும், இரத்தத்தாலும், எண்ணற்ற தியாகங்களாலும் வளர்ந்த ஈழநாட்டுத் தமிழர்களின் உரிமை இயக்கமான தமிழரசுக்கட்சியின் தொழிற்சங்கமாகும்.

தாய்மாருக்கு உரிய இடம் வேண்டும்

எனவே, பல கிளைகளைப் படரவிட்டு ஆல் நிழல் தருவதைப் போன்றது 'தமிழ் அரசுக் கட்சியின் தொழிற் சங்க இயக்கம். இன்று பல தொல்லைகளால் இடர்படும் மலைநாட்டுத் தமிழர்களுக்கு அதுவும் பட்ட மரத்தில் பசுமையை எதிர்பார்க்கும் அறியாத் தாய்மார்களுக்குப் பசுமையைத் தரவல்லது இ. தொ. கழகமே இந்த விளக்கத்தைத் தாய்மார்களிடம் எடுத்தியம்பிடத் தாய்மார்களால்தான் முடியும். இதை இ. தொ. கழகத்தின் முக்கியத்துவர்கள் உணர்ந்து பெண்களுக்குப் பெரும் பங்கினை அளிக்க வேண்டும்.

இதன் மூலம் கூடையேந்தும் கரங்களாலும் கோலேந்தி இருக்கும் கொற்றத்தினருக்குச் சவால்விட்டு உரிமைப் போர் தொடுக்க முடியும். கண்ணை இமை காப்பது போல் கழகத்தையும் காக்க முடியும் தாய்மார்களால். விடிவெள்ளி முளைத்துவிட்டது. அதன் ஒளியிலே தாய்க்குலம் செயல்பட விரைந்து விட்டதென மகிழ்வோம்!

'இலங்கைத் தொழிலாளர் கழகம் ஊழியர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பதுளை அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. வீ. சண்முகவேல் அவர்கள் கழகத்தின் சேவையிலிருந்து 1-6-64ல் முதல் விலக்கப்பட்டுள்ளார். அவரின் இடத்தில் கழகத்தின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. ரெ. ம. ராமையா கடமையாற்றுகிறார்.

கழகத்தின் நுவரெலியா அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. மு சி. துரைசாமி அவர்கள் இம்மாதம் 10ந் திகதி முதல் விலக்கப்பட்டுள்ளார். அவரின் இடத்தில் கழகத்தின் துணை மாவட்டப் பிரதிநிதிகளில் ஒருவரான திரு. சோ. சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

விலக்கப்பட்டவர்களுடன் எதுவித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாமென கழக உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

எவராவது கழக சம்பந்தமான தொடர்பு இவர்களுடன் வைத்துக் கொண்டால் அதற்கு கழகம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாதென்பதை அறிவித்துக் கொள்கின்றோம்.

தமிழரசுக் கட்சியின்
மூன்று அம்சத் திட்டம்
இலங்கையிலும் ஒரு
கட்டாங்கா உருவாகலாம்

"இதோ தமிழரசுக் கட்சியின் திட்டம்:- கூட்டரசாங்கத்தால் மாவட்டசபை கிடைக்குமென எதிர்பார்க்கும் தமிழரசுக்கட்சி மாவட்டசபை கிடைத்தவுடன் வட, கிழக்கு மாகாணங்களில் வதியும் சிங்களவர்களை வெளியேற்றும்.

அடுத்து, கட்டாங்காவில் சொய்பே செய்ததைப்போல இந்த அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென வட, கிழக்கு மாகாணங்களில் ஒரு வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானம் செய்யும்.

மூன்றாவதாக, கட்சி செய்யவிருப்பது சென்னை மாகாணத்துடன் இவ்விரு மாகாணங்களையும் இணைப்பதுதான்." இவ்வாறு 25-7-64-ந் திகதி லங்காதீப அரசியல் நிருபர் கூறுகிறார்.

'தமிழ்மொழியை நாடு முழுவதிலும் அரசகரும மொழியாக்குவதைக் காட்டிலும் மாவட்டசபை வழங்குவது ஆயிரம் மடங்கு கொடியதாகும்' என்று அவர் தனது அரசியல்குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மந்திரிசபையில் மோதல் ஏற்படுமா?

'சியரட்ட' என்னும்வாரப் பத்திரிகையின் 24-7-64ந் திகதி இதழில் அப்பத்திரிகையின் அரசியல் நிருபர் 'தேசபூஜித்த' எழுதியிருப்பதாவது:-

'கூட்டு மந்திரிசபையினுள் பிளவு தலைதூக்கியிருப்பதாக நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன.

அரியணை உரையின்மீது பாராளுமன்றத்தில் காணி மந்திரி திரு. சி பி. டி சில்வா பேசுகையில், 'ஒவ்வொரு செயலுக்கும் எதிரொலி உண்டு' என்று கூறினார்.

'தேவையற்ற முறையில் சமசமாஜச் செல்வாக்கை புகுத்த முயன்றால், அவர்களைத் தூக்கியெறிய நாங்கள் தயார்' என்று [illegible] திரு. சில்வாவின் [illegible] மறைந்துகிடப்பதாகச் சமசமாஜ மந்திரிகள் கட்டிக் காட்டுகின்றனர்.

உணவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அரியணை உரையின் மீது பேசுகையில், வில்மட் பெரேரா கமிஷனின் சிபார்சுகளை அமுல் நடத்த பணம் கிடையாதென்று தான் நிதிமந்திரியாகஇருந்த போது கூறியதாகவும், அதனை அன்று எதிர்த்து நின்ற டாக்டர் என். எம். பெரேரா இன்று நிதிமந்திரியாக, அந்தச் சிபார்சுகளை அமுல் நடத்த பணம் கிடையாதென்று கூறுகிறாரென்றும், தான அன்று கூறியதையே அவர் இன்று கூறுகிறாரென்றும் குறிப்பிட்டார்.

இது டாக்டர் பெரேராவுக்குக் கொடுத்த ஓர் அடியாக சமசமாஜத் தலைவர்கள் கூறுகின்றனர்.

'எங்கள் வரவு-செலவுத் திட்டங்களில் குறைகள் கண்டுபிடித்த டாக்டர் பெரேரா குறைவற்ற [illegible] எதிர்பார்க்கின்றோம்' என்று திரு. பண்டாரநாயக்கா மேலும் கூறினார்.

இந்தப் பேச்சும் என். எம். பெரேராவுக்குக் கொடுத்த மற்றொரு அடியென்பது சமசமாஜத் தலைவர்களின் கருத்து.

சுதந்திரக்கட்சி மந்திரிகள் மந்திரிசபைக் கூட்டங்களில் தேவையற்ற முறையில் தங்களுக்குக் கிண்டலும் கேலியும் செய்ததாகப் பிரதமமந்திரியிடம் புகார் செய்ய சமசமாஜ மந்திரிகள் எண்ணியுள்ளனர்.

சிங்கள இதழ்களில்...

திரு. சில்வா, திரு. பீலிக்ஸ் ஆகியோர்களின் பேச்சு சம்பந்தமாகவும் பிரதமரிடம் புகார்செய்யப்பட்டு மந்திரிசபையில் ஒரு கடுமையான கருத்து வேற்றுமை ஏற்படக் கூடுமெனக் கூறப்படுகிறது.

திரு. சி. பி. டி. சில்வாவையும், திரு பீலிக்ஸ் பண்டாரநாயக்காவையும் மந்திரிசபையிலிருந்து அகற்றும்படி டாக்டர் என். எம். பிரதமரிடம் கேட்டுக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு என நிலைமையின் நெருக்கடியை உணர்ந்தவர்கள் தெரிவு படுத்துகின்றனர்.

இதற்கிடையில், கிராமங்கள்தோறும் நிறுவப்படவிருக்கும் பக்கள் கமிட்டிகளில் சமசமாஜிகளைமட்டும் நியமிப்பதற்கான ஓர் இரகசிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக சமசமாஜத் தலைவருக்குட்டிக் காயாகியுள்ள ஒரு மந்திரி பிரதமரிடம் புகார்செய்யப் போவதாகவும் தெரிகிறது.

இன்னும் 12 மாதங்கள் சமசமாஜ மந்திரிகள் மந்திரிசபையில் பதவி வகித்தால் தொழிற் சங்கங்களின் ஆதிக்கமும், அரசாங்கத் திணைக்களங்கள், அமைச்சுகள் ஆகியவற்றின் ஆதிக்கமும் அவர்கள் கைக்குப் போய் விடுமென கூட்டரசாங்கத்தை ஆதரித்த சிலஎம். பிகளும் மந்திரிகளும் ஆங்காங்கு முணுமுணுக்கத் தொடங்கியிருப்பதாக அறியப்படுகிறது.

சமசமாஜ மந்திரிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் இரகசியத் திட்டங்களை உடனேகைவிடும்படி பிரதம மந்திரி அவர்களிடம் கூறிவிடவேண்டுமென்பது அவர்களின் கருத்து.

மேலும், சுதந்திரக்கட்சியின் வாலிபர் சக்திகளினுள் சமசமாஜிகள் வெற்றிகரமாக நுழைந்து கொண்டிருக்கின்றனர் என்பதைச் சுதந்திரக் கட்சி வாலிபர் இயக்கத் தலைவர்கள் அறிந்துள்ளனர்.

மந்திரிசபைக்குள் பின் கதவு வழியாக நுழைந்து கொள்வதற்கும் சுதந்திரக் கட்சியின் வாலிபர் சக்திகள் இதர ஸ்தாபனங்களுள் இரகசியமாக நுழைந்து அவற்றின் ஆதிக்கத்தைக் கைப்பற்றவும் சில ஆண்டுகளுக்குமுன்பே என். எம். திட்டம் தீட்டியிருந்தார்.

கைத் தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா திடீரென மந்திரிசபையிலிருந்து விலகுவதற்கு இரு முண்டு என அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

அவர் பதவியைத் துறக்கும் போகும் காரணம் ஒரு பெரிய இரகசியமாம்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்த பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அரசாங்க ஊழியர் பதவி நீடிப்பதற்கு யார் காரணம்?

பொது சேவை ஆணைக்குழு மந்திரி சபைக்கு கட்டுப்பட்டதா?

பொய்யுரை கூறி அரசியல் லாபம் பெற சமசமாஜிஸ்டுகள் முயற்சி

தர்மதர்மவாதியும், சமூக சீர்திருத்த வாதியும், தொழிலாளர் தொண்டனுமாகிய தர்மகுலசிங்கத்தின் நினைவுதினக் கூட்டத்தில் மூதவை உறுப்பினர் திரு.டொறிக்டி. சூசா உரை நிகழ்த்துகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளைப் பற்றிப் பரிகாசமான முறையில் விமர்சனம் செய்துள்ளார் என்று அறியப்படுகிறது. தமிழரசாரின் பதவி துறப்புத் திட்டம் ஒரு அரசியல் நாடகம் என்றும் வர்ணித்தாராம். மேலும் தமிழரசுக் கட்சியினர் தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல் சமத்துவம் பெற்றுக்கொடுக்க மாட்டார்கள் என்றும் கூறியுள்ளாராம்.

சமசமாஜிஸ்டுகளால் முடியுமா?

தமிழ்பேசும் மக்களுக்கு தமிழரசுக்கட்சியினால் அரசியல் சமத்துவம் பெற்றுக்கொடுக்க முடியாது என்று கூறுவதன் மூலம், தமிழ்பேசும் மக்கள் உரிமை இழந்து வாழ்கிறார்கள் என்ற உண்மையை திரு. சூசா ஏற்றுக்கொள்கிறார். அப்படியானால், இன்று நாட்டின் அரசகட்டிலில் அமர்ந்திருக்கும் சமசமாஜக் கட்சியினர் அந்த உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கலாமல்லவா? அல்லது அந்த உரிமைகளை அபகரித்து வைத்திருக்கும் பணியில் தமக்கும் பங்கு இருக்கிறது என்ற உண்மையைப் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கலாமல்லவா? அல்லது அந்த உரிமையை அபகரித்து வைத்திருப்பவர்களுடன் இன்று நாம் (சமசமாஜிஸ்டுகள்) அரசியல் அரங்கில் கொஞ்சிக் குலாவுகின்றோம் ஆனால் எங்கள் கொள்கைகளைச் சுதந்திரக் கட்சியினர் ஏற்றுக்கொள்கிறார்களில்லை; எங்கள் சொற்கள் சுதந்திரக்கட்சியினர் மத்தியில் செல்லாக்காசு என்ற உண்மையைக் கூறியிருக்கலாமல்லவா? அல்லது சமசமாஜிஸ்டுகளான நாம் மாறும் உங்கள் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முடியாது என்ற உண்மையைக் கூறியிருக்கலாமல்லவா? அல்லது சமசமாஜிஸ்டுகளாகிய நாம் எமது கொள்கைகளை மாற்றிக்கொண்டோம், 14 அம்சத் திட்டத்தை ஏற்றுக் கூட்டரசாங்கத்தில் இணைந்ததன் மூலம், நாம் சுதந்திரக்கட்சியிடம் மண்டியிட்டுப் பூரண சரணாகதியடைந்து விட்டோம் என்று கூறியிருக்கலாமல்லவா? இவற்றை விடுத்துத் தமிழரசாரையும் திட்டித் தீர்த்து அதே நேரத்தில் தமிழர்கள் அரசியல் சமத்துவமின்றி வாழ்கிறார்கள் என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

நாஜிச பாதையில்.....

'சமசமாஜிஸ்டுகளான நாம் முன்பு கூறிய கொள்கைகளை இன்னும் மறக்கவில்லை' என்றும் திரு. சூசா கூறியிருக்கிறார். அப்படியானால் கூட்டரசாங்க ஒப்பந்தத்தில் ஏற்பட்ட 14 அம்சத் திட்டத்தில் தமிழர் உரிமை பற்றி வலியுறுத்தாவிட்டாலும், இனவொழிப்புத் திட்டத்தை முழு மனதுடன் ஏற்றிருக்கத் தேவையில்லையல்லவா?

'ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து விடலாமென்ற ஐயுறவினாலேயே சுதந்திரக் கட்சியுடன் இணைந்தோம்' என்று கூறியிருக்கிறார் திரு சூசா. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி எற்படாமலிருப்பதற்கு ஒரு இனத்தை அழிக்க வேண்டுமா? தமிழினத்தின் அழிவிலும் பார்க்க ஐ.தே. கட்சியினரைப் பதவிக்கு வராது தடுப்பது சமசமாஜிஸ்டுகளுக்கு முக்கியமானதா? அப்படியானால் தாளையூதர்களைக் கொன்று குவித்தது போல் தமிழர்களைக்கொன்று குவித்தால்தான் ஐ.தே. கட்சியினரை அரசகட்டிலில் ஏறாது தடுக்கலாம்என்றால், சமசமாஜிஸ்டுகள் நாஜிச இயக்கத்தினராக மாறுவார்கள் போல் தெரிகிறது.

சாதகமான சூழ்நிலை எது?

'மொழிப் பிரச்சினைக்குத் தற்போது தீர்வுகாண முடியாவிட்டாலும் தீர்வுகாணக் கூடிய சூழ்நிலையை எம்மால் ஏற்படுத்திக் கொள்ள முடியும்' என்று திரு. சூசா கூறியுள்ளார். மொழிப் பிரச்சினையைத் தீர்க்கக் கூட்டரசாங்கம் உருவாக இருந்த சமயத்தைவிட வேறு சாதகமான சூழ்நிலை உருவாகுமா? உருவாகும் என்பதற்கு என்ன நம்பிக்கை? அப்படி உருவானால், கூட்டரசாங்கம் உருவாகும் பொழுது விட்டுக்கொடுத்தது போல் அன்றும் சமசமாஜிஸ்டுகள் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மொழிப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சாதகமான சூழ்நிலை என்பதற்கு விளக்கம்தான் என்ன? 'மொழிப் பிரச்சினையில் தீர்வு' என்ற கூற்று தமிழர் மீது சிங்களத்தை வலுக்கட்டாயமாகத் திணித்து வெற்றி காணுவது என்று கொள்ள முடியாதா?

தெற்கில் விழா எடுப்பார்களா?

'தர்மகுலசிங்கம் இன்று உயிரோடு இருந்தால் மந்திரியாக இருப்பார்' என்று திரு. சூசா கூறியுள்ளார். தர்மகுலசிங்கம் இன்று உயிரோடு இருந்தால் சமசமாஜக் கட்சியால் புறக்கணிக்கப்பட்டிருக்க மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அல்லது சமசமாஜக் கட்சி 60ம் ஆண்டு சிறுபான்மையினர் பிரச்சினையில் அடித்த பல்டியுடன் அவர் கட்சியிலிருந்து வெளியேறியிருக்க மாட்டாரா? அதுவும் தவறினால் சுதந்திரக் கட்சியிடம் சரணாகதியடைந்து மந்திரிப் பதவிக்கு இரந்து நின்ற நிலைகண்டு அவர் சமசமாஜக் கட்சியை விட்டு விலகியிருக்க மாட்டாரா?

இன்று தர்மகுலசிங்கம் உயிரோடு இருந்திருந்தால் தமிழினத்தின் விடுதலைப் போரில் முன்னணியில் திகழ மாட்டார் என்பதற்கு சமசமாஜிஸ்டுகள் கூறக் கூடிய காரணம் தான் என்ன?

தர்மகுலசிங்கத்துக்கு மந்திரிப் பதவி வழங்க அவாவுறும் சமசமஜிஸ்டுகள் சிங்களப் பிரதேசத்தில் அன்னாருக்கு நினைவு விழா எடுக்காதது ஏன்? போலித் தேசியவாதம் பேசும் இவர்கள் இதைச் செய்ய முன் வருவார்களா?

உரிமை பழங்கும் அம்சம் எது?

அதே கூட்டத்தில் உரை நிகழ்த்திய மற்றொரு தமிழ் சமசமாஜப் பிரமுகர் '14 அம்சத் திட்டத்தில் இலங்கை வாழ் தமிழ்

(9-ம் பக்கம் பார்க்க)

தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் விவேகாநந்தசபை

சைவ இளைஞர்களின் முயற்சியால் நாடும் ஏடும் போற்ற இயங்குகிறது

கொழும்பு விவேகானந்த சபை கடந்த அறுபத்தியோரு ஆண்டு காலமாகத் தலைநகரில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு பல வழிகளிலும் சேவை புரிந்து வருகின்றது. சமயச் சார்புடைய ஒரு இயக்கமாக

நடப்புவருட
சபைத் தலைவர்
இரா. சபாநாயகம்

இருந்த போதிலும் தமிழ் என்ற பொதுமையில் அதன் பணி வியாபித்து விளங்குகின்றது. கடந்த ஆண்டு சபை தமிழ் மொழி சம்பந்தமாக நிறைவேற்றிய ஓர் தீர்மானம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் அரசு எதேச்சாதிகார முறையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனவொழிப்பு நடவடிக்கையில் இறங்கியிருப்பதைக் கண்டித்தும், உலகின் அதி பெரிய நான்கு சமயங்களின் விருத்திக்கும் உறுதுணையாக விளங்கிய தமிழுக்கு இன்னல் இழைப்பதா என்றும் அத்தீர்மானத்தில் சபை குறிப்பிட்டிருந்தது.

நடப்பு வருட
சபைச் செயலாளர்
அ. வ. கணபதிப்பிள்ளை

இசை விழா

கடந்த ஆண்டில் விவேகாநந்த சபையிலிருந்து பெரிய அளவில் ஒரு இசை விழாவினைக் கொழும்பில் நடாத்தியது. இசை விழாவின் மூலம் சைவத் தமிழர்களுக்கும் சபைக்குமிடையில் ஒரு நெருங்கிய உறவு ஏற்பட்டது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 37க்கு மேற்பட்ட இசைக் கலைஞர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். தலைநகரில் நடைபெற்ற சிறந்த இசை விழாக்களில் இதுவும் ஒன்று என்று இசை [illegible] கருதுமளவிற்கு விழா சிறப்புற்று விளங்கியது.

சபையின் சார்பில் நடைபெறும் நடன மன்றம் கடந்த ஆண்டில் பரத நாட்டிய ஆசிரியை திருமதி கமலா தேவன்பிள்ளை அவர்களின் வழி காட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய 85க்கும்

நடப்பு வருட
சபைப் பொருளாளர்
வி. இ. வடிவேற்கரசன்

மேற்பட்ட பிள்ளைகள் நடனம் பயின்று வருகின்றனர் என்று தெரிகிறது.

கூட்டு முயற்சி

கடந்த ஆண்டில் விவேகானந்த சபையினரும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரும் கூடி சைவ மாணவரின் சமயக் கல்வி பற்றிய விடயத்தில் ஒரு முடிவிற்கு வந்தது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். சிரேஷ்ட தராதரப் [illegible] அதன் கீழ்ப்பட்ட பரீட்சை

(13-ம் பக்கம் பார்க்க)

தமிழரசு வாலிப முன்னணி 10-வது மாநில மாநாடு

கிளிநொச்சி, யூலாம் 31

தமிழரசு வாலிப முன்னணியின் 10 வது மாநில மாநாடு ஆகஸ்டு திங்கள் 1, 2, ம் திகதிகளில் கிளிநொச்சி மாவித்தியாலய மைதானத்தில் நடைபெறுகிறது.

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முன்னணியின் கொடியை ஏற்றி மாநாட்டை தொடக்கி வைப்பார். கரைச்சி கிராம சபைத் துணைத் தலைவரும் வாலிப முன்னணி கிளிநொச்சிக் கிளைத்தலைவருமான திரு. சி. தங்கராசா வரவேற்புரை நிகழ்த்துவார். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் கொடிக் கீதம் பாட தொண்டர் படை அணிவகுப்பு நடைபெறும்.

மகா வித்தியாலயத்தில் அமைத்துள்ள 'கந்தையா' அரங்கில் பிற்பகல் மூன்று மணிக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் இலக்கிய, கலை, கலாச்சார மாநாடு ஆரம்பமாகும். திருவாளர்கள் கரவைக் கிளார், கலாநிதி சு. வித்தியானந்தன், மட்டக்களப்பு முதல் பிரதிநிதி செ. இராசதுரை, வ. ஐயாதுரை, செங்கை ஆழியான் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

பிற்பகல் ஏழுமணியளவில் திரு. வ. சின்னத்துரை தலைமையில் 'அன்னா', 'மயானகாண்டம்' ஆகிய நாடகங்கள் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 'கணேசமூர்த்தி' அரங்கில் திரு. சி. சின்னையா தலைமையில் விவசாய, தொழிலாளர் மாநாடு நடைபெறும். இ. தொ. க. தலவாக்கொல்லைமாவட்டபிரதிநிதி திரு. செ. சோமசுந்தரம், திரு. மு. தம்பிராசா, தீவுப்பகுதி வா. மு. செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு, பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம், இ. போ. ச. தொழிற் சங்க உறுப்பினர் திரு. பீதாம்பரம், இ. தொ. க. துணைத் தலைவர் திரு. ஆ. இராமன், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், ஜனப் மஞ்சூர் மௌலானா, இ. தொ. க. துணைத்தலைவர் திரு. பெ. இராமையா, பெற்றூர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. பொன்னையா, இ. தொ. க. துணைத்தலைவரும் வட்டுக் கோட்டைப் பிரதி

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் குரல்

முஸ்லிம் எழுத்தாளர்களை அவமதிப்பதேன் ?

ஒரு தமிழ் தினசரியின் ஞாயிறு பதிப்பில் திரு சில்லையூர் செல்வராசன் 'இளமைப் பருவத்திலே!' 'மரபு' ஆகிய நூல்களின் ஆசிரியரும் 'அரசு வெளியீடு' பதிப்பகத்தின் நிருவாகியும் பிரபல முஸ்லிம் எழுத்தாளருமான ஜனாப். எம். ஏ. ரஹ்மானைப் பற்றித் தவறான அபிப்பிராயங்கள் ஏற்படும் வண்ணம் எழுதியுள்ளார். இதைத்தொடர்ந்து வேறு சில பத்திரிகைகளும், இத் தினசரியில் வெளிவந்த செய்தியைப் பலவகையிலே தங்களுக்குச் சாதகமானவகையிலே திரித்து வெளியிட்டு இருக்கின்றன.

இஸ்லாமிய இலக்கிய உலகில் நீண்டகாலத் தொடர்புடையவன் என்கிற காரணத்தினாலும் சர்ச்சையிலே எழுப்பப்பட்டுள்ளஇரண்டு ரஹ்மான்களையும் நேரிடையாகவே நான் அறிந்தவன். என்கிறபடியாலும், இரண்டு பிரபல முஸ்லிம் எழுத்தாளர்கள்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள களங்கங்களைத்துடைத்து, உண்மையை நிலைநாட்ட வேண்டியது எனது கடமை என்பதற்காகவே இதனை எழுத விழைகின்றேன்.

'ஈழத்து இலக்கிய வளர்ச்சி', என்னும் நூல் அருமையான இலக்கிய வரலாற்று முதல்நூலாகும். முஸ்லிம் எழுத்தாளருடைய முயற்சிகள் இந்நூலில் விரிவாக ஆராயப்பட்ட அளவிற்கு வேறு எந்நூலிலும்ஆராயப்படவில்லை.

இதிலே குறை கண்டுபிடிக்கும் திரு. செல்வராசனின் 'சிறுபிள்ளைத்தன'த்தைநாம் மன்னித்து விடுவோம். ஆனால், முஸ்லிம் எழுத்தாளர்களை இவ்வாறாக அவமதிக்க முயல்றதை மானமுள்ள எந்தஇஸ்லாமியனும் பார்த்திருக்கமாட்டான். நமது எழுத்தாளர்களைப் பற்றி எழுதும்பொழுது, சரியான தகவல்கள் தேவையெனில், அத்தகைய தகவல்களைச் சரியான முறையில் தெரிவிக்கக்கூடியவர்களை அணுகிக் கேட்கவேண்டும்.

திரு. செல்வராசன், முஸ்லிம் எழுத்தாளர்களைப்பற்றிய உண்மையான தகவல்களை இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்திடம் கேட்டிருக்கலாம். நான் அந்நியனுமல்லேன். என்னிடம் கேட்டிருந்தாற்கூட எத்தனையோ தகவல்களையும், ஆதாரமான நூல்களையும் கொடுத்திருப்பேன் இவற்றை விடுத்து அவர் எழுதியிருக்கும் தொனி, அடிமனத்திலே அவர்க்கு முஸ்லிம் எழுத்தாளர்கள் மீதுள்ள வெறுப்பையே காட்டி நிற்கின்றது.

'ஷாஜஹான்', மாதமிருமுறையாக திருச்சியிலிருந்து வெளிவந்தது. அதன் ஆசிரியர்கள் திருச்சிராகுலும் அன்பர் மதனியுமாகும். ஜனாப் ராகுல் பல கதைகள் நிலைகரனில் எழுதியவர். துணை ஆசிரியர் அறிஞர் மதனி தென்னகத்தில் சமூகப் புரட்சியை உண்டாக்கியவர்.

இப்பத்திரிகையின் ஆரம்ப காலத்திலிருந்து இறுதிவரை சிறந்த எழுத்தாளர்களான தூத்துக்குடி முஸ்தபா ஹுசேன், காரை எ எம். அலி, மதுரை வி. எம். ஏ. பாட்சா ஜான் ஆகியோரும் நானும் எழுதிவந்தோம்.

இலங்கையிலிருந்து தொடர்ந்து எழுதியவர்கள் என்று எப். எம். இப்ராஹீம், எம். எச். எம். இப்ராஹீம், எச். எம். பி. முஹையதீன், புரட்சிக்கமால், திருப்பத்தூர் எம். ஏ. ரஹ்மான் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

'அரசு வெளியீடு', திருவாகி எம். ஏ. ரஹ்மானும் 1951-ம் ஆண்டில் 'திருப்பத்தூர் எம் ஏ ரஹ்மான்' என்று ஷாஜஹான் பத்திரிகையில் எழுதியவரும் ஒருவரேதான்.

ஈழநாட்டில் பேரறிஞர் விபுலானந்தரின் ஆற்றல்களை நன்கு மதித்து, அவருக்கு உரிய மதிப்பளித்த செட்டிநாட்டுப் பகுதியைச் சேர்ந்தது, திருப்பத்தூராகும். அங்கு பிறந்து ஈழத்தையே தமது வசிப்பிடமாக்கிக்கொண்ட எம். ஏ. ரஹ்மான் 1951-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாஜஹான் பத்திரிகையிலே தொடர்ந்து எழுதிவந்ததை நான் அறிவேன்.

15-6-51, 1-7-51, 15-8-51 ஆகிய தினங்களில் முறையே வெளியான மூன்று வது இதழ், ஈத்மலர், ஈதந்திர தின மலர் ஆகியவற்றிலே 'மரபு' ஆசிரியர் எம். ஏ. ரஹ்மான் கட்டுரைகள் எழுதியுள்ளமையை உதாரணத்திற்காகத் தரலாம்.

15-9-51-ல் வெளியான ஸஜ்மலரில் இவர் எழுதியுள்ள 'இலங்கை மாணவர்களுக்கு பதவிமோகமேன்?' என்ற கட்டுரை விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. இலங்கை மாணவர்களுடைய நிலையை, இலங்கை மாணவராகவே ரஹ்மான் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

'மிலாப்' ஆசிரியர் எம். ஏ. ரஹ்மான் இலங்கைக்கு வந்தவர் அல்லர். அவர் ஈழத்து (திருப்பத்தூர்) ரஹ்மானுக்கு எத்தனையோ வயதுகள் மூத்தவர். அவரால் இத்தகைய ஒரு கட்டுரையை எழுதியிருக்கமுடியாது. அத்தகைய அவசியமும் ஏற்பட்டிருக்கமாட்டாது.

'மரபு' ஆசிரியரும், 'அரசு வெளியீடு' நிருவாகியுமான எம். ஏ. ரஹ்மானை நான் நன்கறிவேன். இவர் 1948-ம் ஆண்டு தொடக்கம் 1951-ம் ஆண்டுவரை வெலிகாமம் மத்தறஸதுல் கிழ்றிய்யா அரபிக் கல்லூரியில் கல்வி பயின்றார். இவரது அரபு ஆசிரியர்கள் மாரிக்கமேதைகளான மலபார் முஹம்மது கஸ்ஸாலி ஹஸரத்து, நாங்கல்ல அலியா மரிக்கார் ஆலிம் சாஹிபு, கல்பொக்க அத்தாவுல்லா ஆலிம்சாஹிபு ஆகியோராவர். இம்மேதைகளை நான் நன்கு அறிவேன்.

இங்கு பயின்றுகொண்டிருந்த பொழுதுதான் எம். ஏ. ரஹ்மான் எழுத்துலகில் காலடியெடுத்துவைத்தார்.

இவருடைய பெயருடன் சேர்த்து ஆன்மாமுட்டம் செய்யப்படும் 'மிலாப்' ஆசிரியர் எம். ஏ. ரஹ்மானையும் நான்நன்கறிவேன். சமுதாய புரட்சிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ள தியாகசீலர். ஆற்றலிலக்கியத் துறையில் அதிகம் ஈடுபட்டிலாதவர். ஷாஜஹானில் தொடர்ந்து எழுதியவருமல்லர். அவர் 15-5-52-ல் வெளியான ஆண்டுமலரில் 'மனவேதனை' என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அதே மலரில் அவரது படமும் வெளியாகியுள்ளது. அவர் 'பாக்கிஸ்தான்', 'திராவிட நாடு' ஆகிய பிரிவினைக் கோஷங்களை வெகுவாகஆதரிப்பார். கம்யூனிஸத்தைத் தமது முதலாவது எதிரியாகக் கருதுவார். இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

திரு. செல்வராசன் [illegible] நேரில் எழுதிக் கேட்டிருக்கலாம். அவரே சொல்லுவார்,

(13-ம் பக்கம் பார்க்க)

ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனநிறகும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
தன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-11

தமிழ் பிரமுகருக்கு முஸ்லிம் பிரமுகர் கண்டனம்

அண்மையில் தமிழரசுக்கட்சியிலிருந்து விலகிய தமிழ்ப் பிரமுகர் ஒருவரை அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த வயது முதிர்ந்த தென்னிலங்கை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், கடந்த வாரம் பாராளுமன்றச் சிற்றுண்டிச்சாலையில் வைத்துத் அப் பிரமுகரின் நடத்தையைப் பகிரங்கமாகக் கண்டித்தாராம்.

பார்த்திருந்தவர்கள் வாயடைக்கத்தக்க முறையில் இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்ப் பிரமுகரைக் கண்டித்து விட்டுத் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களை வாயாரப் புகழ்ந்தாராம். அந்தத் தமிழ்ப் பிரமுகரைப் பார்த்து 'தனிப்பட்ட முறையில் உமது அரசியல் நடத்தை பற்றி நாம் கவலைப்படவில்லை. அது உமது உரிமை. ஆனால் திரு. செல்வநாயகம் போன்ற ஒரு பெரியாரைத் தூற்றுவதும் குறை கூறுவதும் முறையாகாது. திரு. செல்வநாயகத்தின் நேர்மையையும் கண்ணியத்தையும் இன்று வரை யாரும் சந்தேகித்ததில்லை—சந்தேகிக்கவும் மாட்டார்கள். அவருக்குப் பரம எதிரியாராவது இருந்தாலும் கூட அவரின் நேர்மையைச் சந்தேகிக்கமாட்டான்.

இந்தத் தள்ளாத வயதிலும் கூட தான் கொண்ட ஒரே கொள்கையுடன் தளராது நிற்கும் அவரது உறுதியைச் சிறுபான்மை இனத்தவன் என்ற முறையில் நான் என்றுமே போற்றிவந்துள்ளேன். திரு. செல்வநாயகத்தின் நேர்மையை நீர் சந்தேகிப்பதனால் அவரின் மதிப்புச் சிறிதும் குறையாது' என்று அந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் கூறினாராம். கூடவிருந்தவர்களுக்கு முஸ்லிம் பிரமுகரின் பேச்சு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது.

இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் தமிழரசாரோடு எந்த வகையிலும் என்றுமது தொடர்பு கொண்டவரல்லராம்.

விபுலாநந்த சிலைக்கு நிதி திரளுகிறது

யாழ் நூல் தந்த வித்தகன் விபுலாநந்தருக்கு கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் உருவச் சிலை அமைக்க விருக்கும் செய்தி அறிந்ததே.

உருவச் சிலை அமைப்பதற்கான செலவினைப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறுவது என்று மன்றம் முடிவு செய்திருந்தது. நன்கொடை கொடுத்துதவும் வண்ணம் பொது மக்களுக்குக் கடந்த வாரம் மன்றம் விடுத்த வேண்டுகோள் பலன் கொடுத்து வருகின்றது.

மன்றத்தின் வேண்டுகோளை ஏற்று மெய்கண்டான் அதிபர் திரு. இரத்தினசபாபதி 151/-ரூபா நன்கொடையாக கொடுத்துதவியுள்ளார். பண்டிதர் கா. பொ. இரத்தினம் 25/- ரூபாவும், அடிகளாரின் மாணவர்களான திருவாளர்கள்; செ. வேலாயுதபிள்ளை, ச. சே. நடராசா, மகேஸ்வரி பாலகிருஷ்ணன், திருமதி குலரத்தினம் ஆகியோர் ஆளுக்கு 25 ரூபாவும் நன்கொடையாக மன்றத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

மேலும் இப்பணிக்குப் பொருள் உதவி செய்ய விரும்புவோர் கா. பொ. இரத்தினம், 58, உருத்திரா வீதி, கொழும்பு-6 என்றவரிக்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பிவைக்குமாறு மன்றம் கேட்டுக்கொள்கிறது.

சந்தியில்

அரசாங்கத்தோடு ஒத்துப் பாடும் தமிழ் பேசும் பிரதிநிதி ஒருவருக்கு, ஆளும் கட்சி மேலிடத்தில் நல்ல செல்வாக்குப்பெற்ற பிக்கு ஒருவரின் எச்சரிக்கைகொடுக்கப்பட்டுள்ளதாக அம்மானுக்கு ஒரு தகவல் தெரிந்தது.

கடந்தகாலத் தேர்தல்களில் இந்த பிக்கு இந்தப் பிரதிநிதிக்காகப் பெரும் பாடு பட்டாராம். ஆனால் இப்பொழுது இந்த பிக்கு, பிரதிநிதியின் நடவடிக்கைகளில் அதிருப்தி கொண்டுள்ளாராம்.

இந்த அதிருப்திக்கான காரணம் ஒரு உப தபாற்கந்தோர் என்று தெரிகிறது. இந்த உப தபாற்கந்தோருக்கு அதிபராக நியமனம்பெற பலர்முயன்றனர். பிக்கு தனது சகாஒருவரை நியமிக்க எத்தனம் செய்துகொண்டிருக்கும்போது, பிரதிநிதி தன்னுடையஒருவரை, மந்திரிமார் துணையுடன் நியமித்து விட்டாராம். இந்த நியமனத்தால் பெரும் சங்கடம் ஒன்று உருவாகி, பிரதமருக்கும் பிரச்சினை எட்டிவிட்டதாம்.

ஃ ஃ

ஒரு கிராமச் சங்கத்தின் தலைவர் பதவியை அபகரிக்க ஒருவருக்கு கிட்டத்தட்ட அரை லட்ச ரூபாய் செலவு ஏற்பட்டிருக்கிறதாம்.

கிராம சங்கத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் வெற்றிபெற்ற பத்துப் பிரதிநிதிகள் திடீரென மாயமாக மறைந்து விட்டனராம். வட்டாரங்களில் வெற்றிக் கொண்டாட்டங்கள் வைக்கவோ, வெற்றிபெற்றவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குச்சென்று தங்கள் குடும்பத்தாருடன் உறவாடி மகிழவே முடியவில்லையாம். தங்கள் பிரதிநிதிகளைக் காணாது வாக்காளர்களும் ஏங்கினார்களாம். பொலீசார் கூட இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

ஒரு பிரதிநிதியின் மனைவிக்கு பெரு நோய் கண்டிருந்தும்கூட அப் பிரதிநிதியால் தன் மனைவியைக்காணச் செல்லமுடியாத பரிதாபநிலை ஏற்பட்டதாம்.

கிராமசபைத் தலைவர் பதவிக்கு நெடுநாட்களாகக் கண்குத்தியிருந்த ஒருவர் இத்தனைபிரதிநிதிகளையும் இலங்கையின் பல பாகங்களுக்கும் உல்லாசப் பயணம் அனுப்பிவைத்தாராம். உல்லாசம் என்றால் இத்தகைய உல்லாசத்தை வேறு எவராலும் அனுபவிக்கவே முடியாதாம். வகை வகையான உணவுகளும், விரும்பிய பானங்களும் தண்ணீர் பட்ட பாடாம். மொத்தச் செலவு அரை லட்சமாம்.

இப்படிச் செலவு செய்தால்அப்பொருளை எப்படி மீட்கமுடியும்? அப்பதவியே பணத்தைக்கொடுக்குமாம். எப்படி? பொறுத்திருந்தால் புரியும்

அரிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாணரின் இறுதி நாள் பற்றிய விபரம்

நாகர் கோவிலில் கலைவாணரின் அன்னையாருடன் பேட்டி

காந்தி ஸ்தூபியையும் கண்ணாரக் கண்டோம்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் இல்லமான 'மதுரபவனம்' நாகர் கோயில் டவுனிலிருந்து சற்றுத்தள்ளி அகுருள்ள பகவதி அம்மன் ஆலயத்துக்கும் சற்று அப்பால் ஒரு ஒதுக்குப் புறத்தில் அமைந்திருக்கின்றது. மாடி வைத்துக் கட்டப்பட்ட அந்த இல்லம், கலைவாணரின் விசாலமான இதயம் போல் மிக விசாலமாகவே திகழுகின்றது. ஒரு கோயிலுக்குள் நுழையும் புனித எண்ணத்தோடு 'மதுரபவன'னத்துள் நுழைகின்றோம் நாம்.

கலைவாணர் மகன்

வீட்டு வராந்தாவில் கூப்பிய கரங்களுடன் குழந்தைச் சிரிப்புடன் கலைவாணரின் பெரிய படம் ஒன்று மாட்டப்பட்டிருக்கின்றது. அந்தப் படத்தைப் பார்க்கும் போது கலைவாணர் உயிர் பெற்றுவந்து குதூகலமாக நம்மை வரவேற்பதுபோல் இருக்கின்றது. அந்த மானசீக வரவேற்பை ஏற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தால், தாடி வைத்த ஓர் இளைஞர் நம்மை வரவேற்கின்றார்.

'நீங்களெல்லாம் யாரு? எங்கிருந்து வருகின்றீர்கள்?'

'நாங்களெல்லாம் தமிழர்கள். இலங்கையிலிருந்து வருகின்றோம். ஆமாம் தாங்கள்.....?'

'நான் கலைவாணரோட மூத்த பிள்ளை. என் பெயர் என். எஸ். கே. ராஜா!'

'அப்படியா? மிக்கமகிழ்ச்சி. தாங்கள் இப்போ என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்?'

'நாயல் வாய்க்காலைக் கவனிப்பதோடு, வீட்டு நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அப்பப்போ என் தம்பி கோலப்பனுடன் சேர்ந்து 'வில்லுப் பாட்டு' நிகழ்ச்சியும் நடத்தி வைக்கொண்டுவருகின்றேன்.'

'கோலப்பனும் இங்குதான் இருக்கின்றாரா?'

'இல்லை. அவன் சென்னையில் சிறிய அன்னை மதுரத்தோடு இருக்கின்றான். சினிமாவிலும் இப்போ நடித்துக் கொண்டிருக்கின்றான்.'

'தாங்களும் சினிமாவில் நடித்தால் என்ன?'

'நானும் சென்னைக்கே போய்விட்டால், அப்புறம் வீட்டு நிர்வாகத்தை யார் பார்ப்பது?'

'ஆமாம்; வீட்டில் இப்போ யார் யார் இருக்கின்றார்கள்?'

'அப்பாவோட அம்மா, அப்பாவின் முதல் மனைவி (என் அம்மா) இரண்டு வயது வந்த தங்கைகள் ஆகியோர் இருக்கின்றோம்.'

கலைவாணரின் தாயார்

'கலைவாணரை ஈன்றெடுக்கும் பாக்கியத்தைப் பெற்ற உங்கள் பாட்டியை நாங்கள் தரிசிக்கலாமா?'

'பேஷாகப் பார்க்கலாம். இதோ அழைத்து வருகின்றேன்' என்று கூறிவிட்டு உள்ளே சென்ற திரு ராஜா கலைவாணரின் அன்னையை அழைத்து வந்து எங்கள் முன் நிறுத்திவிட்டு, 'பேசிக் கொண்டிருங்கள், முக்கியமான ஓர் அலுவல் காரணமாக வெளியில் செல்ல வேண்டியிருக்கின்றது, போய்விட்டுச் சீக்கிரம் திரும்பிவிடுகின்றேன்' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

காதுகள் இரண்டும் அறுந்து விழும் அளவுக்கு நிறையுள்ள கடுக்கன்கள் பளதோளில் முட்ட, தளர்ந்த உடலோடு எங்கள் முன் வந்து நின்ற அந்தப் பாட்டியைப் பார்த்ததும் நமக்குப் புல்லரிப்பு ஏற்படுகின்றது. கண்களில் நீர் மல்க இரு கரம் தூக்கி அந்த 'லோகமாதா'வை வணங்குகின்றோம் நாம்!

பதிலுக்கு, நடுங்கும் தன் கரங்களைக் குவித்து வணக்கம் தெரிவித்த அம்மையார் நம்மைப் பார்த்துக் குலுங்கக் குலுங்க அழுகின்றார். 'இலங்கையிலிருந்து வந்திருக்கின்றோம்' என்பதை அறிந்ததும் அவருடைய துயரம் இன்னும் பன்மடங்கு பெருகுகின்றது.

'கொழும்புக்கு ஓடி ஓடி வருவானே எம் புள்ள? அந்த ஸ்தாபனத்துக்கு நிதி உதவி- இந்த ஸ்தாபனத்துக்கு நிதி உதவி என்று சொல்லி நாடகம் போடுவானே அவன்?' என்று அழ ஆரம்பித்துவிட்டார் கலைவாணரை ஈன்ற அந்தத் தாய்.

அவரைப் பார்க்கும்போது கலைவாணரே பாட்டி வேஷம் போட்டுக் கொண்டு வந்திருப்பது போல் இருந்தது. அவ்வளவு தூரம் நம் கலைவாணரை உரித்து வைத்திருந்தார் அவர். அதே வாய், அதே மூக்கு, குறும்பும், தலைச்சுவையும் துள்ளும் அதே கண்கள், அதே பாவம்!

பாட்டியுடன் பேட்டி

அழுகைக்கு மத்தியிலேயே நம் பேட்டி தொடர்கின்றது....

'உங்கள் அருமைப் புதல்வர் அடிக்கடி உங்களை வந்து பார்ப்பாரா?'

'அடிக்கடி என்று சொல்ல முடியாது. ஓய்வு கிடைக்கிறபோது வந்து பார்ப்பான். மெட்ராசிலிருந்து 'டெலிபோன்' போட்டும் பேசுவான்.'

'என்ன பேசுவார்?'

'அம்மா! நீ ரொம்ப பாக்கியம் செய்தவள் அம்மா: உனக்கு ஒரு குறையும் வராம நான் பார்த்துக் கொள்ளுகிறேன் அம்மா! அத்தோடு இந்த நாட்டிலே குறையொன்றும் இல்லாமல் மக்கள் வாழ்வதற்கும் வழி காட்டப் போறேம்மா' என்பான். 'என்னடா செய்யப் போறே?' என்று கேட்டால், 'இதோ பாரம்மா. இப்போ நான் கட்டியிருக்கின்ற இந்த வீடு ரொம்பப் பெரிசுதானே! இந்தநாட்டிலுள்ள ஏழைகளெல்லாம் இதே போன்ற வீட்டில் வசதியாக வாழ வேண்டும். அவர்களுக்கெல்லாம் இப்படி வீடு கட்டிக் கொடுப்பதற்கு நான் பெரிய திட்டம் போட்டிருக்கிறேன்' என்று பிரசங்கம் பண்ணுவான்! திட்டம் அமுல் நடத்தாமல் போயிட்டான். நான் கிடக்கிறேன் பாவி?'

'ஆமாம், உங்கள் மைந்தருக்குத் திடீரென்று எப்படிச் சுகவீனம் ஏற்பட்டது?'

நவம்

'அவன் போக்கே தனி! எதையும் தன் இஷ்டப்படியே செய்வான். ஒரு நாள் பல்லைப் பிடுங்கிக் கொண்டு வந்து என் முன்னே நின்றான். தந்தம் கூடச் சற்று விலகி இருந்தது. இரத்தம் கூடக் கசிந்து கொண்டிருந்தது. 'ஏண்டா இப்படிச் செய்தே?' என்று கேட்கவும், 'அம்மா போம்மா! பல்லை வலித்தது, புடுங்கிட்டேன்' என்றான். அந்தச் சொல் அவன் உயிரையே புடுங்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை! அதிலிருந்து தொட்ட நோய் அப்புறம் அவனை விடவேயில்லை!'

உங்கள் மகன் ஊருக்கெல்லாம் உபகாரியாக இருந்தாரே, உங்களுக்கு என்ன வைத்தார்?'

'கடன் வைத்தான்! உழைத்ததையெல்லாம் வாரி வாரிக் கொடுத்தான்! பசித்தவர்களைப் பார்த்துச் சகிக்கமாட்டான் என் மகன். அவன் தந்தை செத்தபோது லெட்சம் லெட்சமா வாரி இறைத்து ஏழைகளுக்கு அன்னதானம் பண்ணினான். என் சாவுக்குச் செலவழிக்க அவன் இல்லாமப் போயிட்டான். நான் பாவி! நான் பாவி!' என்று வயிற்றில் அடித்துக்கொண்டார் அவர்.

அவர் துயரைத் தேற்றுகின்றோம் நாம். வெறும் வார்த்தையால் தேற்றுகின்ற துயரமா அது?

'பாட்டி' தாங்கள் பாவி அல்ல, நாங்கள் தாம் பாவிகள்!' என்கின்றோம் நாம்.

எம். ஜி. ஆரின் தொண்டு

நாகர்கோயிலில் தியேட்டர்கள் சொந்தத்தில் இருந்தனவாம் கலைவாணருக்கு! இன்னும் ஏராளமான சொத்துக்களும் இருந்தனவாம்!

(16)

யார் பாவி?

'அவர் காலமாகும் போது தாங்கள் அருகிலேயே இருந்தீர்களா?'

'அவன் பக்கத்திலேயே இருந்தேன். இங்கிருந்த எல்லை 'டெலிபோன்' போட்டு, மெட்ராசுக்கு வருமாறு அழைத்தார்கள். அங்கு சென்றால் என் புள்ளை ஜெனரல் ஹாஸ்பிட்டலில் படுத்த படுகையாக இருந்தான். 'அம்மா! அம்மா! நான் சாகமாட்டேன்!' என்று சொல்லிக்கொண்டிருந்தான். இறக்கும் வரையும் நல்லாக நினைவோடேயே பேசிக்கொண்டிருந்தான். மந்திரிகளென்றும், எம். எல். ஏ.க்களென்றும், சினிமாக்காரர்களென்றும் யார் யாரெல்லாமோ வந்து பார்த்தார்கள். ஆனால், அவன் யாரையும் பார்க்காமப் போயிட்டான்! நான் கெடக்கிறேன் கல்லாட்டம்!' தொண்டை கடைக்கண்ணமடை திறக்கக் கூறிக் கொண்டே போனார் கலைவாணரின் அன்னை.

தாயாரிடம் கலைவாணர் குடும்பத்தைப் பற்றி மேலும் கேட்டு அறிந்தோம்.

இப்போ அவரெல்லாம் போய் ஒரேயொரு தியேட்டரும், கொஞ்ச நிலபுலனும் மிஞ்சியுள்ளனவாம்! கல்யாணவயதில் இருக்கும் கலைவாணரின் இரண்டு கன்னிப் பெண்களையும் நமக்குக்காண்பித்து விரைவில் அவர்களுக்குத் திருமணம் நடக்க இருப்பதாகவும் கூறினார் பாட்டி. (சமீபத்தில் எம். ஜி. ஆர். முன்னிலையில் கலைவாணரின் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்துவைத்ததைப் பத்திரிகையில் படித்தறிந்தோம்.) இடையிடையே எம். ஜி. ஆரும், சிவாஜிகணேசனும், கருணாநிதியும் இங்கு வந்து நலம் விசாரித்துப் போவார்கள் என்றும் சொன்னார். மதுரமும் வந்துபோவதுண்டு என்றும் சொன்னார். கலைவாணரின் மூத்த மனைவியையும் அழைத்துக் காண்பித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு விடுமுறுவதும் ஒரு நோட்டம், விடுகின்றோம் நாம். கலைவாணரின் சிறு பிராயப்படங்கள், பிரமுகர்களுடன் அவர் இருக்கும் படங்கள்; மதுரத்துடன் அவர் இருக்கும் படங்கள் என்று சுவர்களில் படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன.

என்னதான் இருந்தும் அந்த வீட்டில் 'களை' இல்லை; 'லட்சுமி' இல்லை!

காந்தி நினைவு அரங்கம்

கலைவாணரின் அன்னையாரையும்; அவர் குடிகொண்ட 'கோயி'லான அந்த 'மதுரபவன'த்தையும் இரு கரங்கூப்பி வணங்கிவிட்டு, கலைவாணர் காந்திமகானுக்கு குமார் அரை லட்சம் ரூபாவில் எடுப்பித்த ஸ்தூபியைப் பார்க்கப் புறப்படுகின்றோம் நாம்.

நாகர் கோயிலின் நடுவே அமைக்கப்பட்டுள்ள நந்தவனம் ஒன்றில் அந்த காந்தி நினைவு ஸ்தூபி கம்பீரமாக நிற்கின்றது. ஸ்தூபியின் அடியில் காந்திமகானின் புரட்சிகரமான கருத்துக்கள் கொண்ட பொன்மொழிகள் வடிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ஸ்தூபியில் காந்தி மகானையும், கலைவாணரையும் ஒருங்கே காணும் நாம், அந்த ஸ்தூபியை வலம்வந்து விட்டுப் புறப்படுகின்றோம்.

நாகர் கோயிலில் நின்றபோது நமக்கு இனம் புரியாத ஓர் உணர்ச்சி பெருகிக்கொண்டே இருந்தது. காரணம், கலைவாணரை ஈன்ற பூமி அல்லவா அது. கலைவாணர் ஓடியாடி விளையாடிய புழுதியல்லவா அங்கே இருப்பது. அவர் பாதம் பட்ட புழுதியில் நாம் பாதம்பட நாம் எத்தனை பக்கியம் செய்திருக்கவேண்டும்!

எப்படியும் இன்று இராப்பொழுதை நாம் இந்தநாகர் கோயிலில் கழித்துவிட்டோமானால், விடிந்ததும், விடியாததுமாய் மலையாளதேசம் புறப்பட்டுவிடலாம். நாகர்கோயிலைத் திட்டத்தில் மலையாளம் சேர்க்கப்படவில்லை ஆரம்பத்தில்! ஆனால் சேர்க்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தில் நாம் தள்ளப்பட்டோமே!.....

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 ஆகஸ்டு மாதம் 2-ந் தேதி

194 ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

வகுப்புவாத கூச்சல்!

சிங்களப் பகுதிகளில் வகுப்புவாத சக்திகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. கிளர்ச்சிகள் செய்யவும் இயக்கங்கள் நடத்தவும் ஏற்பாடுகள் நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன. அதற்காக நாடெங்கும் பல்வேறு பெயர்களில் ஸ்தாபனங்களை நிறுவுகின்றனராம்.

தமிழ் மொழியை அழித்து, இறுதியில் தமிழ் பேசும் இனத்தையே ஒழிக்கத் திட்டமிட்ட சிங்கள வகுப்புவாதிகள் திட்டப்படி நடவடிக்கைகள் எடுத்து வந்தனர். அரசாங்கத் திணைக்களங்களில் அவர்கள் பேயாட்டமாடினர். சில திணைக்களங்கள் அவர்களின் கோட்டைகளாகவும் மாறின. மந்திரிகள் சிலர் அவர்கள் சொற்படி ஆடினர். நிர்வாக சேவையே சீர்குலைந்தது.

அவர்களால் அரசாங்கம் வீழ்ச்சியடையும் நிலை தோன்றிய போதுதான் கூட்டரசாங்கம் பதவி ஏற்றது. இதனால் வகுப்புவாதிகள் கொட்டம் ஒன்றும் அடங்கிவிடவில்லை.

ஆனால் தோமசுவரன் வழக்கின் தீர்ப்பு அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அத்தீர்ப்பின் விளைவாகக் கட்டாய ஓய்வு ஓராண்டு காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டதும் வகுப்புவாதிகள் கொதிப்படைந்தனர்.

எனவே வகுப்புக் கலகங்களைத் தூண்டிவிட இன்று முயற்சிகள் நடைபெறுகின்றன. பௌத்த ஜாதிக பலவேகயா, சிங்கள ஜாதிக்க சங்கமய, ஜாதிக்க விமுக்தி பெரமுன போன்ற வகுப்புவாத ஸ்தாபனங்கள் 'சிங்கள இனம் அழியப் போகிறது, பௌத்தம் அழியப்போகிறது' என்றெல்லாம கூச்சல் எழுப்பிச் சிங்கள மக்கள் மத்தியில் கலவரங்களைத் தூண்டிவிடத் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. 'தமிழர்களை அழிக்கும் இரண்டாவது துட்டகைமுனு நான்தான்' என்று கூறிக்கொண்டு முன்னாள் மந்திரி ஒருவரும் வகுப்புவாத விஷத்தைக் கக்கத் தொடங்கியுள்ளார். தம்பதெனிப் பிரதிநிதி மலையகத் தமிழ் மக்களுக்கெதிராக நடத்தும் துவேஷப் பிரசாரம் எல்லைமீறிச் சென்றுவிட்டது.

பௌத்த பலவேகயாவின் அரசியற் பிரிவான மக்கள் ஐக்கிய முன்னணி நாடெங்கும் வகுப்புவாதப் பிரசாரமொன்றினை நடாத்த துணிந்துள்ளது. அதன் தலைவர் இவ்வாரம் அனுராதபுரம் துட்டகைமுனு சிலை முன்னால் பிரதிக்ஞை ஏற்று அரசியற் சட்டத்தின் 29வது பிரிவுக்கு எதிராகப் பிரசாரத்தைத் தொடங்கவிருக்கிறார்.

தென் மாகாணத்திலே ஒரு பிக்குவின் தலைமையில் 'தேசிய ஒற்றுமை சபை' என்ற பெயரில் தமிழர் எதிர்ப்பு ஸ்தாபனமொன்று தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த ஸ்தாபனங்கள் நாடெங்கும் பல்வேறு இடங்களில் இராகிய சங்கங்களை நிறுவியிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. ஒவ்வொரு அரசாங்கத் திணைக்களங்களிலும் வகுப்புவாத ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்ட இராகிய பௌத்த சிங்களக் குழு இயங்கிவருகிறதாம். இவர்களுக்கு இரு சிங்களத் தினசரிகள் வேறு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன.

பிரபல பிக்குகள் லெனின் ஆதரவைப்பெற்ற இந்த ஸ்தாபனங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு, எந்தவிதமான உரிமையோ சலுகையோ அறவே வழங்கக் கூடாதென அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன. அரசியற் சட்டத்தின் 29-வது விதியை நீக்கிவிட வேண்டுமென்றும் அவை கிளர்ச்சி செய்யத் தொடங்கியுள்ளன. ம. ஐ. முன்னணி இக் கிளர்ச்சியில் முன்னணி தாங்குகிறது. இவ்விதியில் சிறுபான்மையோருக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதால் அது அரசியற் சட்டத்திலேயே இருக்கக்கூடாதாம்.

கள்ளக் குடியேற்றம், தோட்டத் தமிழ்மக்கள் ஆகியவை இவ் வகுப்புவாதிகளின் மற்றுமிரு போர்முனைகளாகும்.

இவ்வாறு சிங்கள வகுப்புவாதிகள் நாடெங்கும் திட்டமிட்டு ஸ்தாபன ரீதியாக வகுப்புவாதக் கிளர்ச்சியைத் தொடங்கியுள்ளனர். இக்கிளர்ச்சியின் நோக்கம் அரசாங்கத்தைப் பணியவைத்து, தமிழ்பேசும் இனத்தை அழிப்பதற்கான தங்களின் கொள்கையை அமுல்நடத்துவதே!

வகுப்புவாதிகளின் கிளர்ச்சி வலுக்க வலுக்க ஆட்சியாளர் அவர்களுக்கு விட்டுக்கொடுத்து அடிபணியக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

அரசாங்கக் கட்சியினுள் இவ் வகுப்புவாதிகளுக்குக் கணிசமான ஆதரவு இருக்கிறது. அரியலை உரைக்கு திரு. இராஜரத்தினவின் திருத்தத்தின்மீது வாக்கெடுப்பு நடத்தியபோது, அரசாங்கப் பிரதிநிதிகள் சிலர் சபையிலிருந்தே நழுவிச் சென்ற சம்பவம் குறிப்பிடத்தக்கது. நெற்காணிச் சட்டத்துக்குத் தமிழ்பேசும் மக்களை பாதிக்கும் வகையில் திரு. இராஜரத்தினா பிரேரித்த திருத்தத்தை அரசாங்கக் கட்சியினர் ஆதரித்து வாக்களித்திருந்தும் வகுப்புவாதக் கொள்கைக்குப் போதுமான ஆதரவு அரசாங்கத்தில் உண்டு என்பது புலனாகிறது.

இந்த நிலையில் கூட்டரசாங்கம் வகுப்புவாதத்தினின்று விடுபட்டுள்ளது என்று கருதுவது முற்றிலும் தவறாகும். ஆனால் தற்போது சிங்களப் பகுதிகளில் பரவலாக பல்வேறு ஸ்தாபனங்களால் தொடங்கப்பட்டுள்ள வகுப்புவாத துவேஷப் பிரசாரத்துக்கு உடனடியாக மற்றும் புள்ளி வைக்காவிட்டால், அதன் விளைவு விபரீதமாகி விடுமென்பதை ஆட்சியாளர் உணரவேண்டும். மீண்டும் தலைதூக்கிவரும் இச் சிங்கள வகுப்புவாத சக்திகளை இரும்புக் கரம்கொண்டு நசுக்காவிட்டால், வகுப்புக் கலவரங்கள் தோன்றி, இரத்தக்களறி ஏற்பட்டு, அமைதி குலைந்து போவதுடன், அந்த வகுப்புவாதம் பூதாகரமாக வளர்ந்து, இறுதியில் அரசாங்கத்தையே விழுங்கிவிடுமென்று எச்சரிக்கின்றோம். இவ்விடயத்தில் கடந்தகால படிப்பினைகளை ஆட்சியாளர்களுக்கு உதவட்டும்!

பொலீஸ்-ராணுவத்துக்கு பெரிய தொகை ஒதுக்கல்

தமிழ் பேசும் இனத்தை தகர்க்கும் முயற்சி

கள்ளக் குடியேற்றக் காரர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகவும், அதைத் தடுக்க இராணுவ; பொலீஸ் படைகளுக்கான செலவுகளை அதிகரிப்பதாகவும் அரசாங்கம் சாட்டுக் கூறிவருகிறது. இந்நடவடிக்கை உண்மையில் கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கவா, அல்லது தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கவா, என்பது தெரியவில்லை. கள்ளக் குடியேற்றக்காரர் பற்றிய புள்ளி விபரங்களிலும் பாரதூரமான தவறுகள் இருப்பது கண்கூடு.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்திரை வெளியேற்ற வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் கிளர்ச்சிகள் செய்து வருவதைப் பொருட்படுத்தாமல் மென் மேலும் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவம் பொலீஸ் முதலியவற்றின் ஆதிக்கத்தை அதிகரிக்கச் செய்து வருகிறது அரசாங்கம். இம்முறை வரவு செலவுத் திட்டத்தில், கடந்த வருடங்களையும் பார்க்க ஏராளமான தொகை 'கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை' என்ற பெயரால் ஒதுக்கப்பட்டுள்ளமை பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்கு மிகுந்த கிலேசத்தை அளிப்பதாயிருக்கிறது.

கள்ளக் குடியேற்றம் முன்பிருந்தது போல் இப்பொழுது நடைபெறுவதில்லை. ஆனால் அரசாங்கம் தரும் புள்ளி விபரங்களில் காணப்படும் தொகை முன்னைய வருடங்களையும் விட கடந்த வருடம் அதிகரித்திருப்பதாகக் காட்டுகிறது.

கள்ளக் குடியேற்றக்காரர்கள் என்று கூறிக்கொண்டு இந்நாட்டிலே பிறந்து வளர்ந்து, இந்நாட்டின் வம்சாவளிப் பிரஜைகளாக விளங்கும் தமிழ்பேசும் மக்களையே பொலீசாரும் இராணுவத்தினரும் கைது செய்து வதைக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இதற்கான ஆதாரங்களை நாம் வெளியிட்டிருக்கிறோம். கள்ளத் தோணிகள் என்ற குற்றச்சாட்டுடன் பொலீசாரால் அல்லல் படுத்தப்பட்ட பலரைத் தமிழரசுத் தலைவர்கள் போராடி மீட்டுள்ளனர். மலையகத்தில்வாழும் ஏழைத் தோட்டத் தொழிலாளத் தமிழ் மக்களை-இந்திய மண்ணின் நிறத்தையேதெரியாதவர்களை -கள்ளத்தோணியில் வந்து புகுந்தார்கள் என்று கூறி, அவர்களை நாட்டைவிட்டு அகற்றுவதற்கான முயற்சிகளை எத்தனை முறை தான் பொலீசார் செய்துள்ளனர்!

யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் திருகோணமலையிலும் ஏனைய கரையோரங்களிலும் அனாமதியாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களை இரவோடு இரவாக பொலீஸ் வண்டிகளில் ஏற்றிச் சென்று, அடித்து உதைத்து இம்சித்து வதம் புரிவதுதான் கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கும் முறையா?

இந்நாட்டுக் குடிமக்களை, குறிப்பாக தமிழ் பேசுவோரை வேண்டுமென்றே கைது செய்வதைக் கொண்டு நிரப்பப்படும் புள்ளி விபரங்களை உண்மையான கள்ளக் குடியேற்றக்காரர்களின் எண்ணிக்கை என்று காட்டுவது எப்படிப் பொருந்தும்?

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான உத்தேச செலவுத் தொகை இரட்டிக்கப்பட்டிருக்கிறது.

கள்ளக் குடியேற்றத் தடுப்பு என்ற போர்வையில் அரசாங்கம் தமிழ் பேசும் மக்களை மென்மேலும், இராணுவ உதவியுடன் அடக்கி ஒடுக்கவே திட்டங்கள் வகுத்து செயல் புரிகிறது என்பது இத்தகைய புள்ளி விபரங்களிலிருந்து தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

கள்ளக் குடியேற்றத் தடுப்புக்கான உத்தேச செலவு விபரம்

வரைவு மதிப்பீடுகள் 1964—65

1964—65ம் ஆண்டுக்குரிய உத்தேசச் செலவு மதிப்பீட்டுக்கான பிரசுரத்தில், கள்ளக் குடியேற்றத் தடுப்புக்கு பொலீஸ், இராணுவம் முதலியனவற்றுக்கான செலவுகள் தரப்பட்டுள்ளன. கடந்த வருடங்களை விட இச் செலவினங்கள் அதிகரித்திருப்பதன் நோக்கம், தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கவே என்பது தெட்டெனத் தெரிகிறது.

பொலீஸ்

1962—63ம் ஆண்டுக்கான செலவு	1963—64ம் ஆண்டுக்கா செலவு மதிப்பீடு	1964—65ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு
ரூ. 131210-00	ரூ. 111598-00	ரூ. 300000-00

இராணுவம்

1962—63ம் ஆண்டுக்கான செலவு	1963—64ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு	1964—65ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு
?	?	ரூ. 303500-00

(கடந்த ஆண்டுகளில் செலவிடப்படாத புதிய செலவு உருவாகியிருப்பதை அவதானிக்கலாம்)

இறைவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசை, வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு இல்லை என்ற நிலை ஏற்படின் இப் பகுதிகளில் சிங்களம் புகுத்தப்படலாம், எனவே அத்தகைய நிலை உருவாகாது இருப்பதற்கு முதலில் தமிழ் பேசும் மக்கள் தமது தொடர்புகளைத் தமிழில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்னல்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழும் மக்களே நம்புகின்றார்கள், அதன் கடந்த கால நிகழ்ச்சிகள் இந்த நம்பிக்கையை மேலும் வலியுறுத்துகின்றன.

நாம் நீதியின்வழி நின்று போராடுகிறோம். நீதி தோற்றது என்று வரலாறு இல்லை. ஆகவே, தமிழ்பேசும் வாலிபர் பட்டாளம் நமது முன்னணியின் கீழ், திரண்டு இனத்தின் விடுதலைக்கு உழைக்க ஒன்றுபடவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

ஆயுள்வேத கல்லூரிக்கு மூடு விழா?

சிங்கள மொழிப் போதனைக்கு முதல் நடவடிக்கை

யாழ்ப்பாணத்திலுள்ள ஆயுள்வேதக் கல்லூரியை மூட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. சித்த, ஆயுள்வேத, யூனாநி வைத்தியத் துறையில் ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன் மட்டுமல்லாது அம்முறைகளை முற்றிலும் ஒழித்துவிடவும் அரசாங்கம் முயற்சித்து வருகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரி தரம் குறைந்தது என்ற காரணம் காட்டி அதை மூடி விடவும், முஸ்லிம் மக்கள் பின்பற்றும் யூனானி முறையையும் ஒழித்துக்கட்டி விட்டுச் சகலருக்கும் சிங்கள மொழி மூலம் ஆயுள்வேத முறையைப் போதிக்க அரசு எடுக்கும் முயற்சியின் முதற்படி இது என்று தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஆயுள்வேதக் கல்லூரி மிகவும் தவறான முறையில் நடைபெற்று வருகிறது. நான்கு வருடங்கள் இக் கல்லூரியில் பயின்று பரீட்சையில் தேறுபவர்கள் அரசாங்க அங்கீகாரம் பெற்றுப் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களாக கடமை பார்க்க இதுவரை காலமும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

1964ம் ஆண்டு தை மாதத்திற்குப் பின்னர் இக்கல்லூரியில் பயின்று வருவோரை வைத்தியர்களாகப் பதிவு செய்ய இலங்கை ஆயுர்வேத சபையினர் மறுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண ஆயுள்வேதக் கல்லூரியிலும் வைத்தியர்களைப் பதிவு செய்யக் கூடாதென மேலிடத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கம்பகாவில் ஆயுள்வேதக் கல்லூரி ஒன்று இயங்கிவருகிறது. தகுந்த சாதனங்களோ வசதிகளோ இல்லாதிருந்தும் வெளிநாட்டில், சிங்கள வைத்திய மாணவர்களுக்கே போதனை அளிக்கப்படுவதனால் இக்கல்லூரியில் கல்விபயிலுவோருக்கு எவ்வித இடையூறும் அரசாங்கத்தால் கொடுக்கப்படுவதில்லை.

வைத்திய மாணவர்கள் பதிவுசெய்யப்படுவதை நிறுத்தியதைத் தமிழ்பேசும் மக்களில் பலர் எதிர்த்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணக் கல்லூரியின் தகுதியைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு விசாரணைசபை தெரிவுசெய்யப்பட்டது.

இச்சபையில் இடம்பெற்றிருந்தவர் ஒருவரையிட்டு பலத்த அபிப்பிராயபேதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. கொழும்பிலுள்ள ஆயுள்வேதக் கல்லூரியில் போதகாசிரியராகக் கடமை பார்க்கும் இவர் இல ஒதுக்கலில் மும்முரமாக ஈடுபடும் அரசினரின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு அனுசரணையாக விருந்து வருகிறார் என்பதனாலேயே விசாரணையில் இவர் இடம்பெறுவதை பலரும் ஆட்சேபித்தனர்.

இலங்கையின் பல பாகங்களிலும் இன்று ஆயுள்வேத யூனானி வைத்தியப் பயிற்சியில் தமிழ்பேசும் மாணவர்களே பேரார்வம் காட்டி வருகிறார்கள். இத்துறையில் ஈடுபடும் தமிழ்பேசும் இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், சிங்களத்தில் பயிலும் மாணவர்கள் தொகையினரைக்கூட்டவும் அரசாங்கம் திட்டமிட்டே இத்தகைய இனத் துரோகச் செயலில் ஈடுபட்டு வருகிறது. அரசின் இத்தகைய கீழ்த்தரமான செய்கைகளுக்கெதிராக தமிழ்பேசும் மக்கள்—குறிப்பாக யூனானி வைத்திய முறையை ஆதரிக்கும் முஸ்லிம் பெருமக்கள்—கிளர்ந்தெழுந்து, தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது.

கம்பகாவிலுள்ள சிங்கள ஆயுள்வேதக் கல்லூரி கட்டிட வசதிகள் மற்றும் கல்வித்தரம் அனைத்தும் குறைந்திருந்த போதும் அதை மூடும் முயற்சியில் யாரும் முனையவில்லை. அத்தகைய முயற்சி அவர்களுக்கே ஆபத்தாக அமையலாம். ஆனால் யாழ்ப்பாண ஆயுள்வேதக் கல்லூரி கட்டிட வசதிகளும் கல்வித்தரமும் மேம்பட்டிருந்த போதும் அதை மூடும் முயற்சியில் முனைந்திருக்கிறார்கள். அதற்கு அத்துறையைச் சேர்ந்த தமிழ்ப் பிரமுகர் சிலரே காரணமாகவும் உள்ளனராம்.

இச் செய்தி அச்சுக்குப் போகும் சமயத்தில் (30-7-64 வியாழக்கிழமை) யாழ்ப்பாணம் ஆயுள் வேதக் கல்லூரி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட புதிய ஆணைக்குழு மோட்டார் வண்டிகளில் கொழும்பு நகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. யாழ்ப்பாணம் செல்வதற்குப் புகையிரத வசதிகள் இருந்த போதும் பொது மக்களின் வரிப்பணத்தை தேவையற்ற வழிகளிலும் இன மொழிப்பு நடவடிக்கையிலும் விரயம் செய்யும் அரசாங்கம் ஆணைக் குழுவை மோட்டார் வண்டியில் உல்லாசக் சுற்றுலாவிற்கு அனுப்பி வைத்துள்ளது என்று ஒரு முக்கியஸ்தர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

தமிழ் அரசாங்க ஊழியர்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்களுக்கு வெ உரிமைகள் பெற்றுக் கொடுப்பதும் ஒன்று' என்று பெரிய பொய் ஒன்றைக் கூறினாராம். அந்த உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் அம்சம் எது என்று மட்டும் ஏன் கூறவில்லை? (இருந்தால் அல்லவா கூறுவதற்கு) அப்படிப் பேசிய பிரமுகர் சிங்கள மொழியில் வரையப் பட்டிருந்த 14 அம்சத்திட்ட உண்மைப் பிரதியைப் பார்த்திருக்கலாம். அதற்கு அவரின் சிங்களத் தலைவர்கள் கொடுத்த மொழிபெயர்ப்பை தேவவாக்கு என்று நம்பி தினப்பத்திரிகைகளையே படிக்காது அல்லது நம்பாது இருந்திருக்கலாம். இந்த உண்மையை ஏன் மறைக்க வேண்டும்?

தமிழ் பிரமுகரின் பொய்யுரை

அதே தமிழ்ப் பிரமுகர் 'எமது முயற்சியால் சிங்களம் தெரியாத அரசாங்க உத்தியோகத்தரின் கட்டாய ஓய்வு ஒருவருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது' என்றும் ஒரு அபாண்டமான பொய்யைக் கூறியுள்ளார்.

சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாத தமிழ் அரசாங்க ஊழியர்களின் பதவி ஒரு ஆண்டு காலம் நீடிக்கப்பட்டது பற்றி பாராளுமன்றத்தில் திரு. கே. எம். பி. இராசரத்தினா கேட்ட ஒரு கேள்விக்கு நிதி மந்திரி டாக்டர் பெரேரா கூறிய பதிலில் பதவி நீடிப்பதற்கும் தனக்கும் (பெரேராவுக்குப்) எத்தகைய தொடர்பில்லையென்றும் அது பொது சேவை ஆணைக் குழுவின் நடவடிக்கை என்றும் தெரிவித்துள்ளார். அவரின் பதில் பாராளுமன்ற விவாத அறிக்கை (கான்சாட்) யில் உள்ளது. இப்படியிருக்க அப்பிரமுகர் 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது' போன்ற பெறும் அபாண்டமான பொய்யைக் கூறியுள்ளார்.

உண்மையைத் திரித்து தமக்குச் சாதகமாக அரசியல் லாபம் பெறுவதென்றால் சமசமாஜப் பிரமுகர்கள் எதிர்பார்த்தால் நிச்சயம் ஏமாற்றுவார்கள். சமசமாஜவாதமும் தேசிய வாதமும் தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவும் என்றும் தமிழ் பேசும் மக்கள் எண்ணியே நம்பியிருந்தார்கள். [illegible] வது மில்லை.

தமிழ்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் வெகுவாக ஈர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். காணி அமைச்சரின் செலவினங்களில் கணிசமான தொகையை வெட்டியிருப்பதுடன், உணவு மந்திரியின் செலவினங்களையும் கட்டுப்படுத்தியுள்ளார் என்பது புலனாகின்றது.

காணி அமைச்சின்கீழுள்ள நீர்ப்பாசனத் திணைகளத்தின் செலவினங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை நம்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விளை நிலம் இந்நடவடிக்கையினால் மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்படலாம் என்று வர்ணிக்கப்படுகிறது.

மீன்பிடித் தொழிலாளர்களுக்குத் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கேற்றவகையில் மீன் பிடித் திணைக்களம் இதுவரை காலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், தனிப்பட்ட வகையிலும், மீன் பிடித்தலுக்கான கருவிகள் வாங்க முற்பணம் கொடுத்து உதவி வந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் அரசாங்க மான்யங்களும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிதி வருடத்தில் இத்தகைய உதவிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்று தோன்றுகிறது.

காணி அமைச்சிலும், உணவு அமைச்சிலும் நிதி அமைச்சர் கைவைத்திருப்பதையிட்டு பலதரப்பட்ட கருத்துக்கள் அரசியல் அவதானிகள் மத்தியில் அடிபடுகின்றன.

தமிழ் பேசும் விவசாயிகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் திரு. பண்டாரநாயக்க பிரேரித்தார்.

'இலங்கைப் பிரசை என்றால், தற்போதுள்ள சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரசை என்ற தகுதி பெற்றவர்களை மட்டுமே குறிப்பிட வேண்டும்' என்ற திருத்தத்தையே திரு. இராசரத்தினா கொண்டு வந்தார். திருத்தத்தையிட்டுப் பேசும் போது திரு. இராசரத்தினா, 'பிரசை என்ற பதத்துக்கு அரசாங்கம் இருவேறு கருத்துக்களைக் கொண்டிருக்கிறதா?' என்று வினவினார்.

விவசாயி, பிரசையல்லாதவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு நிலச் சொந்தக்காரரின் மீது சுமத்தப்படுவதன் மூலம், அவரின் கீழுள்ள விவசாயிகளைக் கஷ்டப்படுத்தி இந்தச் சாட்டில் விலத்தி விடக் கூடாதென்பதே நோக்கமெனத் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திரு. இராஜரத்தினாவுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

திரு. இராசரத்தினாவின் திருத்தத்தை எதிர்த்துத் தமிழரசுக் கட்சியும், கொம்யூனிஸ்ட் கட்சியும், ஐ. என். பி. யும், திரு. மு. சிவசிதம்பரம், திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோரும் வாக்களித்தனர்.

ஆளும் கட்சியுடன் சேர்ந்து சமசமாஜக்கட்சி உறுப்பினர்களான அமைச்சர் திரு. அனில் முனசிங்கா, திருமதி விலியன் குணவர்த்தனா ஆகியோர் வாக்களித்தனர்.

சமசமாஜக் கட்சியினர் சிறுபான்மை இனத் தொழிலாளர்களுக்கு மிகப் பெருந்தீங்கை விளைவிக்கவல்ல, வகுப்புவாத நோக்கமுடைய திரு. இராசரத்தினாவை ஆதரித்தமை டாக்டர் நாகநாதனின் ஆத்திரத்தைக் கிண்டி விட்டதில் வியப்பில்லை.

'நீங்களும் துரோகிகள் வரிசையில் சேர்ந்துவிட்டீர்களா?' என்று ஆத்திரத்துடன் கேட்டார். இராசரத்தினாவின் பக்கம் தமது பார்வையைச் செலுத்திய டாக்டர் நாகநாதன் பின் வருமாறு கூறினார்:

'நான் சவால் விடுகிறேன் திரு. இராசரத்தினா தன்னுடைய தந்தையாரின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தையோ, அவருடைய பாட்டனாரின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தையோ சமர்ப்பிக்க முடியுமா? இதற்கு மேல் சொல்லப் போனால், அவர் தென்னிந்தியாவைச்சேர்ந்த 'கோனார்' என்பதை அவர் உணர்வாரா?'

மாமாங்கத் தீர்த்தம்

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தமாக விளங்கும் மட்டக்களப்பு அமிர்தகளி மாமாங்கப் பிள்ளையார் கோயில்வருடாந்த உற்சவம் ஜூலை 29-ம் திகதி ஆரம்பமாகியது. 7-8-64 அன்று தீர்த்தோற்சவத்துடன் விழா முடிவடையும்.

தீர்த்தோற்சவ நிகழ்ச்சிகளனைத்தையும் அன்றுபகல் 8.30 தொடக்கம் 12 மணி வரை முதன்முதலாக இலங்கை வானொலியினர் அஞ்சல் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு அபிவிருத்திக்கழகம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் பயனாகவே இம்முறை தொடக்கம் அமிர்தகளியில் நடைபெறும் ஆடி அமாவாசைத் தீர்த்த நிகழ்ச்சிகள் வானொலியில் அஞ்சல் செய்யப்படுகின்றன.

'எனது பேச்சை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான சிங்களத்தில் நிகழ்த்த விருந்ததை அறிந்த தமிழ் பேசும் ஊழியர், அவரின் கருத்தைத் தாமும் அறியும் நோக்கமாக ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்திருந்தார்களாம். ஆனால் மந்திரி அவர்கள் தனது பேச்சு தமிழில் மொழிபெயர்க்கக் கூடாது என்று கூறி மொழிபெயர்ப்பாளரின் இலவச சேவையையும் தட்டிக் கழித்துவிட்டாராம்.

கொழும்புத்துறைமுகத்தில் பெருந்தொகையினர் தமிழ் பேசும் ஊழியர்கள் என்பது அறிந்ததே. தமிழ்பேசும் ஊழியர்களில், நாவாய் இயக்குனர் மொழி வழித் தொழிற்சங்கக் கோட்பாட்டை ஏற்று 'துறைமுக நாவாய் இயக்குனர் கழகம்' என்ற பெயரில் மொழி வழித் தொழிற் சங்கமொன்றிலும், ஏனைய தமிழ்பேசும் ஊழியர்கள் 'கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்' என்ற மொழி வழித் தொழிற் சங்கத்தில் இணைந்திருக்கிறது.

ஆதார்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொ. இரத்தினம் அவர்களும் திருக்கோணமலையில் நடைபெறும் தமிழரசுக் [illegible] மாநில மாநாட்டில் கலந்துகொள்ள [illegible] யிருப்பதால் அம்மாநாடு நடைபெறும் நாள்களிலும் விழாவிலே கலந்து கொள்ள முடியாதென அறிவித்துள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
தலைமை நிலைய அறிக்கை

ஆகஸ்டு மாதம் 21, 22, 23, ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 9 வது மாநில மாநாட்டின் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கு கட்சி உறுப்பினர்கள் அனைவரும் முன் கூட்டியே பிரவேசச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிரவேசச் சீட்டு இல்லாதவர்கள் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது. உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாகச் செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, 16, அல்பிறட் ஹவுஸ் தோட்டம், கொழும்பு-3 என்ற முகவரிக்கு எழுதி பிரவேசச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

16, அல்பிறட் ஹவுஸ் தோட்டம்,
கொழும்பு-3
1—8—64

பொதுச் செயலாளர்
இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கப் பிசைப்புப் போட்ட மூக்குக்கண்ணாடி வெங்கடிரோவின் ஒளிப்பிழம்பின் தாக்கலைத் தாங்கமாட்டாது பளபளத்துக்கொண்டிருக்க-நெற்றியின் வேர்வை நிலத்திலே சிந்துவதோடு நில்லாமல், கூலியாட்களின் உடலிலிருந்து மானத்தைக்காத்த சீலைத் துண்டையும் மழை நீரென ஆக்க-தம்பையா தனது வேலி அடைக்கும் கூலியாட்களை மேற்பார்வை செய்துகொண்டிருக்கிறார். ஊரிலே தம்பையா என்ற பெயர் மலிந்த காரணத்தினால் இவரை எல்லோரும் 'சிங்கப்பூர் தம்பையா' என்று தான் அழைப்பார்கள்.

சள்ளத்தை வெள்ளையால் மறைப்பதற்கென உடுக்கப்பட்ட மடிப்புக் குலையாத வெள்ளை வேட்டி, தொந்தியை மறைப்பதற்குத் தொங்கவிடப்பட்ட சால்வையின் வெள்ளைச் சலவையோடு போட்டி போட்டுக் கொள்கிறது.

உள்ளத்தில் உவகை பொங்க, எண்ணத்தின் உச்சத்தை அடைந்த தம்பையா தனது கையிலேயிருந்த செய்தித் தாளால் சிறிது வீசிக் காற்றை அனுபவிப்பதோடு நில்லாமல்-தொடர்ந்து செய்தித்தாளைப்பிரித்து ஏதோ திரவியப் பெட்டகத்தைக் கண்ட நிலையை எய்தினார். 'சான்ஸே னெக்கெட்ட' நிலையை அடைந்த தம்பையா தன்னை மறந்தார், உள்ளத்தில் எரிபட்ட உவாச்சி உடலையெல்லாம் புளகாங்கிதம் அடையச் செய்துவிட்டது.

பெருமையைப் பெரிதாக்கிக் காட்டாதமனமுண்டோ என்று எல்லையில்லா எண்ணத்தின் பிரதிபலிப்பாக செய்தித் தாளைப் பிரித்து அங்கே பொறிக்கப்பட்டிருந்தபடங்களைக் கூலியாட்களுக்குக் காட்டினார்.

'பாருங்கடா பாருங்கள், இதில் திரிபவர்கள் யார், யார் என்று தெரியுமா?'

கை சோர்ந்த களைப்பு மாறுவதற்கு, எங்கே பிரிந்து நேரம் கிடைக்குமென்றிருந்த கூலியாட்கள் தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்தார்கள்.

'இதெல்லாம் உங்களுக்கு எங்கேயடா தெரியப் போகுது. நானேயேப்பரைப் பார்த்த பின்தானே கண்டுபிடித்தேன்.'

அங்கே உள்ள ஒரு உருவத்தைத் தவிர்த்து மற்றைய எல்லாக் கூலியாட்களும் பொழுதைக் கடைக்குள் புகுந்து திண்டாடும் [illegible] போல் ஆவலுடன் [illegible] படத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

'ஆகா...!, என்ன அழகு? [illegible] ஸ்பீக்கரில் இடக்கை வைத்து நிற்கும் நிலையே தனி அழகு. அந்த வலக்கையை உயர்த்திப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் எனக்கு ஒன்றும் சொல்லவே வருகுதில்லை!'

கட்டத்திற்கு விளம்பரம் செய்வோர் கூறும் வார்த்தைகளால்-வர்ணிப்பால் ஏமாறும் பொது சனங்கள் போல் தம்பையாவின் வார்த்தைகளால் ஏமாறப்பட்ட கூலியாட்கள் தம் செவிகளையும் கண்களையும் கூர்மை போக்கி ஆவலோடு நின்றார்கள்.

ஆவலைத் தூண்டி பின்பு அனுபவிக்க வைக்கும் தன்மையான 'உச்சக் கட்டம்' என்ற பதத்தின் தன்மையை உணர்ந்தவர் போல் தம்பையா தனது வார்த்தைகளை வளர்த்தார்.

'இவன் எனது மகன் துரை. (கொழும்பிலே இவனை 'தொரை' என்பதை அவர்களுக்குக் கூறுவதற்கு மறந்தேவிட்டார்) கொழும்பிலே பெரியதோர் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆண்டுக்கூட்டத்தில் பேசுகிறான்.'

'ஐயாவுக்கென்ன...,சின்ன ஐயாவுக்கு பெரிய, பெரிய ஆட்களெல்லாம்...'

'உதென்னடா கதை. இன்னடக்குத் துரையின் பெருமை, அவனின் பெருவிரல் ஆடினால் தெரியும். அந்தப் பெருவிரல் ஆடினால் கொழும்பே ஆட்டங் கண்டதுமாதிரித்தான். கொழும்பிலே பெரிய, பெரிய முதலாளிமார்கள் எல்லாம் தம்பியைக் கும்பிட்டு விருந்து வைக்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளேன்.'

இதிலுள்ள பொய்யையும் புளுகையும் அவர்கள் எங்கே அறியப்போகிறார்கள் என்ற துணிவில் அளவுக்கு மிஞ்சி தம்பையா தன்னாலானமட்டும் மேன்மேலும் கதையை வளர்த்தார்.

'தம்பியின்னா மேடைப் பேச்செல்லாம் வெட்டிச் சேர்த்து வைத்திருக்கிறேன், பற்றி நாங்கள் ஏதேனும் கேட்டோமோ? வட்டிக்கு வட்டி வாங்குவதை...'

அட தம்பி அழகாகவும் அலங்காரமாகவும் பேசினியே.'

'ஏன் எங்கள் நாக்குக்கு...'

'சும்மா, இவன் பொடியன் யாரடா?'

'நம்ம சின்னப்பனின் மகன் தான். ஏதோ படிச்ச பிள்ளை தெரியாத்தனமாகப் பேசிப்போட்டான். நீங்கள் பெரிய மனது வைத்து மன்னிக்கவேண்டும்.'

'படிச்சவனா? கதைப்பான். கதைப்பான்! பொடியனுக்கு படிச்சுக்கொடுத்தேன் என்ற தலைவீக்கம் கொஞ்சமிருக்குப்போலே. பொடியா, நான் நல்லவனுக்கு நல்லவன், கெட்டவனுக்குக் கெட்டவன். என்னோடு மிண்டுவது இடியன் மாட்டோடு மிண்டுவது போல்தான் இருக்கும்.'

'இல்லே..., அதோடு..., ஐயா நீங்கள் ஏதோ தேவையற்றவைகளைப் பேசுவதுபோல் எனக்குத் தெரிகிறது.'

'டே; யாருடன் கதைக்கிறாய் என்பது தெரியுமா?'

'தங்களுடன்தான்...'

'கூலிப் பயல்களுக்கு வாய் அதிகம், கொஞ்சம் இடங் கொடுத்தால் படம் பிடுங்கு வாங்கள்.'

முடியுங்கோ, நேரம் போய் விட்டது செய்த வேலை தருகிற கூலிக்கே போதாது. பிடுங்கி எறிந்த பக்கம் முற்றாக அடைக்காவிட்டால் கூலி தரமுடியாமலிருக்கும், தெரியுமா? சுறுசுறுப்பாக வேலை செய்யுங்கோ.' ஆத்திரத்தின் பிரதிபலிப்பை தம்பையாவின் முகம் எடுத்துக்காட்டியது.

'ஐயா, நாங்கள் நேரக் கூலிக்காரர்கள். பகல் ஒன்றரை மணிவரைதான் வேலை செய்வோம். மிகுதியிருந்தால் நாளைக்கு செய்வோமே தவிர்த்து முற்றாக இன்றைக்கு அடைக்க முடியாது. அந்த நியதியை எம்மால் ஏற்கவும் முடியாது. அது தவிர்த்து நாங்கள் முற்றாக அடைத்துத் தரவேண்டுமாகில் எங்களுக்கு புறம்பாகச் சம்பளம் தரல்வேண்டும். இல்லாவிட்டால் ஒன்றரை மணிக்கே வீட்டுக்குச் சென்றுவிடுவோம். அதற்குப் பிறகு எம்மால் ஒரு அங்குலமும்தானும் அடைக்க முடியாது.' இது குமாரின் உரிமைக் குரல்.

'அதெல்லாம் ஒன்றரை மணிக்கு பார்த்துக்கொள்ளலாம். உங்களுக்கெல்லாம் எப்பொழுது பார்த்தாலும் கூலி, கூலி என்ற கூச்சலேயல்லாது, மற்றவர்கள் தருகிற கூலிக்கு உழைக்க வேண்டுமென்ற எண்ணமே இருப்பதில்லை.'

★

நேரம் இரண்டரை மணி என்பதை எடுத்துக் காட்டிவிட்டது. வேலிவேலையும் நிறைவேறிவிட்டது. தம்பையாவின் உள்ளம் உள்ளுக்குள்ளிருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாது என்பதை நாம் எல்லோரும் அறிவோமல்லவா?

பொழுதுக்கென்ன போய்க்கொண்டிருக்கும், பொழுதைக் கழிப்பவர்கள் கழித்துக்கொண்டிருப்பார்கள்—ஆனால், ஒவ்வொரு கணப்பொழுதும் கண்போல் பாவிப்பவர்களுக்கு அல்லவா அதன் அருமை தெரியும்! போன பொழுது திரும்பி வராது என்ற உண்மையை அறிந்திருந்தும் வீண்காலங் கழிப்பவர்களை நாம் என்ன தான் செய்யவாம்?

வேலி அடைத்தவர்களின் மன நிலையில் அவர்களின் நேரத்தில் ஒவ்வொரு நிமிடமும் வீணே கழிவதாக உணர்ந்தார்கள். அன்றைய பொழுதுக்குள் செய்யவேண்டிய எவ்வளவோ வேலைகள் அவர்களைக் காத்துக்கொண்டிருந்தன. அவைகளை நினைத்தவுடன் அவர்களின் அடிவயிறே பகீரென்றது.

பிள்ளைகளுக்குப் பசிக்குப் பால் வாங்கவேண்டியவர்கள் தொடக்கம்—வீட்டிலே வயிற்றுக்கும் பசி மாட்டுக்கு தீவனம் தேட வேண்டியவர்கள் வரை அங்கே தம்பையாவின் கூலிப்பணத்திற்காகத் தவங்கிடந்தார்கள்.

ஆனால், தம்பையரோ விட்டிற்குள் கொழும்பிலேயிருந்து வந்த மகன் துரையோடு கூக நலம் விசாரிப்பது தொடக்கம், உடல் நோகாமல் வேலைசெய்ததினால் குளுமாடுபோல் வளர்ந்திருந்த மகனின் உடல் தளர்ந்து போனதே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்.

குமாரின் எண்ணமும் உள்ளமும் இன்னும் பொறுமையைச் சாதிக்க விரும்பவில்லைப்போலும்! பெரியவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையுடன், அவரைக் கூலிப் பணத்தைத் தரும்படி வினயமாகக்கேட்டான். குமாருடன் முன்பு நடைபெற்ற வாக்குவாதத்தால் நோவுற்றிருந்த தம்பையா, இப்பொழுது இவர்களைப் பழிவாங்க எண்ணுகிறார் என்பதை இவர்கள் உணர அதிக நேரம் செல்லவில்லை.

'எப்படி? நான் நல்லவனுக்கு நல்லவன்—மற்றவர்களுக்கு...என்பதின் அர்த்தம் புரிகிறதா...?' என்று தனது உள்ளத்தையே திறந்து காட்டிவிட்டார் தம்பையா.

'ஏதோ உலகத்தில் ஒருவரும் சாதிக்கமுடியாத ஒன்றைச் சாதித்து விட்டீர்கள் என்ற எண்ணமோ?'

'பொடியன் ஏதோ திமிர் எடுக்கிறான்!'

'திண்டு, திண்டு, தின்ன முடியாமல் திணறுகிறவர்கள்தான் திமிர் எடுப்பார்கள்! நாங்கள் ஒரு நேரம் தானும் முழு வயிற்றையும் நிறைவோடு நிரப்பியிருக்க மாட்டோம், அப்படியிருக்க எங்களிடம்தான் திமிர் இருக்கிறது என்று கூறினால் அதன் அர்த்தம் என்னவாகும்? உங்களிடம் தின்திமிரல்ல—பணத்திமிர், ஆணவத்திமிர், இப்படியே அடுக்கிக்கொண்டு போகுமளவிற்கு பெருவாரியான திமிர்கள் மலிந்து இருக்கிறதே!'

'அப்படியே எல்லாவற்றையும் அறிந்திருந்தும் வால் காட்டத்திமிப்பதில் ஏற்படும் பலாபலன்களைத் தெரியுமா?'

'தெரியாமலா...? நமக்குக் கூலி தராமல் விடுவீர்கள், வேறு கூலிப் பட்டாளங்களைக் கொண்டு எங்களைத் துன்புறுத்துவீர்கள், கெடுதல் செய்வீர்கள். ஆனால், எங்களின் உள்ளத்தில் உதித்த உணர்ச்சியை ஒன்றும் செய்ய மாட்டீர்கள்!

'கூலிப்பயலே! பொத்தடா வாயை. அதிகம் பேசி எனது ஆத்திரத்தைக் கிளறாதே...' என்ற கோபக்கிளிப் பேச்சோடு தம்பையா தனது வாசற்படியைத் தாண்டிவிட்டார்.

இமயமலைக்குப் படிவெட்டி ஏறக் கூடிய உடல் வலிமை பெற்ற கூலியாட்கள் தம்பையா வீட்டுப் படிவை "படிதாண்டாப் பத்தினி" போல, — வெளியே நின்று 'ஐயா; 'ஐயா' என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அடுப்பிலே சட்டியினுள் கொதித்துக் கொண்டிருக்கும் பாலும் சூட்டின் தாக்கம் தாங்கமாட்டாது பொங்கி எழும்பி, வெளியே சரிவது இயல்புதானே! எதுவும் எல்லையை மீறினால் முறை தவறுவது உலக இயல்பாக இருக்கையில், இந்தத் தொழிலாளர்கள் தான் எவ்வளவு தூரம் பொறுமையோடு காத்துக்

(15-ம் பக்கம் பார்க்க)

பார்த்தியென்டால் மயக்கம் போட்டு விழுந்திடுவியள்.'

'ஐயா, ஒருவாய்க்கு வெத்திலை போடத் தாரியளா?'

'அடடா, உங்களுக்கெல்லாம் வெத்திலைபோட்டுக் குவிக்க, நானென்ன பெரிய குபேரனுக்கவலோ இருக்க வேண்டும்? உங்களுக்கென்ன வீட்டிலேயிருந்து கொண்டு வந்தால் இப்படி கச்சாப்பித்தனமாக மிச்சம் பிடித்து என்னதான் செய்யப் போகிறீர்களோ என்று எனக்கு விளங்கவில்லை.'

செய்திகள் திசை மாறிவிட்டன. இவ்வளவுக்கும் அமைதியாக நின்ற அந்த உருவம் முன்னுக்கு வந்துவிட்டது.

'ஐயா! நீங்கள் வெற்றிலை தர விரும்பாவிடில்முடியாது என்று கூறுங்கள். எங்களை ஏமாற்றிப் நாங்கள் மிச்சம் பிடிப்பது எங்களுக்கு! அதன் விபரமோ-முடிவோ உங்களுக்குத் தேவையற்றது. நீங்கள் மிச்சம் பிடித்து வட்டிக்குக் கொடுப்பதைப்

'ஐயா, பட்டம், பதவி, தராதரம் பெரும்போக்கு எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது!'

'தம்பி, ஒன்றும் பேசாமலிரடா. பெரியவர்களிடம் எமக்கேன் தொந்தரவு.' பயந்த சுபாவமோ அன்றி கூலியாட்கள் தங்கு நிமிர்ந்து பேசக்கூடாது—குனிந்து தான் பேசவேண்டுமென்ற எண்ணமோ தெரியாது, இது சாதுவான குணமுள்ள பரமுவின் வார்த்தைகள்.

'பரமு, உன்னைப் போல் ஆட்கள் ஆயிரத்துக்கொருக்கால் தான் பிறப்பார்களடா, நீ, சிறந்த அறிவாளியடா!' உள்ளபடி உள்ளதை உணராததால் தம்பையாவின் பேச்சும் மதிப்புப் பெறுகிறது.

'ஐயா, உங்களின் துவிநாக்குக் தேனும்—அடி நாக்கு நஞ்சும் அதிகநாள் வேலை செய்யாது. எதெற்கும் ஒரு எல்லை உண்டென்றுதான் [illegible]

'அதெல்லாம் கிடைக்கட்டும். வேலையைக் கெதியாக

சமயகுரவர் வரலாற்றில் சேக்கிழாருடன் பேராசிரியர் தெ. பொ. மீ. மாறுபடுகிறார்

'ஈழமும் தமிழும்' நூல் பற்றிய விமர்சனக் குறிப்பு

பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கடந்த ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இலக்கிய மாநாடொன்றில் நிகழ்த்திய சொற்பொழிவை அங்கு பயிலும் ஈழத்து மாணவர்கள் சிலர் நூல்வடிவில் வெளியிட்டுள்ளார்கள். 'ஈழமும் தமிழும்' என்ற அந்த நூலில் ஈழத் தமிழ் பேசும் மக்களின் இன்றைய நிலைதொட்டு சங்ககாலப் பூதத்தேவனார்வரை மேலெழுந்தவாரியாக ஆராயப்பட்டுள்ளது. அந்த நூல்பற்றிய ஆராய்வு கண்ணோட்டத்தில் இக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒக்டோபர் 1963-ல் நடைபெற்ற கிழக்கு மேற்கு இலக்கிய மாநாட்டில் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரன் நிகழ்த்திய பேருரையை அங்கு பயிலும் ஈழத்து தமிழ் மாணவர்கள் நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர்.

நூலின் முதற் பகுதி இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் உள்ள நெருங்கிய நில அமைப்பு ஒற்றுமையைப் பற்றிய நில அமைப்பு ஆய்வாளர் கூறிய கருத்தை ஏற்று நிற்கிறது. இரண்டாவது பகுதியில் சிங்கள இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பாண்டியநாட்டு மக்கள் கலப்போடு உருவாகியதென்பதை நூலாசிரியர் தெளிவுற எடுத்துக்காட்டுகிறார்.

புத்தமத தோற்றம்

புத்தசமயம் பற்றி நூலாசிரியர் கூறுகையில் புத்தசமயம் இந்து மதத்தை சீர்திருத்தும் நோக்கோடுதான் தோன்றியதென்று கூறுகிறார். புத்தசமயத்தை இந்துமதத்தின் உட்பிரிவு என்று கூறும் சில அறிஞர் கருத்தை இதுஒட்டி விளங்குகிறது. இக் கருத்திற்கு மாறுபட்டோர் புத்தமதம் ஒரு புதுமதம்—ஒரு புது தத்துவம் என்று மொழிகின்றனர். நம் மணிவாசகரோ 'புத்தம் முதலாய புல்லறிவும் பல்சமயம்' என்று அதனைக் கண்டிப்பதையும் யாம்மறப்பதற்கில்லை. ஆனால் இந் நூலாசிரியர் மொழிந்த மைக்கமைய ஒரு காலத்தில் எம் தமிழருள் ஒரு பகுதியினர் புத்த நெறியைதழுவி நின்றனர் என்ற கருத்து ஏற்கத் தக்கதே.

தமிழ், சிங்களம்

தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகள் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகையில் தமிழை திராவிட மொழிக் குழுவை சார்ந்ததென்றும் சிங்களத்தை இந்தோ ஆரிய குடும்பத்தை சார்ந்ததென்றும் கூறும் கருத்து ஏற்கக் குறைய எல்லோரும் ஏற்க முடிபு. ஆனால் இவ்விரு மொழிகளின் வளர்ச்சி பற்றிக் கூறுகையில் இவ்விரு மொழிகளும் தமக்குள் கடன் பெற்று வளர்ந்துள்ளன என்று அவர் தெரிவிக்கும் கருத்து பொருத்தமுடையதாய் அமையவில்லை. சிங்களம் தமிழிடம் கடன் பெற்று வளர்ந்த அளவிற்கு தமிழ் சிங்களத்திடம் கடன் பெற்றதிற்கு சான்றில்லை. எனினும் இவ்விருமொழிகளும் குறிப்பாக சிங்களம் வடசொற்களைத் தமதாக்கிக் கொண்டது உண்மை. புத்த மதம் பற்றி சிங்கள அறிஞர் மட்டுமன்றி தமிழ் அறிஞரும் தாவி மொழியில் நூல்கள் எழுதியுள்ளார்கள் என்று அவர் தெரிவிக்கும் கருத்து வரலாற்று உண்மையாகும். காஞ்சிபுரத்து புத்த பல்கலைக் கழகமும் இக்கூற்றுக்கு சான்று பகர்ந்து நிற்கிறது.

கல்வெட்டுகள் காட்டும் உண்மை

கல்வெட்டுகள் பற்றி திரு. 'தெ. பொ. மீ' அவர்கள் செப்பும் செம்மொழிகள் வரலாற்று ஆசிரியர்களுக்கு சிந்தனையைத் தூண்டுவதோடு சுவை பொருந்தியதாகவும் விளங்குகிறது. 'பெருமகன்' என்ற தூய தமிழ்ச்சொல்லை ஈழத்து பழைய சிங்கள கல்வெட்டுக்களில் காணக்கூடியதாய் இருக்கிறதென்று குறிப்பிடும் ஆசிரியர் ஈழக்குடும்பிகள் என்றசொல் தமிழ் நாட்டு கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டிருப்பதையும் கூறிச் செல்கிறார். முன்னையகூற்று மிகத் தொன்மை காலத்திலேயே தமிழ் சிங்களத்துள் எவ்வளவு தூரம் புகுந்துள்ளனதையும் பின்னைய கூற்று தமிழ் நாட்டில் இருந்து ஈழத்திற்கு மட்டுமல்ல ஈழத்தில் இருந்தும் தமிழ்நாட்டிற்கு ஈழத்தமிழ் மக்கள் சென்று குடியேறியுள்ளனர் என்ற அரிய உண்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

பண்பாடு பரவல்

பண்பாடு பரவி விரிவடைதல் என்ற பகுதியில் தமிழரின் கடல் வணிகம், கலை உணர்ச்சி முதலியவற்றைக் குறிப்பிடுகிறார். போதிவர்மன் என்ற பல்லவ இளவரசன் தான் சீனத்தில் உள்ள சென் புத்த (Zen Buddhism) மதத்தை தோற்றுவித்தான் என்று ஆசிரியர் அறுதியிட்டுக் கூறுகிறார். இக் கருத்து உண்மையெனின் ஒரு தென்னகப் பெருமகன் பெருமையை எண்ணி யாம் பெருமைப்படலாம். ஆனால் இக் கூற்றை எல்லா அறிஞர்களும் ஏற்றுள்ளார்களா என்பதுதான் கேள்வி.

பல்லவரின் சட்டக்கலை கீழை நாடுகளில் பரவிய விதத்தை அழகுற எடுத்துரைத்திருப்பர். இப்பத்தியைப் படிக்கும்போது பல்லவர் தமிழர் என்ற கருத்துத் தொனிக்கிறது. பல்லவர் யார் என்பதுபற்றி அறிஞரிடை இன்னும் கருத்து வேற்றுமை நிலவும்பொழுது பல்லவரைத் தமிழரென யாம் ஏற்பது ஏற்புடையதா என்பது அறிஞர் சிந்தித்தற்குரியது. வரலாற்று மரபு என்ற பத்தியில் வேந்தன் எல்லாளன் பெருமையை ஏற்றமுற எடுத்துரைக்கும் ஆசிரியர் அம் மன்னனின் மாற்றார் மதிக்கும் மாண்பினையும் சான்றுகளோடு விளக்குகிறார். அத்தோடு எல்லாள மன்னன் திருவள்ளுவரின் சிறப்புமிகு மாணவன் என்று தென்னகத்தின் நிலவும் நம்பிக்கையையும் கூறிச் செல்கிறார்.

சங்கச் செய்யுள் மரபு என்ற பகுதியில் ஈழத்து உணவு பற்றிப் பட்டினப்பாலை பகருவதைக் கூறும் ஆசிரியர் கரிகாலன் சிங்களக் கூலியாளரைக்கொண்டு காவேரிக்கு அணைகட்டுமுன் தென்னகம் உணவிற்கு ஈழத்தை எதிர்பார்த்திருக்கக்கூடும் என்ற ஐயத்தையும் எழுப்பியுள்ளார். சங்க இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்ற ஈழத்து பூதத்தேவனார் பற்றியும் அவரின் அகத்துறை இலக்கிய ஆற்றலையும் விரிவாக ஆராய்கிறார். மக்களிடை எழுந்த காதல் காலப் போக்கில் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்டதையும் குறிப்பிடும் இவ்வாசிரியர் இக்காதற் தத்துவம் புத்த மதத்திற்குள் ஒரு பிரிவினையைக் கொண்டு வந்ததையும் தெளிவுற விளக்குகிறார். கடல் சூழ் இலங்கை கயவாகு தோற்றுவித்த பத்தினிவழிபாடு இலக்கியங்களைக் காலவரை செய்து ஆராயத் துணை புரிகிறது என்ற கருத்து ஏற்புடையதே.

ஈழவேந்தன்

தேவாரம்

தேவாரம் என்ற தலைப்பில் திருக்கேதீசுவரத்தைப் பற்றியும் திருகோணமலை பற்றியும் ஞானசம்பந்தரும் சுந்தரரும் பாடல்கள் பாடியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் இதுவரை எமக்குக் கிடைத்த சான்றுகள் கொண்டு பார்க்கும் போது சுந்தரர் கோணமலை பற்றிப் பாடியதிற்குச் சான்றில்லை. சுந்தரர் திருக்கேதீசுவரத்தை மிக விரிவாக வருணிப்பதில் இருந்து சுந்தரரும், ஞானசம்பந்தரும் கேதீசுவரத்திற்கும் கோணேசுவரத்திற்கும் வந்து வழிபட்டுச்சென்றிருக்கவேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார். இவரின் இக்கருத்து சேக்கிழாரின் கருத்தோடு மாறுபட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. சேக்கிழாரோ அல்லது தெ. பொ. மீ. தெரிவித்த கருத்தோ வரலாற்று உண்மைக்கு உட்பட்டதென்பதை அறிஞர் தொடர்ந்து ஆராய்தல் நலம். அத்தோடு இப்பத்தியைப் படிக்கும் போது சுந்தரர்தான் கோயிற் காட்சிகளை அழகுற வருணிப்பதில் உயர்ந்து விளங்கிறார் என்ற பொருள் தொனிக்கிறது. ஆனால் குறிப்பாக ஞானசம்பந்தர் கோணமலையை பற்றி வருணிக்கும் திறன் சுந்தரர்க்கு அவர் சற்றும் குறைந்தவர் அல்லரென்பதை இனிது எடுத்து இயம்புகிறது.

தமிழ் இலக்கியத்தில் புத்தம்

தமிழ் இலக்கியத்தில் புத்தம் என்ற தலைப்பில் 'மணிமேகலை' நூல் தோன்றிய காலத்தில் புத்தரின் திருவடியையே வணங்குகிற முறை நிலவியதென்றும் பின்பு தான் முழு உருவத்தையும் வழிபடும் முறை ஏற்பட்டதென்றும் ஆசிரியர் தெரிவிக்கும் கருத்து வரலாற்று அடிப்படையில் உண்மை போற்றோன்றுகிறது. புத்தம் தமிழை வளர்த்ததற்கும் தமிழ் புத்தத்தை வளர்த்ததற்கும் இப்பத்தியில் சான்றுகள் காட்டுகிறார். சிகிரியா கோட்டையிலும் இசுருமிலியா, தம்புலா முதலிய மலைக்கோயில்களிலும் உள்ள சிற்ப அமைப்பு தென் இந்திய சிற்ப வடிவை ஒத்திருக்கிறதென்று ஆசிரியர் கூறும் கருத்து ஏற்கத்தக்கதே.

யாழ்ப்பாணத்து தமிழரசு

தமிழை வளர்த்த ஈழம் என்ற பத்தியில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் எழுந்த தமிழ் அரசாட்சி பற்றியும், அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பற்றியும் சுருக்கமுற எனினும் விளக்கமுற ஆராய்ந்துள்ளார். இவை அனைத்திற்கும் மேலாக இக் காலத்து ஈழத்தின் தென் பகுதியை ஆண்ட பராக்கிரமபாகுவின் அரண்மனையில் தமிழ் அறிஞர்கள், புலவர்கள் போற்றப்பட்டனர் என்ற செய்தி ஆசிரியர் தரும்போது எம் நொந்த உள்ளம் கொஞ்சம் உவகை யுறுகிறது.

தென்னக ஈழப் பொது மரபு

தென்னகத்திற்கும் ஈழத்திற்கும் உள்ள பொது மரபு என்ற பத்தியில் ஈழத் தமிழறிஞர் பணியைப் பாங்குடன் குறிப்பிடுகிறார். இதுதியில் நாவலரின் பணியை மிகச் சிறப்புடன் போற்றுகிறார். நாவலருக்கு நன்றி நவில்வதோடு கிறித்தவ தொண்டரின் தமிழ்ப் பணியை நன்றி உணர்வோடு போற்றுகிறார். சென்னை பல்கலைக் கழகத்தில் முதற் பட்டதாரியாக வெளியேறிய ஈழத்து சி. வை. தாமோதரம்பிள்ளையைப்பற்றிக் குறிப்பிடும் போது எமக்குப் பெருமை உணர்ச்சி ஏற்படுகிறது. ஈழத்து இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியைக் குறிப்பிடும் போது விபுலாநந்த அடிகளுக்குத் தனி வாழ்த்துக் கூறுகிறார். சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோரின் பணிக்கு உரிய முதன்மை கொடுத்துப் பாராட்டுகிறார்.

மலைநாட்டுத் தமிழர்

மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்கள் பற்றி தனிப் பத்தி அமைத்து அவர்களின் இன்றைய இழி நிலை பற்றி இரங்கும் இவ் ஆசிரியர் அரசாங்கம் அவர்களின் குடியுரிமையைப் பறித்ததிற்கு அவர்களின் பொதுவுடைமை கொள்கைச்சார்பே (Socialist) காரணமாய் இருக்கலாம் என்று கூறும் கூற்று ஏற்கத்தக்கதல்ல. இத்தொழிலாளர் தமிழர் என்பதற்காகவே இவ்விதம் ஒதுக்கப்பட்டு நசுக்கப்பட்டுள்ளார்கள் என்பது வெள்ளிடை மலை.

ஈழத்தின் இன்றைய இலக்கிய வளர்ச்சி

ஈழத் தமிழர் தமிழ் அறிஞரை அழைத்து ஈழத்தவரை தாயக மக்கள் அடிக்கடி அழைக்காததற்கு பொருளாதாரத் தாழ்வு தான் காரணம் என்று நூலாசிரியர் கூறும் கூற்று வலிமையுடையதாக அமையவில்லை. ஈழத்து இன்றைய இலக்கிய வளர்ச்சி பற்றி ஆசிரியர் குறிப்பிடுகையில் யாப், கதை, கவிதை முதலிய துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளோம் என்று கூறுகிறார். சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஆகிய இதழ்களின் பணியையும் அவர் வாழ்த்த மறக்கவில்லை. ஈழத் தமிழரின் சூழ்நிலைக்கு ஏற்ப பாடநூல்கள் இயற்றப்படுவதை இந் நூலாசிரியர் வரவேற்றார். அவரின் இக் கருத்து பாராட்டத்தக்கது.

தனித்தலைமை பேண வேண்டும்

நூலின் இறுதிப் பகுதியில் ஆசிரியர் தென்னகமும் ஈழ

(13-ம் பக்கம் பார்க்க)

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி தாமரை | நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11 | தொலைபேசி 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் திரைப்படத்துறை

சீரழியும் நிலைக்குக் காரணம்?

புரட்சி நடிகர் விளக்குகிறார்

தமிழ்த் திரைப்படத்துறை இன்று மந்த நிலை அடைந்திருப்பதற்கு புது முகங்களுக்கு இரசிகர்கள் நல்லாதரவு காட்டாமையும் ஒரு முக்கிய காரணமாகும். தமிழ்ப் படங்கள் பல திரைக்கு வர முடியாமலிருப்பதனால் பல தியேட்டர்களில் வேற்று மொழிப் படங்கள் திரையிடப்பட்டுள்ளன. தமிழ்த் திரை உலகம் சீர் திருந்துவதானால் புது முகங்களுக்குத் தயாரிப்பாளர்களும் இரசிகர்களும், பொது மக்களும், பத்திரிகையாளர்களும் பேராதரவு காட்டவேண்டும். இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தமிழ்த் திரைப்படத்துறையின் தற்போதைய நிலை பற்றி பத்திரிகை நிருபர்கள் மத்தியில் கலந்துரையாடும்போது கருத்து வெளியிட்டார்.

புது நடிகர் நடிகைகளை வைத்துத் தயாரிக்கப்பட்ட படங்கள் அவ்வளவு வெற்றியளிப்பதாகத் தெரியவில்லை. எங்களையே திரும்பத் திரும்ப திரையில் பார்க்க இரசிகர்கள் ஆசைப்படக் கூடாது. பொது மக்களின் ஆர்வம் எங்கள் திசையில் மட்டும் திரும்பத் திரும்பத் தூண்டப்படுவதால் இரசிகர்களும் எங்களையே மென்மேலும் திரையில் சந்திக்கும் ஆர்வத்தில் மேம்பட்டுக் கொண்டே வருகிறார்கள். தயாரிப்பாளர்கள் இனிமேலாவது தரமான புதுமுகங்களை வைத்துக்கொண்டு படங்களைத் தயாரிக்கவேண்டும். என் போன்றவர்களையே தங்கள் தங்கள் படங்களில் புகுத்த நினைப்பதால் எங்களுக்கும் மிகுந்த ரெமமே ஏற்படுகிறது. இதே போன்று எத்தனை நாட்களுக்குத்தான் எங்களால் உழைக்கமுடியும்?

இன்றுள்ள தமிழ்த் திரைப்படத்துறை மந்த நிலைக்கான காரணங்களில் பல படங்கள் குறிப்பிட்ட தலைமையில் திரையிடப்படாமையும் ஒரு காரணம் என்று கூற வேண்டும். 'பொம்மை' போன்ற நல்ல உத்தியுள்ள படங்கள் புதுமுகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள காரணத்தால் திரைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன்.

இதே போன்றவை தமிழ்ப் படங்கள் வெளிவர முடியாதிருப்பதனால் கோடிக்கணக்கான பணம் முடங்கிக் கிடக்கிறது. இத்தகைய படங்கள் எல்லாம்வெளிவந்து வெற்றிகரமாக ஓடவேண்டும். இதற்கு இரசிகப் பெருமக்களும், குறிப்பாகப் பத்திரிகையாளர்களும் உதவ வேண்டும். இவற்றில் இருக்கக் கூடிய சில குறைகளையும் இரசிகர்கள் பொறுத்தருள வேண்டும்.

இந்த ஆண்டு தொடங்கி இற்றை வரை ஆக 17 படங்களே வெளியாகியுள்ளன. சென்ற ஆண்டுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் வேதனையே ஏற்படுகிறது. தமிழ்ப் படங்கள் போதுமான அளவு வெளிவராத காரணத்தினால் தமிழ்ப் படங்கள் ஓட்டப்படும் தியேட்டர்களிலெல்லாம் பிற மொழிப் படங்கள் இடம் பிடித்துக் கொண்டன.

தமிழ்த் திரை உலகுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் இழிநிலை நீங்குவதற்குப் பொது மக்கள் புது முகங்களுக்கு ஆதரவு தரவேண்டும். நல்ல திறமையுள்ள புது முகங்களும் முன்னுக்கு வர வேண்டும். புது முகங்களுக்குத் தயாரிப்பாளர்களும் நல்லாதரவு தரவேண்டும்.

'பாய் விரித்தான் குளிரவச்சான்'

மண்ணுறங்கப்
பாய்விரிச்சான்
கொடி இடையில்
காப் பறிச்சான்
குத்துவிளக்கைக்
குறைச்சுவச்சான்
கொதித்திருந்தேன்
குளிரவச்சான்'

மெல்லிய குரலில் இனிமை கொட்ட எழுந்தது கவிஞரின் குரல். கவிஞர் கண்ணதாசனின் பாடலாகத்தான் இருக்குமோ என்று நாம் அறியும்போது, கவிஞர் வாலி எழுதிய பாடல் என்று கூறப்படுகிறது.

ஆர். ஆர். பிக்சர்சுக்காக ராமண்ணா டைரக்ஷனில் உருவாகும் புதிய படம் ஒன்றுக்கு இப்பாடல் ஒலிப்பதிவாகிறது. எம். ஜி. ஆரைப் பற்றி கே. ஆர். விஜயா வர்ணிக்கும் இக்கட்டம் விரைவில் படமாக்கப்படவிருக்கிறது. 'மெல்லிசை மன்னர்கள்' இதற்கு இசை அமைத்துள்ளனர்.

நடக்கவிருப்பவை

மகாமழையில் இதய ஓசை

யாழ்ப்பாணத்தில் பல முறைகள் அரங்கேற்றப்பட்ட பரியோவான் கல்லூரி நாடகமன்றத்தினர் தயாரித்திருக்கும் 'இதயஒசை' என்ற நாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஓகஸ்டு 8-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

மனோகரன், குமரகுருபரன், ஜெயேந்திரா, ஜெயானந்தன், ஆனந்தரூபன், புனிதவேல், செல்விகள்: கனகரத்தினம், மரியாம்பிள்ளை, மரியநாயகம் முதலியோர் நடிக்கும் இந்நாடகத்தை கே. பரமோதயன் நட்டுவாங்கம் செய்துள்ளார்.

அளவெட்டியில் இசைவிழா

அளவெட்டி இசைக்கலை மன்றத்தினரின் இசைவிழா 31-7-64 முதல் 2-8-64வரை அளவை கும்பழாவளைப் பிள்ளையார்கோவில் வடக்கு வீதி அரங்கில் நடைபெறுகிறது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பல இசை விற்பன்னர்கள், நாதஸ்வர மேதைகள் இவ்விழாவில் பங்கு கொள்ளுகிறார்கள்.

மூன்று நாட்களும் இசை நிகழ்ச்சிகளுக்கு முறையே கலையரசு சொர்ணலிங்கம், திரு. ஆர். என். சிவப்பிரகாசம், திரு. எம். வைரமுத்து ஆகியோர் தலைமை தாங்குகின்றார்கள்.

எமது விமர்சனம்

படித்தால் மட்டும் போதுமா?

ராஜு படித்தவன். கோபால் படிப்பற்றவன். ஒரு தாய் வயிற்றில் பிறக்காவிட்டாலும் இராமனும் இலக்குமணனையும் போல் இணைபிரியாத சகோதரர்களாக வாழ்கின்றனர். தரகர் கைலாசத்தி தயவால் படித்த ராஜுவுக்கு பட்டிக்காட்டில் பிறந்த பண்புள்ள மனைவியாக சீதாவும், படிப்பற்ற முரடனான கோபாலுக்குபடித்ததனால் பண்பை மறந்த அகம்பாவக்காரியான மீனாவும் மணப்பெண்களாக வாய்க்கின்றனர். ராஜுவும் சீதாவும் இன்பத்தில் திளைக்க கோபால் துன்பத்தில் துவளுகிறான்.

தம்பிக்காகப் பெண் பார்க்க அண்ணனும், அண்ணனின் பெண்ணைப் பார்க்க தம்பியும் சென்று, எதிர்மாறான முடிவு ஏற்படுவதனால் நிலைமையே தடுமாறுகிறது. தன்னிச்சையை நிறைவேற்ற ராஜு செய்த ஒரு சிறு தவறு, குடும்பத்தையே நிர்மூலமாக்குகிறது. தனது உயிருக்குயிரான அண்ணனை வெறுக்காமலும், குடும்ப கௌரவத்தைக் குலைக்காமலும் இருக்க கோபால் கையாண்ட உபாயம், இறுதியில் அண்ணனைக் கொலைசெய்த குற்றவாளியாக்கி கோடுவரைக்கும் இழுத்துச் செல்கிறது.

கதாசிரியருக்கு வாய்த்த கதையில் உள்ள ஒரே ஒரு மையம், சாதாரண ஒரு மொட்டைக் கடிதம். ஒரு மொட்டைக் கடிதத்தை வைத்தே ஜமீந்தார் குடும்பத்தில் பெரும் புயலை உருவாக்கியிருக்கிறார்கள். சிறு கதையாகஇருந்தபோதிலும் சுவை குன்றாமல் வளர்க்கப்பட்டுள்ளமை இயக்குநர் பீம்சிங்கின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

படிக்காத முரடன்கோபாலாக சிவாஜி கணேசன் தோன்றுகிறார். அவருடைய பாத்திரத்தை நாம் எப்படி எடைபோடமுடியும்? கச்சிதமான முறையில் செய்துள்ளார். ராஜுவாக பாலாஜியும் அவர் மனைவி சீதாவாக சாவித்திரியும் தோன்றுகின்றனர். சாவித்திரி அடக்கமான ஒரு பண்புள்ள குடும்பப் பெண்ணாகக் காட்சி தருகிறார். அகம்பாவம்பிடித்த படித்த பெண்ணாக ராஜசுலோசனா வருகிறார். தரகர் பாத்திரம் ராதாவுக்குத் தரப்பட்டுள்ளது பலதரப்பட்ட கருத்துக்களையும் பக்குவமாக, நகைச்சுவையுடன் தருகிறார். சகஸ்ரநாமம், ரங்கராவ், மனோரமா முதலியோரும் சேர்ந்து நடித்துள்ள படமான 'படித்தால் மட்டும் போதுமா' குடும்பத்தினர் ஒவ்வொருவரும் பார்த்துப் பயன்பெறவேண்டிய நல்ல கருத்துக்களைக் கொண்டு மிளிர்கிறது.

கிடைக்கும் சந்தர்ப்பத்தை அனுசரணையாக்கி தமது கருத்தை வெளிப்படுத்துவதில் கண்ணதாசன் உச்சம் பெற்றுள்ளார் என்பதை 'அண்ணன் காட்டிய வழி அம்மா' என்ற பாடலின் மூலம் அறியக்கிடக்கிறது. தி. மு. க. விலிருந்து வெளியேறும் காலத்தில் இயற்றப்பட்ட பாடலாதலினால் தமது எண்ணத்தை சந்தர்ப்பத்துக்கேற்ப கையாண்டுள்ளார். இரட்டையரின் இசை அமைப்பில் அத்தனை பாடல்களும் இனிமை பயக்கின்றன.

காலம் கடந்து நம்மிடம் வந்தாலும் சுவை குன்றாது இனிமை பயக்கிறது.

—நாதன்—

குழந்தை வருந்துகிறது, ஆனால் காதல் பாட்டு நிற்கவில்லை!

அந்தக் குடிசைக்குள் ஒரு மூலையில் முனகிக்கொண்டு படுத்திருக்கிறாள் செல்வி. அவள் ஒரு சிறுமிதான்.

ஆனால் அவளுக்கு வந்துள்ள வியாதியோ மிகவும் கொடியது. பேச்சு மூச்சற்றுச் சோர்ந்து போய்க்கிடக்கிறாள்.

அவளுடைய அக்கா செல்வியைத் தொட்டுப் பார்த்துவிட்டு அழ ஆரம்பித்துவிடுகிறாள். எவ்வளவு நேரம் தான் அழ முடியும்? இறுதியில் தங்கையைத் தோளில் கமந்துகொண்டு ஓட்டமும் நடையுமாக தர்ம ஆஸ்பத்திரியை அடைகிறாள்.

செல்வியின் உடலை டாக்டர் [illegible] துறையிலே [illegible] ஒருமே புரியாமல் தமக்கை ஆண்டவனை வேண்டித் தவித்துக் கொண்டிருக்கிறாள். "அம்மா இந்தக் கேஸ் ரொம்ப சீரியசாக இருக்கிறது. இங்கே இதற்கு வைத்தியம் பார்க்க முடியாது. எப்படியாவது கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு எடுத்தினிடு போங்க. அங்க சகல வசதிகளும் இருக்கு. நல்லாக் கவனிப்பாங்க. தாம் நிச்சா குழந்தையின் உசிருக்கே ஆபத்தாகலாம். உடனே அங்க கொண்டு போங்க." என்று டாக்டர் யோசனை கூறுகிறார்.

"கட் கட்" என்று இயக்குநர் கோபால கிருஷ்ணன் குரல் ஒலி கேட்கிறது.

காட்சி வேறோர் புறம் புரளுகிறது. அதே 'புளோரி'ல் வேறோர் பக்கமாக ஒரு ஆடவன் பாட ஆரம்பிக்கிறான்:

"பார்த்தாலும் பார்த்தேன்
உன்னைப்போல்
பார்த்ததே இல்லை,
கேட்டாலும் கேட்டேன்
உன் பேச்சைப் போல
கேட்கவேயில்லை"

பாடிக்கொண்டிருந்த அந்த ஆடவனின் முன்னிலையில், சற்று முன்னர் சோகமே உருவாக, தன் தங்கையின் உயிருக்காக துவண்ட அந்தப் பெண், ஆனந்த மேலீட்டால் துள்ளித்துள்ளி ஆடுகிறாள்.

நம்மை அதிசயம் பிய்த்தெடுக்கிறது. ஆனால் கணநேரத்தில் விடயம் புரிந்துவிடுகிறது. கலா சித்திரா

நிறுவனத்தினர் தயாரித்து வரும் "ஆயிரம் ரூபாய் நோட்டு" திரைப்படத்திற்கான இரு வேறு கட்டங்கள் ஒரே நாளில் படமாக்கப்பட்டன.

குழந்தை செல்வியாக பேபி சாவித்திரியும், அவருடைய சகோதரியாக சாவித்திரியும், பாட்டுப் பாடும் வாலிபராக ஜெமினி கணேசனும் தோன்றுகின்றனர். கதை வசனம் நட்டுவாங்கம் ஆகிய பொறுப்புகளை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார். விரைவில் இப்படம் திரைக்கு வருகிறது.

போகம்பரைச் சிறையில் மாஸ்டர் சிவலிங்கம்

பயங்கரக் குற்றங்களைப் புரிந்த கைதிகளின் உறைவிடமான போகம்பரைச் சிறைச்சாலைக்குள் மாஸ்டர் சிவலிங்கம் தமது குழுவினருடன் புகுந்ததாகத் தெரிகிறது.

19-7-64 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகலில் தான் இந்த வேடிக்கை நடைபெற்றது. கண்டியில் நடைபெற்ற விபுலாநந்த விழாவில் வில்லுப்பாட்டு நிகழ்த்துவதற்காகச் சென்ற மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரை போகம்பரைச் சிறைக்குள் அழைத்துச் சென்று விட்டார்களாம். ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறைக் கைதிகளுக்கு முன்னிலையில் 'விண்ணுலகில் விபுலானந்தர்' என்ற நவகச்சுவை வில்லுப்பாட்டை நிகழ்த்தி, கைதிகள் மத்தியில் என்றுமே காணமுடியாத கரை கடந்த உற்சாகத்தை வெளிப்படுத்தினராம் இக் குழுவினர். சிறைச்சாலைப் பொறுப்பாளர்கள், 'இத்தகைய நிகழ்ச்சி போகம்பரை சிறைச்சாலையில் என்றுமே நடைபெற்றதில்லை' என்று பாராட்டினார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தை வெளியேற்றுக

இ. த. அ. க. கொழும்புக் கிளை

வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் வருடாந்தக் கூட்டம் கடந்த வாரம் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. கிளைத் துணைத் தலைவர் வித்துவான் ரீ. மே. யோ. வேதநாயகம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பல முக்கிய தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:

நாடற்றவர்களென்று இலங்கை அரசால் வர்ணிக்கப்படும் இலங்கை வாழ் 12 இலட்சம் மலை நாட்டுத் தமிழ் பேசும் மக்களது குடியுரிமைப் பிரச்சினை முற்றிலும் இலங்கைப் பிரச்சினை என்று, இந்திய அரசின் கொள்கையை மறந்த பாரதப் பிரதமர் நேரு இந்திய பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தற்கிசைய, இந்திய அரசு நேருவின் கொள்கையைப் பின்பற்றி இந்த நாடற்றவர்களின் பிரச்சினையில் எவ்வகையிலும் ஈடுபடாவிடில், காலந்தாழ்த்துவதற்கு இந்திய அரசாங்கத்தினோடு கலந்து பேசித்தீர்க்க வேண்டுமென்று இலங்கை அரசு மீள மீள கூறுவதற்குவாய்ப்பளிக்கப்படாதென்றும் இக்கிளை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

வட கிழக்கு மாகாணத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரும், கடற்படையினரும், விமானப் படையினரும் அணிமையில் சீலர் வாடி, நிருவடி நிலை, தாளையடி போன்ற ஊர்களில் வதியும் தமிழ் பேசும் பொது மக்கள் மீது நடாத்திய வன்முறைகளையும், அவர்களது வீடுகளையும், உடைமைகளையும் தீக்கிரையாக்கி நிர்க்கதிக்குள்ளாக்கிய காடைத்தனத்தையும் இக்கிளை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

சட்ட விரோதமாகக் குடிபுகுவோரை தடுக்கும் நோக்கமாகவே முப்படையும் வட கிழக்கு மாகாணங்களில் குவிக்கப்பட்டு இருப்பதாக இலங்கை அரசாங்கம் வெளியுலகுக்குச் சொல்லிக் கொண்டாலும், அரசாங்கத்தின் அந்தரங்க நோக்கம் தமிழ் பேசும் மக்களது சுதந்திர எழுச்சியையும், விடுதலை வேட்கையையும் ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்குவதேயாகுமென இக்கிளை சுட்டிக் காட்டுவதோடு தமிழ் பேசும் மக்களது சுதந்திரத்தையும் இன நாயக உரிமைகளையும் பாதுகாக்கும் வண்ணம் வட கிழக்கு மாகாணங்களில் குவித்து வைத்திருக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாக இராணுவத்தினரையும், கடற்படையினரையும், விமானப்படையினரையும் உடனடியாகத் திருப்பி எடுக்குமாறு அரசாங்கத்தை இக்கிளை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழ் பேசுமினத்தை அழித்தொழிக்க நாளும் பொழுதும் திட்டமிட்டு செயலாற்றிவரும் சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கத்தின் சிங்களத் திணிப்புக்கு அடிபணிய மறுத்து, வாழ்வின் வசந்த காலத்திலேயே நிர்ப்பந்தத்தின் பேரில் வேலை இழந்து விட்ட தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களது தன்மானவுணர்ச்சியையும் தலைமையாக் கொள்கையையும் இக்கிளை மனமார வாழ்த்துவதோடு தமிழ் பேசும் இனத்தின் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்கு உழைக்க முன்வருமாறு இக்கிளை அவர்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் அரைப் பரப்பு, கால்பரப்பு காணிகளை வைத்துக் கொண்டு அதற்குள் முடங்கிக்கிடக்காமல் ஒரு காலத்தில் இலங்கையின் தானியக் களஞ்சியமாகக் காட்சியளித்த வன்னி நாடு, மன்னார், கிழக்கு மாகாணப் பகுதிகளில் குடியேறி விவசாயம் செய்து வாழுமாறு இக்கிளை கேட்டுக் கொள்கிறது. குறிப்பாக படித்த இளைஞர்கள் அரசாங்க உத்தியோகங்கள் கிடைக்குமென்று ஏமாறாமல் சிறப்பான உழவுத் தொழிலை மேற் கொள்ளுமாறும் இக்கிளை விரும்பிக் கேட்டுக் கொள்கிறது.

இக்கிளையின் நடப்பு வருடத் தலைவராக பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களும், செயலாளராகத் திரு. சி. சிவலிங்கம் அவர்களும், பொருளாளராக திரு. சுப்பிரமணியம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஐவரைக் கொண்ட ஆட்சிக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

முஸ்லிம் எழுத்தாளர்களை.....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷாஜஹானில் எழுதிய திருப்பத்தூர் எம். ஏ. ரஹ்மான் தான் அல்லர் என்ற. அவருடைய பெயர் ஈழத்தில் பிரபலமடையவில்லை.

ஆனால் 'மரபு' ஆசிரியர் எம். ஏ. ரஹ்மான் ஈழத்து இலக்கிய உலகினை தனது பெயரை நிலைநாட்டியுள்ளவர். சிறுவர் இலக்கியத் துறையிலும், உருவகக் கதைத்துறையிலும் இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் மிகத்தரமானவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அத்துடன் நூல் வெளியீட்டுத்துறையில் அவர் ஈட்டியுள்ள வெற்றியை யாவரும் அறிவர். இத்தகைய ஒருவருடைய பெயருடன், ஈழத்தில் அறிமுகமே இல்லாத ஒருவருடைய பெயரை இணைத்து ஆள்மாறாட்டஞ் செய்ய திரு. செல்வராசனை என்ன தூண்டிற்று என்பது எனக்குத் தெரியவில்லை.

'பஞ்சும் பசி'யும் ஆசிரியர் ரகுநாதனும், 'நிலவிலே பேசுவோம்!' ஆசிரியர் ரகுநாதனும், ஒருவர் தான் என்று ஆள்மாறாட்டஞ் செய்ய ஏன் திரு. செல்வராசன் முயலவில்லை?

அவர் ஓர் இஸ்லாமிய எழுத்தாளரைத் தேர்ந்தெடுத்தது நமது எழுத்தாளர் முன்னேறக்கூடாது என்கிற எண்ணத்திலுமேதான் என்றுகருதக் கூடியதாக இருக்கின்றதல்லவா?

அல்ஹாஜ். வ. மி. ஷம்சுத்தீன்,
கொழும்பு-9.

மலைநாட்டிற்கு வாக்கெடுப்பு இல்லையா?

ஒரு தமிழ்த் இனசரியில் கல்வி மந்திரி கதுருகல்லை சிங்களத்தை ஒரு பாடமாக வடமேற் மாகாணப் பாடசாலைகளில் போதிப்பதா இல்லையா என்பதை பெற்றோரிடையே வாக்கெடுப்பு நடத்தியறியப் போகிறார் எனக் குறிப்பிட்டிருக்கிறது. மந்திரியார் என்று சன நாயகவாதியாகமாறினாரோ தெரியவில்லை. அடுத்தடுத்து நடைபெற்ற மூன்று தேர்தல்களில் சமஷ்டிக் கொள்கையை வடமேற் மாநிலங்கள் வலியுறுத்தியது மட்டும் மந்திரியாருக்கோ அவரது சகாக்களுக்கோ தெரியவில்லைப்போலும்.

பாடசாலை வாக்கெடுப்பை நடத்தட்டும். ஆனால் ஒரு நிபந்தனை. அனைத்தொடர்ந்து தமிழருக்கு ஒற்றையாட்சிமேல் விருப்பமா அல்லது சமஷ்டிமேல் விருப்பமா என்பதையும் அறிய ஒரு வாக்கெடுப்பு நடத்தவேண்டும். அதோடு மலையகப் பிள்ளைகள் தமிழையா அல்லது சிங்களத்தையா போதனா மொழி என ஏற்றுக்கொள்வது என்பதற்கும் மலையகப் பெற்றோரிடையே வாக்கெடுப்பு நடாத்த மந்திரி இணங்க வேண்டும். அவர்களும் மக்கள் தானே.

இம் மூன்று வாக்கெடுப்புகளுக்கும் அரசாங்கம் இணக்கம் தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறோம்.

கொழும்பு-6.

அறிவிற்கு மேம்பட்ட....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியிலாப் பேதைகளாகிய இவர்களைக் கண்ட பின்பும் கோல் பிடித்து அவர் பின்னே குருட்டு நடை போடுவது குற்றம் என்று நெஞ்சு கூறிற்று.

சிந்தனை, இயற்கைத் தாய் எனைக் கண்டு சிரிப்பாள். இந்துவைப் பார்ப்பேன். அந்த வதனத்திலே ஒரு அமைதி. இனிய சுகம். எழுந்து சென்றால் சொந்தமான கற்பனைகள் ஒருகோடி தோன்றும். அதை எழுத்தில் வடிக்கத் துணிவு பிறக்காது. அந்த வழி புலவர் கட்கே ஆகிவரும் என எண்ணி அமைதி கொள்ளத்தான் முடிந்ததா?

எந்த வழி உனக்கு வேறு உண்டு? என உள்ளுணர்வு இடிக்கும். முந்தி வந்த வள்ளுவனையும் கம்பனையும், பாராதியையும் கூட முழுதும் காணாதவன் நான். சிந்தை பயம் கொள்ளும். ஆனால் அவா! அது அடங்காத பெருவிடாய். இதற்கிடையே நாட்கள் ஓடின. ஏதோ ஒரு உறுதியை என்னுள்ளே விதைத்துவிட்ட நிம்மதியின் ஓட்டமா அது?

காரிகை கற்று கவி பாடினேன்?

'எழுது. கவி எழுது.'

எங்கிருந்தோ ஆணை பிறக்கிறது.

எதை எழுத? எதற்கெழுத? எந்த வகை எழுத? காணாத குழப்பங்களெல்லாம் சூழ்கின்றன. இதற்கிடையில் கல்லூரிக்குப் போக வேண்டும். போகிறேன். பாடங்கள் புரியவில்லை. வீணாக நாட்கள் தான் போகின்றன.

கடைசியில்...

அந்த ஆணையின் வழி—கவிதை வழி நடப்பதென்று முடிவு செய்கிறேன். அசைக்க முடியாத முடிவு. உண்மைதான். ஆனால் காரிகை கற்றேனா? யாப்புத் தெரியுமா? இந்த வினாக்களுக்கும் விடைகளுக்கும் அவசியமில்லை எனபதை எதிர்காலம் உறுதியாக்கிற்று.

அடுத்த வாரம் எதிர்கொள்கிறது. பத்திரிகையைப் புரட்டுகிறேன். 'நீங்களும் கவிதை எழுதலாம்' என்றொரு விளம்பரம்.

அந்தக் கவிதை

உள்ளத்திலே ஒரு நம்பிக்கைப் பசுந்தளிர் முளைகொள்வதை உணர்கிறேன். அப்போதே பூரிப்பின் நுனியிலே பனித்துளி மின்னுகிறது. தலையைக் கிளப்பி வீதியிலே இறங்கி நடக்கிறேன். எதிரே அந்த வாவியின் வெள்ளலை கைகொட்டிக் கிளுகிளுக்கிறது.

கவிதைப் பொருளை தான் தேடவில்லை. அது கண்ணுள்ளே புகுந்து கருத்தைத் தானாகவே கவ்வியது.

வயல்களைக் கண்கள் வருடுகின்றன. இதயத்தின் மிருதுவான பகுதியிலே அந்தக் காட்சியின் நுனிமுள் மெதுவாகத்தான் படுகிறது. ஆனாலும் வேதனை இனிக்குமா?

பள்ள வயலிடைத்
தூண்டிலால்—பனை
யானை இழுக்கிற
பாலரை—வில்வ
முள்ளில் இடறி
விழுந்ததால்—முட
மாகி முனங்கிடும்
பையனை—நெஞ்சில்
உள்ளிய வாறு
திரும்பினேன்—என்றுன்
உண்மை
புலப்படலானது—ஒரு
பள்ளியிலாத
குறையடா—எனப்
பாட்டுப் பிறந்திடலானது.

அந்தக் கன்னிக் கவிதை 'திமிலதிவு' என்ற தலைப்போடு 'திமிலைத்துமிலன்' என்றபுனை பெயர் தாங்கி, 'கேசரி' ஞாயிறு மலரில் வெளிவந்தது.

சமயகுரவர் வரலாற்றில்..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் தம் தம் இயல்புக்கு ஏற்ப வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். இலக்கியம் படைக்க வேண்டும் என்ற தன் விருப்பத்தை தெரிவிக்கின்றார். தமிழர் தனித் தன்மையைப் பாதுகாத்துக்கொண்டு உலக ஒற்றுமையை நாட வேண்டும் என்பதையும் வற்புறுத்தி நூலை முடிக்கிறார்.

முப்பது பக்கம் கொண்ட இந்நூல் அளவில் சிறியதாயினும் பலதுறை அறிவை, ஆய்வை உள்ளடக்கி விளங்குகிறது. நூலாசிரியரின் பல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளவை, சில, கேள்விக்கு உரியவை. மற்றும் சிலவற்றை எம் உள்ளம் ஏற்க மறுக்கவும் கூடும். ஆனால் நூலை நுகரத் தொடங்கும்போதே எம் சிந்தனை செயல்படத் தொடங்குகிறது. நூலை முடிக்கும்போது எம் உள்ளத்தில் ஓர் நிறைவு ஏற்படுகிறது. இப்பண்பு நூலாசிரியரின் வெற்றிக்குச் சான்று. இப்பேரறிஞரின் சித்தனை ஊற்றை சிறப்புறுமுறையில் நூல் வடிவில் கொண்டுவந்த ஈழத் தமிழ் மாணவரின் தமிழ் உள்ளம் வாழ்க!

நூல்: எழுமும் தமிழரும் (ஆய்வு நிலை)

ஆசிரியர்: பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

பதிப்பகம்: [illegible] நிலையம், [illegible]

விலை: குறிக்கப்படவில்லை.

தலைநகரில்.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் விவேகாநந்த சபையார் நடாத்துவதென்றும், அதற்கு மேற்பட்ட பரீட்சைகளை சைவ பரிபாலன சபையார் நடாத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கல்வி வளர்ச்சியில் பின் தங்கிய மலை நாட்டுப் பகுதியிலும் சமயக் கல்வியை புகட்டவும் அவர்களின் முன்னேற்றத்திற்கு இயன்ற பணியினைச் செய்யவும் கடந்த ஆண்டு நிர்வாகம் பல நல்ல முயற்சிகளை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. வழமையாக சபை முன்னைய ஆண்டுகளில் ஆற்றி வந்த பணியும் தொடர்ந்து குறைவின்றி நடைபெற்று வருகின்றது.

சைவ வாலிபர் பணி

விவேகாநந்த சபையின் அண்மைக்கால ஆட்சிக் குழுவில் கடந்த ஆண்டு பல மாற்றங்கள் நடைபெற்றன. குறிப்பாக நிர்வாகப் பொறுப்பு கடந்த ஆண்டில் செயலாற்றல் உள்ள சைவ வாலிபர் கைக்குக் கிட்டியது. இதற்கு முந்திய ஆண்டு ஆட்சிக் குழு சைவத்திற்கும் தமிழுக்கும் இல்லல் பல இழைக்கும் நாட்டு அமைச்சரவை உறுப்பினர் ஒருவருக்கு சபையில் வரவேற்பு கொடுத்ததே காரணமாகும். இதனால் கொதித்தெழுந்த தலைநகரில் உள்ள சைவ வாலிபர்கள் சபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

நாடும் ஏடும் போற்றும் பல நல்ல பணிகளை மேற்கொண்டனர். இவ்வாண்டும் சபையின் ஆட்சிப் பொறுப்பு பெரும்பாலும் சைவ இளைஞர் கையிலேயே உள்ளது. ஆகவே தலைநகரில் வாழும் மக்கள் மட்டுமல்ல நாட்டில் ஏனைய பகுதிகளில் வாழும் சைவ மக்களும் பல நல்ல நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கிறார்கள்.

—பூங்கோதை.

தமிழரசு.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம், மலைநாட்டைச் சேர்ந்த திருமதி க. கு. அருள்மொழி, மலைநாட்டைச் சேர்ந்த செல்வி டி. எஸ். தவமணி, வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. பொ. பூபால சிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

ஞாயிறு பிற்பகல் 5 மணியளவில் கிளிநொச்சி ரெட்றிக்கோ மைதானத்தில் அமைந்துள்ள 'இராசவரோதயம்' அரங்கில் வாலிப முன்னணித் தலைவர் திரு. நா. செல்லையா தலைமையில் அரசியல் மாநாடு நடைபெறும். தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வாலிப முன்னணிப் பிரமுகர்களும் உரை நிகழ்த்துவார்கள்.

அரசியல் மாநாட்டுக்கு முன்னர் பரந்தன் சந்தியிருந்து பிற்பகல் மூன்று மணிக்கு மாபெரும் ஊர்வலம் ஆரம்பமாகி கூட்டமைதானத்தைப் பிரதான வீதி வழியாக வந்தடையும். ஊர்வலத்தில் கரக, நடன, சிலம்பு விளையாட்டுக்கள் இடம் பெறும். அரசியல் மாநாட்டின் முடிவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

நேர்மை அளித்த மேன்மை

-குரும்பசிட்டி ஆ. மகாதேவன்-

முன்பெல்லாம் தன் கால் ஊனம் என்பது பற்றிக் கவலையில்லை கண்ணனுக்கு. இப்பொழுது அவனுக்கு வயது பதினைந்து பிறந்தால் நொண்டியென்று நையாண்டி செய்யப்படவும், அழகற்றவன் என்று ஒதுக்கி வைக்கப்படவும், தன் நிலையை நினைத்து வருந்தினான். அவனை விட அதிகமாகக் கவலைப்பட்டாள் அவன் அன்னை கற்பகம். காரணம் "நொண்டிப்பிள்ளையைப்பெற்றேனே" என்று அவமானமடைந்து அல்ல. அவன் எப்படி உழைத்து வாழப்போகிறான் என்பதே அவள் கவலை ஆம்-அவனுக்கு கவலையிருப்பதில் நியாயந்தானே?

கற்பகத்தின் கணவன் சொற்பகாலத்திற்கு முன் கார் விபத்தொன்றில் அகப்பட்டுக் காலம் சென்று விட்டார். அவள் சாய் கறிகளை வாங்கி விற்று அதில் கிடைக்கும் இலாபத்தில் வாழ்க்கையை ஓட்டி வந்தாள். "நான் இருந்து விட்டுக் கண்ணே மூடினால் கண்ணனின் கதி என்ன" என்று நினைத்து மனம் வருந்தினாள். நொண்டியானாலும் கண்ணனுக்கு மனம் ஒடியவில்லை. ஏன் நானும் உழைத்து பணம் சம்பாதிக்க முடியாது என்று எண்ணினான். அம்மா இல்லாத சமயம் பார்த்து "அப்பாத்துரை அன் சன்ஸ்" வியாபாரத் தலத்துக்குச் சென்று அவரிடம் தன் குறையை முறையிட்டான். அவரும் "கரும்! ஏதோ பிழைத்துப்போகட்டும்" என்று கருதி "நீ இப்போதுவேலை பழகலாம் உன் வேலையைப்பார்த்தே நிரந்தர மாக்குவேன்" என்று பகர்ந்தார்.

அன்னையிடம் வந்து, நடந்தவைகளை நவின்றான் கண்ணன். அவள் கண்ணில் நீர் துளிர்த்தது. "என் தம்பி நீ கால் ஊனத்துடன் வேலை செய்து கஷ்டப்பட வேண்டும்" என்று பெருமூச்செறிந்தாள். "எத்தனை நாளைக்கம்மா இப்படி வீட்டோடு கிடப்பது? என்னால் வேலை செய்ய முடியும்," என்றான் கண்ணன்.

ஃ

"ஐயா! நீங்கள் நேற்றுத் தந்த சம்பளத்தில் பத்து ரூபாய்க்குப் பதில் பதினைந்து ரூபாய் இருந்தது. தவறுதலாக வைத்து விட்டீர்களாக்கும். இதோ எற்றுக் கொள்ளுங்கள்" கண்ணன் தன் முதலாளியிடம் கூறினான்.

"தம்பி! நான் உன்னைச் சோதிப்பதற்காகவே அப்படிச் செய்தேன். வேலையில் நீ காட்டும் சுறுசுறுப்பு என்னை மிகவும் கவர்ந்தது. பம்பரமாய்ச் சுழன்று பாடுபட்டு வேலை செய்யும் உன் மனம் நேர்மையுடையதா என்று பார்ப்பதற்கே அப்படிச் செய்தேன். அது பளிங்கு போல் களங்கமற்றது என்று அறிந்து மகிழ்கிறேன். கடமையில் தவறாத கண்ணியம் மிக்க உன்னை நிரந்தர பதவியிலிருத்துகிறேன். இன்று முதல் உன் சம்பளம் ஐம்பது ரூபாய்," என்றார் அந்தக் கனவான்.

சின்ன வயதில்...(14)

ஒவ்வொரு கோடையிலும் அம்மை என்னும் கொடிய நோயால் ஆயிரக்கணக்கானோர் மடிந்து கொண்டிருந்த காலம். அழகிய பெண்கள் உறுப்புக்களை இழந்து உடம்பெல்லாம் தழும்பேற்பட்டு தங்கள் அழகை இழந்து வந்த நேரம். இச்சிறுவன் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனாயிருந்தான். இவனுக்கு விடுமுறை நாட்களைக் கிராமங்களில் கழிப்பதில் ஒரே மகிழ்ச்சி.

கிராமப்புறப் பெண்கள் அழகுடன் திகழ்வதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான் இவன். அம்மை நோயைத் தடுக்கும் முறை தெரியாது ஆயிரக்கணக்கானோர் இறக்கும் பொழுது கிராமத்து மக்கள் எழிலுடனும் திடகாத்திரத்துடனும் வாழ்வது எதனாலே? இதை அறிய ஆவல் கொண்டு, அவர்களிடம் "நீங்கள் அம்மைநோயினால் பாதிக்கப்படவில்லையே ஏன்?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் 'ஆமாம்! எங்களுக்கு சாதாரணமான மாட்டம்மை நோய் வருவதனால் நாங்கள் அம்மை நோயினால் பாதிக்கப்படுவதில்லை' என்று கூறினார்கள். இதுபற்றி இவர் அடிக்கடி சிந்தித்து மாட்டம்மை நோய் வரும் உடலுக்கு அம்மை நோயைத் தடுக்கும் ஆற்றல் இருப்பதை உணர்ந்தார்.

அதை 1796-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி ஒரு பையனுக்கு மாட்டம்மைக் கிருமிகளைக் கைகளில் செலுத்தி பரீட்சை செய்து வெற்றி கண்டார்.

அவருடைய சாதுரியமான இச்செயலின் மூலம் தான் இன்று உலகில் பல்லாயிரக் கணக்கானோர் அம்மை நோயினின்றும் பாதுகாக்கப் படுகிறார்கள்.

இவர் யார் தெரியுமா? இவர்தான் —எட்வர்ட் ஜென்னர்.

—'சிந்தனைச் செல்வி' எழாலை மேற்கு.

இது யாது சொல்லுவீர்!

ஆடும் பாடும் உயிரில்லை
அசையுமிடமும் உணவில்லை
நாடு நாடாய்ச் சென்றுவரும்
நம்பு தம்பி கப்பலில்லை
ஏடும் எழுத்தும் நினைப்
போற்றும்
ஏக தேசப் பக்தனில்லை
வீடு குப்பை வீதி எல்லாம்
விளம்பரம் கொண்ட
இது யாது?

விடை 6-ம் கலத்தில்

அன்று வீடு திரும்பியதும் நடந்ததைக் கூறினான் அன்னைக்கு. —அவள் அமைதியடைந்தாள். "மகனே! உன் தொழிலில் மேன்மையடைய நேர்மையைக் கடைப் பிடிப்பாய்" என்று கூறித் தன் உள்ளங்கையை அவன் நெற்றியின் வைத்து, உச்சிவரை தடவினாள். சிறிதான ஏதோ கனிவு.

எனது கிராமம்:

ஆத்தியடி

—மு. வாமதேவன்—

அறிவு நிறைந்த பெரியோர்களும், பண்பு நிறைந்த இளைஞரும் பலரும் வாழும் எனது கிராமத்தின் மத்தியிலே இறைவன் சந்நிதானம் காட்சியளிக்கிறது. இறைவன் அருளால் இளைஞர் உள்ளம் வளருகிறது. இளைஞர் கழகம் இளைஞரின் அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது. எனது கிராமத்தில் இருக்கும் இளைஞர் கழகத்தில் இளைஞர்கள் எல்லோரும் கலைகள் யாவும் பயின்று இடை இடையே போட்டிகள் வைத்தும் தமது திறமைகளையும் எடுத்துக் காட்டுகின்றனர். இளைஞரின் வளர்ச்சிக்கு பெரியோரின் பல உதவியும் கிடைக்கின்றது. இளைஞர் மட்டுமல்லாது எல்லோருமே நல்லறிவு படைத்திருக்க வேண்டும் என்பதே சங்கத்தின் நோக்கம். சங்கத்தின் வளர்ச்சிக்கும் மட்டுமல்லாது எமது தமிழ் இனத்தின் சுதந்திரத்திற்காகவும் என்றும் பாடுபடத் தயாராக இருப்போம் என்பதே எமது இலட்சியம். நம்மிடையே இருக்கும் தீண்டாமை என்னும் சாதிப் பேயை வேரோடு அறுத்து அன்பு என்னும் அறிவைப் பயன்படுத்துவோம்.

சேர்ந்து வாரீர்

—முனியாண்டி—

கொடும் புலிகள் ஆட்சிதனில்
இறைச்சி நாங்கள்
கொல்வதற்கு ஏற்றுட்டுக்
குட்டி நாங்கள்
நடு நடுங்கி நாம் வாழ
விதியோ! இன்றே
நாட்டிலுள்ள தமிழரெலாம்
சேர்ந்து வாரீர்.

புதுமைகள் பாரீர் பாரினிலே - (12)

—அன்ரனி பெர்ஞண்டோ, கிரிலப்பனை —

ஆகாயத்தில் சிறுவர்!

பதினைந்து வயதுப் பள்ளி மாணவன் ஒருவன் ஆகாயத்தில் இருபதாயிரத்து இருநூற்றி ஐம்பது அடி உயரத்திற்கு ஓர் ஆகாய விமானத்தை ஓட்டிச் சென்று உலக சாதனையொன்றை நிலைநாட்டியிருக்கிறான். அம்மாடியோவ்! எவ்வளவு உயரம்! நினைக்கவே பயமாக இருக்கிறது, இல்லையா?

இவ்வளவு உயரத்திற்கு விமானத்தை ஓட்டிச் செல்வதற்கு எவ்வளவு திறமையும் துணிச்சலும் தேவை. அப்படியும், நியூசிலாந்து தேசத்தில், அஞ்சாமல் அசாத்தியத் துணிச்சலோடு இந்தத் தீரச் செயலைச் செய்திருக்கிறான், அன்றூ ஸரப்ட் என்ற அந்தச் சிறுவன்

அன்றூ, சிறுவன் என்றபடியால் விமானம் ஓட்டுவதற்கு அனுமதிப் பத்திரம் பெறமுடியாது. எனவே, அவன் விமானத்தை ஓட்டிச் செல்லும்போது கூட ஓர் ஆலோசகரும் இருந்தார். ஆகாயத்தில் மிக உயரப் பறக்கவேண்டுமாதலால் மேலே சுவாசிப்பதற்குப் பிராணவாயு இல்லாமல் அவர்கள் இறந்துவிட நேரும். எனவே, அவர்கள் பிராணவாயு நிரம்பிய கவசங்களை அணிந்துகொண்டு சென்றனர்.

மேலே 202,50 அடி உயரத்திற்கு விமானத்தை ஓட்டிச்சென்ற அன்றூ சுமார் ஒரு நிமிட நேரம் அந்த மட்டத்தில் பறந்த பின்பு கீழ்நோக்கி இறங்கினான்.

கலிபோர்னியாவில் மில்வாலி என்னும் இடத்தில் டன்னி என்ற பள்ளிரெண்டு வயதுச் சிறுவன் ஒருவன் சற்றும் எதிர்பாராத விதமாக ஆகாயத்தில் சுமார் மூவாயிரம் அடி உயரத்திற்குச் சென்று திரும்பினான்.

ஆகாயவிமானத்திலோ அல்லது ஒரு ரொக்கட்டிலோ அவன் சென்றுவரவில்லை. அவனுடைய அப்பா ஒரு பலூனில் மேலே கிளம்பும்போது அவன் கீழே இருந்து அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது, பலூனைச் சுற்றியிருந்த கயிறொன்றில் அவன் கெக்கிக்கொண்டான். அவனையும் தூக்கிக்கொண்டு பலூன் மூவாயிரம் அடி உயரத்திற்குச் சென்றுவிட்டது! அவன் இப்படியான பயங்கரமான நிலையில் ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு அபயக்குரல் எழுப்பினான். அவன் குரல் கேட்ட பின்பே அவன் தந்தை இதை அறிந்து மெதுவாக பலூனைக் கீழே இறக்கி அவனைக் காப்பாற்றினார்.

பள்ளிகள்தோறும் நடமாடும் கலைக்காட்சி

நியூயோர்க் பகுதியிலுள்ள பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்குக் கலைக்கூடங்களாக விளங்கி வருகின்றன. 'நடமாடும் கலை' என்று அழைக்கப்படும் ஊர் சுற்றும் கலைக்காட்சிப் பணி ஒன்றின் மூலம் இளம் மாணவ, மாணவியர், இந்தியக் குழந்தைகள் தீட்டிய ஓவியங்கள் முதல் பிரபல டச்சு ஓவியர் ரெம்ப்ராண்ட் வரைந்த சித்திரங்கள் வரை உலகத்திலுள்ள கலைகள், கைவண்ணப் பொருட்கள் பலவற்றைக் காண முடிகிறது.

நடமாடும் கலைக்கூடப் பட்டியலில் 77 கலைப் பொருட்கள் இருக்கின்றன. இவற்றில் மிகவும் பிரபலமானவை பிற நாட்டுக் குழந்தைகள் தீட்டிய ஓவியங்களும், படைத்த கைவினைப் பொருட்களுமே. அண்மையில் 30 இந்தியக் குழந்தைகள் வரைந்த சித்திரங்கள் இக்காட்சிக் கூடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 1962ல் 'சங்கரி'ன் சர்வதேசக் குழந்தைகள் கலைக் கண்காட்சியில் பரிசு பெற்றவையே இவை. குழந்தைகளின் இக்கலைப் படைப்புக்களை இந்தியாவில் பார்த்து ரசித்த அமெரிக்கப் பள்ளிக்கூட முதல்வர் ஒருவர் இப்படைப்புக்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கும் யோசனையை முதன்முதலில் தெரிவித்தார்.

உங்கள் சிந்தனைக்கு

சிக்கனம் நல்லது. அத்துடன் கொடையும் இணைக்கப்பட்டால்.

அனாவசியமான செலவுகளைச் செய்யாமலிருப்பதே சிக்கனம். அதனால் மிஞ்சும் பணத்தைப் பிறர் நலமுற வழங்குவதே கொடை.

கொடை இல்லாத சிக்கனம்: பேராசை. சிக்கனம் இல்லாத கொடை: ஊதாரித்தனம்.

—பென்

ஒரு பொய்யைச் சொல்லி எக்கச்சக்கமான நெருக்கடியிலிருந்து தப்புவது எளிது. ஆயினும், பொய்யை விடுத்து, உண்மையைச் சொல்லி, நெருக்கடியின் அகப்பட்டுக் கொள்வதிலுள்ள ஆனந்தத்தின் அழகே தனி.

—மாண்டேகு

விடை: மேல்படம்.
அனுப்பியவர்:
—கலியுகன்,
செங்கலடி.

களங்கமில்லா வானகத்தில் கார் அரக்கன்!

—கல்முனை தோ. மணிவாசகன்—

களங்கமில்லா வானகத்தில்
கால்களில்லா ஜீவனொன்று
குழவியெனத் தவழுதம்மா—அந்த
காட்சியினைப் பாரம்மா!

வட்ட எழில் வதனம்.....
கட்டித் தங்க நிறம்.....
அடடா! எட்டிச் செல்லுதம்மா!—அந்த
அழகை வந்து பாரம்மா!

அழுத மழை பெய்கிறதே
குழுத மலர் மலர்கிறதே
பூமகளைப் பாரம்மா—கவின்
பூத்துக் குலுங்குகிறாள்!

அம்மம்மா! என்னே கொடுமையிது!
அதோ! எங்கிருந்தோ முகில் வருகிறதே!
அம்மா! விடைதந்தெனை யனுப்பு;—கார்;
அரக்கனை நான் ஒழித்து வர!

சுதந்திரமா யாடி வரும்
சுந்தர மதியவளுக்(கு)
[illegible]—முகிலே!
[illegible] போ!! போ!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பார்கள்: பொறுமையை இழந்த தொழிலாளர்கள் 'படார்', 'படார்' என்று ததவிலே தட்டிச் சத்தம் செய்தார்கள்.

★

'யாரது?—கதவிலே தட்டிச் சத்தம் செய்வது' என்ற ஆணவப் பேச்சுடனும் கம்பீர நடையுடனும் புதுமுகம் ஒன்று வெளியே தலையை நீட்டியது.

'வணக்கம்' என்று கை எடுத்து வணங்கிய குமாரின் பரந்த மனப்பான்மையைத் தான் புரிந்தாரோ, புரியவில்லையோ, தெரியாது?—அல்லது எளிய சாதிகளுக்கெல்லாம் ஏன் தாம் பதில் வணக்கம் செலுத்த வேண்டுமென்று எண்ணினாரோ, தெரியாது?. மிகவும் அசட்டைத்தனமாக ஏதோ தர்க்கத்திற்கு ஆயத்தமானார், தம்பையாவின் மகன் நூரை.

'சி, சீ... நீங்கள் ஏன் எல்லோரும் கழுதைபோல் கத்கிறீர்கள்?'

'ஐயா, நாங்கள் கத்துகிறதற்குக் கழுதையுமல்ல, நீங்கள் எங்களை உபயோகிப்பதற்கு வண்ணானுமல்ல. நாங்கள் தொழில் செய்தோம். நீங்கள் கூலியை நேர்மையாகத் தருவீர்கள் என்றால் இந்த நிலைக்கே இடமில்லை. நாங்கள் இந்த இடத்தை விட்டு விட்டு' எப்பவே சென்றிருப்போம்.

'சட் அப், கூலிக்குத்திக் கேச்சாதிப் பயல்களுக்கெல்லாம் வாய் அதிகம். எங்களை என்னடா கழுதை என்று சொன்னாய்?'

'சட் அப்' என்று உங்களை நான் கூறவிரும்பவில்லை. நாய் கடித்தால் அதை நாம் கடிப்பதில்லை. ஆனால் உங்களின் வார்த்தைக்கு அடங்கி வாலை அடைக்கும் தன்மையையும் எம்மிடமிருந்து எதிர்பார்த்து விடாதீர்கள்! நாங்கள் கூலிக்காரர்களாக இருக்கலாம், ஆனால் நாங்களும் மனிதர்கள்தான்! எங்களின் நலன் என்னவென்று எங்களுக்கு நல்லாகத் தெரியும். எமது நலன் கருதிப் பேசுவதற்கும் நடைபோட நீங்கள் யாரென்று தான் கேட்கிறேன். நீங்கள் பொத்தென்னப் பொத்தி, திறவென்னத் திறக்க, நாங்கள் உங்கள் முதுகில் குதிரை கட்டி வாழவில்லை.'

'என்னடா கொஞ்சம் தத்துவம் கலந்து கதைக்கிறமாதிரிக் கதைக்கிறியே, கொஞ்சம் படித்துவிட்டாய் என்ற எண்ணமோ?'

'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' உங்களைப்போல் 'தொழிலாளர்களே! என்று மேடையில் முழக்கி, உரிமைக்குவாதாடி, பெரிய பெரிய வியாபாரப்பட்டங்கள் செய்து, சிறு கூலிவேலை செய்யும் எம்மை அடக்கத்தெரியாது. 'மாருக்கடி உபதேசம் உனக்கல்லடி, என் கண்ணே' என்று வாய்மொழியில் வந்த தத்துவம்தான் உங்கள் செயல்களுக்குப் பொருத்தமானது. உங்களை எல்லாம் நினைத்துப் பார்த்தால் எனக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

'உங்களைப் போல் தொழிற் சங்க இயக்கங்களைப் பற்றியும், அதன் தலைமைப் பதவியில் ஏறுவது, இருப்பது எப்படி என்று கற்காவிடினும் —தொழிலாளர்களின் நலன் கருதி எங்களுக்குள் வேண்டிய ஒற்றுமையின் இன்றியமையாத தன்மையை நன்றாக உணர்ந்திருக்கிறேன். அதன் பொருட்டு எனது கடைசி இரத்தத்துளி என் வரம் பற்றிய நாம்பில் ஓடும்வரை, பாடுபடவும் தெரியும். உங்களைப்போன்ற பச்சோந்திகள், புல்லுருவிகள் எம்மையெல்லாம் ஏமாற்றவிடவும் மாட்டேன்.'

'தம்பி, இவங்களோடையெல்லாம் உனக்கென்ன கதை? நீ இங்காலே வா, நானே எல்லாம் தீர்த்து விடுகிறேன்.' என்றார் தம்பையர்.

'இல்லை அப்பா, பொடியன் பெரியாள் மாதிரித் தம்பட்டம் அடிக்கிறான்.'

'இல்லைத் தம்பி, குரைக்குடங்கள் தளம்புந்தானே! நீயெல்லாம் நிறை குடம். உவங்களோடை என்ன கதை!'

'ஐயா, நிறை குடமும் குறை குடமும்—அதன் போக்கும் பற்றிக் கதைத்துப் பொழுது போக்க நான் இங்கே வரவில்லை, எங்களுடைய சம்பளத்தைத் தந்தால் நாம், எப்பொழுதோ வீட்டிற்குச் சென்றிருப்போம்.'

'ஏன் சம்பளம் கொடுக்காவிட்டால்...?'

'நாங்கள் சம்பளத்தை இழப்போம், நீங்கள் எங்களால் செய்யப்பட்ட வேலையின் பலனை இழப்பீர்கள்.!

இதன் அர்த்தம் விளங்காமல் தம்பையாவும் மகனும் திகைத்துத்தான் இருந்தார்கள். எனினும், அவர்கள் உள்ளத்தில் இந்தக் கூலிப் பட்டாளங்கள் என்னதான் செய்யும் என்ற எண்ணம் தலைவிரித்தாடியது. அதிலும் குமாரியின் போக்கைச் சிறிது அடக்க வேண்டுமென்ற எண்ணம் இருவர் உள்ளத்தையும் அரித்துக் கொண்டிருந்தது.

'போங்கடா, போங்கள், சம்பளம் தரமுடியாது நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள். உங்கள் கொட்டத்தைதான் பார்த்துக் கொள்வோம்.'

'எங்களின் சம்பளத்தைத் தராமல் எங்கள் குடும்பங்களையும்; பால் மணம் மாறாத பச்சைக் குழந்தைகளையும் பட்டினி கிடத்தலாமே யொழிய, எங்களின் ஆத்மபலமோ கிளர்ந்து எழும்பக் கூடிய உணர்ச்சியையோ அசைக்க முடியாது என்பதையும் உங்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். பட்டினி பசிக்குப் பயந்து எங்கள் இலட்சியத் தலைக்கைவிட மாட்டோம்.!'

'அதென்னடா இலட்சியம் பேசுகிறாய்' என்று அலட்சியப் போக்கில் கேட்டார் துரை.

'அதுவா...? விளங்காவிடில் விளங்க வைப்பது எமது கடமைதான். கூலிப் பட்டாளங்கள் என்று எம்மையெல்லாம் ஏமாற்றுவதை எம்மால் அதிக காலம் பொறுத்திருக்க முடியாது. ஏமாற்றுபவர்களையும், ஏமாற்ற நினைப்பவர்களையும் ஏமாற்றி; தகுந்த ஏமாற்றத்தையும் அவர்களுக்குக் கொடுக்காமல்விட எம் மனம் இடங்கொடாது.'

'தம்பி, குரைக்கிற நாய்கள் கடிக்காது'—இதுக்கோடை என் கதை, நீ இங்காலேயே வா!; இவங்களோடை கதைத்தால் எங்களுடையமட்டு மரியாதைகள் என்னாம் மறைந்து போய்விடும்.'

'அப்படியா...? அதனையும் ஒருக்கால் பார்த்துத்தான், நான் போக வேண்டும்!'

'தென்னவன் வகையில் பிடித்த வால்' என்பது போல் குமாரின் கையில் பிடித்த சாடுவெட்டுக் கத்தி. அடைத்த வெடிமுரு வெட்டிக் கீறோடு விட்டது. கையிலிருந்த கத்தி நிலத்தின் வெட்டின் வீச்சுக்குப் பயந்து அங்கே நின்ற ஒருவரும் அவனை அணுகவிரும்பவில்லை.

குமாரும் கூட்டாளிகளும் விரு திரும்பினர்!

வேலைக்காரர் சோலி வேண்டாமென்றிருந்தனர்!!

(மேலும் கருவனை)

கழகச் செய்திகள்

தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் வேண்டுகோள்

கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் கடந்த வருடம் யாழ் நூல் தந்த வித்தகன் அருட்டிரு விபுலாநந்த அடிகளாருக்கு விழா எடுத்தது. 'ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பினையும் அடிகளாருக்குச் சமர்ப்பணம் செய்தார். அடிகளாரின் உருவச்சிலை ஒன்றினைக் கொழும்பு மாநகரிலே நிறுவுவதற்கான பொறுப்பினையும் மேற்கொண்டது. மாதிரி உருவச்சிலை ஒன்றினையும் தயாரித்து அந்த விழாவின் போது திரைநீக்கம் செய்து வைத்தது.

அடிகளாரின் முழு உருவச் சிலையின் செலவும் பகுதி முடிவு பெற்றுள்ளது. மிகுதியினை 'நவசிற்பியன்' புல்லுமலை நல்லரத்தினம் உருவாக்கி வருகிறார். சிலையினை உருவாக்கும்பணிக்கு ஆலோசகர்களாகப் பண்டிதர் கா. பொ. இரத்தினம், மெய்கண்டான் அதிபர் திரு. இரத்தினசபாபதி, வித்துவான் இ. சி. சோதிநாதன், சுவாமி நடராஜானந்தர், இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு கே. எஸ். நடராஜா, பண்டிதர் க. சச்சிதானந்தம், திரு. எஸ். வேலாயுதபிள்ளை, பரீட்சைப் பகுதி உதவியதிகாரி திரு. வி சதாசிவம், திரு. கி இலக்குமணன், கொழும்பு நூல் நிலையத் துணை அதிபர் திருமதி குலரத்தினம் ஆகியோர் பணியாற்றுகின்றனர்

பண்டிதர் கா. பொ. இரத்தினம், மெய்கண்டான் அதிபர் திரு இரத்தினசபாபதி, வித்துவான் இ. சி. சோதிநாதன் ஆகியோர் நிதிக் குழுப் பொறுப்பாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.

சிலையினை உருவாக்குதற்கான செலவினை அடிகளாரின் மாணாக்கர்களிடமிருந்தும், தமிழுப் பேரறிஞர்களிடமிருந்தும், தமிழ் பேசும் பொது மக்களிடமிருந்தும் மன்றம் நன்கொடையாகப் பெற்று வருகிறது.

இம் முயற்சி வெற்றி பெற, பொருள் உதவி செய்ய விரும்புவோர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், 58 உருத்திரா வீதி, கொழும்பு—6 என்ற முகவரிக்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி உதவும் வண்ணம் மன்றம் பொது மக்களை வேண்டிக்கொள்கிறது.

மீரியபத்தை இளைஞர் முன்னேற்ற மன்றம்

மீரியபத்தை இளைஞர் முன்னேற்ற மன்ற நடப்பு வருட நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் முகமாக அண்மையில் மன்ற காப்பாளரும், இராப் பாடசாலை ஆசிரியருமான திரு. ச. ஜெகநாதன் அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது. கூட்ட ஆரம்பத்தில் மறைந்த தலைவர் நேருஜிக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக இரண்டு நிமிடநேரம் மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்: திரு. ஆ. பொன்னம்பலம், தலைவர்: திரு. அ. தங்கவேலு, செயலாளர்: திரு. க. செல்லையா, துணைச் செயலாளர்: திரு. பெ. பழனியாண்டி, பொருளாளர்: திரு. க. இராசு.

'முகிலன்' மறைவு

ஒருவர் ஓரிரு துறைகளில் மட்டும் சிறப்புற்று திகழ்வதை நாம் கண்டு வருகின்றோம். ஆனால் இளங் கவியர் "முகிலன்" அவர்களோ கல்லூரிக் கல்வி முதல் முத்தமிழ் வரை முதல்வராகத் திகழ்வந்தார். இன்றைய ஈழத் தமிழர்களின் நிலையில் இவர் மறைவு ஈடினையற்ற பேரிழப்பாகும். இவரின் பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கும், இலக்கிய நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள்.'

கொழும்பு யாழ். கலை அரங்க அவசரக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காரைநகர் கிழக்கு இந்து வாலிபர் சங்க உத்தியோகத்தர் தெரிவு

காரைநகர் கிழக்கு இந்து வாலிபர் சங்க உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

காப்பாளர்: சேர். கந்தையா வைத்திய நாதன் பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. சி. பி. அரன், திரு. மு. சிவசிதம்பரம் பா. உ., திருமதி தங்கம்மா நடராசா; தலைவர்: திரு. வை. இராமலிங்கம்; துணைத் தலைவர்: திரு. பொ. சிவசுப்பிரமணியம், திரு. க. கந்தையா, திரு. ஐ. இ. சம்பந்தன்; செயலாளர்: திரு. ச. நித்தியானந்தன், திரு. ச. உருத்திரசிங்கம்; பொருளாளர்: திரு. க. வி. குலரத்தினம், கா. சுப்பிரமணியம்.

உடுப்பிட்டி தமிழ் மன்ற ஆண்டுக் கூட்டம்

உடுப்பிட்டித் தமிழ்மன்றத்தின் ஓராண்டு நிறைவுக் கூட்டம்செல்வன் சி. நிலமை நடராஜா தலைமையில்நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

செப்டம்பரில் பாரதி விழாவை விரிவான முறையில் நடாத்துவது; பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டிகளை நடாத்துவது.

இ. த. க. உடுப்பிட்டிக் கிளை நடாத்திய கலைப் போட்டிகளில் தமிழ்மன்ற சார்பில பங்குபற்றி பரிசில்கள் பெற்ற, சுதந்திரன், த. வசந்தகுமார், க. நீலகண்டன், ஜே. ஜெயக்குமார், வி. யோகராஜா, கமலாம்பிகை, எஸ். இந்திராணி ஆகியோருக்குப் பாராட்டுரை பகர்வதுடன் தமிழையும், கலையையும் வளர்க்கும் பணியில் கலைப்போட்டியை நடாத்திய த. க. உடுப்பிட்டிக் கிளைக்குத் தமிழ்மன்றம் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

கீழ்க்காண்போர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. அ. எம் பெருமாள், தலைவர்: சி. நிலமைநடராஜா, உபதலைவர்: இ. முத்துரத்தினராஜன், பொதுக்காரியதரிசி: ஜே. ஜெயக்குமார், உப-பொதுக் காரியதரிசி: பூ. உமா மகேஸ்வரன்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்:- ப. சிவபாலதாஸ், தி. செல்வரத்தினம், க. பரஞ்சோதி (கனிஞர் இமயவரம்பன்), சி. நாகேந்திரன், மு. சிவகுப்பிரமணியம், மா. நித்தியானந்த சிவம், செ. தவராசா, வே. மகாலிங்கம், ஜே. உதயகுமார்.

நிர்வாகசபை உறுப்பினர்: திருவாளர்கள்: வே. நடராசா, கா. அம்பிகைபாகன், ச. மகாதேவன், க. அமுதசிங்கம், க. சபாரத்தினம், பொ. திருவாதிரை, க. நடராசா, வி. தியாகராசா, கா. தர்மபாலன், ஆ. தர்மலிங்கம், வெ. பரமசிவன்.

இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 18 பொயிண்ட் ரோமன், 18 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ, ஸ்ட்ராஸ்நாயக்க வீதி,

கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது 4வது வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதாகே)

ரொக்ஸி (வெள்ளவத்தை)

மற்றும் 6 திரைகளில்!

எம். ஜி. ராமச்சந்திரன்

தேவிகா-வீரப்பா

அசோகன்-ராதா

சகஸ்ரநாமம்

கமலஹாசன்

மற்றும் பலர் நடித்த

ஹரிஹரன் பிக்சர்ஸ்

ஆனந்த ஜோதி

ஓகஸ்ட் 14ம் திகதி முதல்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

மற்றும் 6 திரைகளில்!

அசோகன்—சந்திரகாந்தா—பாலையா—கண்ணம்பா—நாகேஷ் நடித்த



இது சத்தியம்

2வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா (கொழும்பு) (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு)

சபையர் (வெள்ளவத்தை) வெலிங்டன் வின்ஸர் (யாழ்ப்பாணம்)

ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீதரின்

காதலிக்க நேரமில்லை

(ஈஸ்ட்மன் கலர்)

இசை! விஸ்வநாதன்-ராமமூர்த்தி

பாடல்கள்! கண்ணதாசன்

பின்னணி! ஜேசுதாஸ், ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன், சுசீலா, எஸ்வரி

டைரக்ஷன்: ஸ்ரீதர்

இராமனும் இலக்குமணனும் ஒரே தாயின் பிள்ளைகளல்லர்.
ஆனால் அவர்களின் சகோதர பாசம்.....!

பாசத்தின் தத்துவத்தை விளக்கும் உயர்ந்த திரை ஓவியமாக மிளிர்கிறது—

சிவாஜி கணேசன் அளிக்கும்

படித்தால் மட்டும் போதுமா

நடிகர்கள்:
சிவாஜி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா, பாலாஜி, சகஸ்ரநாமம், ரங்கராவ், ராஜசுலோசனா, மனோரமா

பாடல்கள்: கண்ணதாசன்—இசை: விசுவநாதன்-ராமமூர்த்தி—டைரக்ஷன்: பீம்சிங்

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)

நியூஜோதி (இரத்தினபுரி) லிபர்ட்டி (பதுளை) சுரையா (ராகலை) சென்ட்ரல் (பருத்தித்துறை) ஆனந்தா (கம்பளை)

ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.